
## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | அதிசய ராகம்... |
| ஆசிரியர் | : | காஞ்சனா ஜெயதிலகர் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | டிசம்பர், 2004 |
| தாளின் தன்மை | : | 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | 192 |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| வெளியிடுவோர் | : | அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>தொலைபேசி: 28132791 |
| கணிப்பொறி அச்சு | : | வேலன் லேசர்<br>சென்னை-18. ✆94441-01753 |
| அச்சிட்டோர் | : | ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |

**விலை:** $16.950





# அதிசய ராகம்...

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | அதிசய ராகம்... |
| ஆசிரியர் | : | காஞ்சனா ஜெயதிலகர் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | டிசம்பர், 2004 |
| தாளின் தன்மை | : | 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | 192 |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| வெளியிடுவோர் | : | அருணோதயம்<br>5/3, கொடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>தொலைபேசி: 28132791 |
| கணிப்பொறி அச்சு | : | வேலன் லேசர்<br>சென்னை-18. ✆94441-01753 |
| அச்சிட்டோர் | : | ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |

**விலை:** $16.950

# அதிசய ராகம்...

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | அதிசய ராகம்... | 5 |
| 2. | கடல் விரல்கள் | 105 |


# அதிசய ராகம்...



1

''யம்மா நேர்த்தி, இந்தத் துணியை எல்லாம் ஒரு மூட்டையாய்க் கட்டு.''

''ஏண்டி, இந்தக் கடிகாரம் பழசாய்த் தெரிஞ்சாலும் கணக்காய் ஓடுதே... அதுவும் பாட்டரி இல்லாம? இதை எப்படி இயக்கறது - காட்டேன்?''

''இந்தப் பழைய ரசீது, கடிதாசியை எல்லாம் எரிச்சிடும்மா, நேர்த்தி - இந்தக் காலி டிரங்கையும் துடைச்சு வெளியே காய விடு.''

உத்தரவிட்டவர்களுக்கு ஓடி ஓடிச் செய்தாள் -

மூன்றாம் நாள் எடுத்ததற்கெல்லாம் இவளைத் தேடி அழைப்பது ஏறக்குறைய நின்றே போனது -

இனி இந்த வீட்டார் கூப்பிட்டு,

'இனிமேல் இந்த வீட்டைக் காலி பண்ண, ஒழிக்க வேண்டியது உன்னைத்தான்டி பெண்ணே - மூட்டையைக் கட்டு,' என்பதற்கு முன் கிளம்ப வேணும்.

'எங்கே போவது?' என்ற கேள்வி தன்னைக் குடையாதபடி இதுவரை காத்துக் கொண்டாலும், அடுத்துச் சந்திக்க வேண்டியது அந்தக் கேள்வியைத்தான்.

மூன்று வருடங்கள் ஞானாம்பாள் பாட்டியுடன் கழிந்திருந்தன - மூட்டு வலி, வாதத்தினால் அதிகம் நடமாட முடியாத ஞானாம்பாள் தன்னைப் பராமரிக்க

ஓரளவு மருத்துவப் பரிச்சயமும், பொறுமையுமுள்ள ஒரு உதவியாளரைத் தேடி, இவர்களது இல்லத்திற்கு அந்த வேண்டுகோளுடன் வர, அப்போதான் தாதிக்கான ஒரு வருடப் படிப்பை முடித்திருந்த நேர்த்தி, நேரே இங்கு அனுப்பப் பட்டாள்.

'பெரியம்மா' என்றே வந்த சில மாதங்கள் அழைத்த வளை, "சும்மா என்னைப் பாட்டின்னே கூப்பிடு. என்னை அப்படி உறவு கொண்டாட யார் வர்றா...? உனக்குத் தான் யாரு?" என்ற ஞானாம்பாளின் அனுமதியில் 'பாட்டி' என்றே அன்புடன் அழைத்து அனுசரணை யுடனே மூன்று வருடங்களைக் கழித்திருந்தாள் -

இனி 'அடுத்து ஒரு வேலையைத் தேடித் தாருங்கள்' என்று தான் வளர்ந்த அந்த அனாதை இல்லத்திற்கே போய்க் கேட்கலாம்தான்... ஆனால் அங்கிருப்பது புதுப் பொறுப்பாளர் என்று கேள்வி - தவிர அங்கே வேலை காய்க்கும் மரம் ஏதும் பழுத்தும் நிற்கவில்லை!

பாட்டி இறந்ததிலிருந்து தினம் செய்தித்தாளை வாங்கி வேலைக்கான விளம்பரங்களை அலசித்தான் வருகிறாள் - இதுவரை ஒன்றும் தோதாய்ப் படவில்லை.

இங்கிருந்து கிளம்பியதும் ஒரு வாரம்வரை 'இல் லத்'தில் இருக்கலாம்தான்... ஐம்பது பிள்ளைகளுடன் அயல்நாட்டிலிருந்து வரும் அளவான பணம், உள்ளூரின் அவ்வப்போதான நன்கொடைகளுடன் நொண்டியபடி நடக்கும் 'சிநேக இல்ல'த்திற்கு அது கூடுதல் பாரம். ஆனால் ஒரு இளம் பெண்ணிற்குப் பாதுகாப்பான இடம் வேறெங்கும் கிடைப்பது அரிது. தவிர இதுவரை சேமித்து வைத்த சிறு தொகையில் சிறிதை அவர் களுக்குத் தந்து விட்டால், தனக்கும் உறுத்தாது.

வாழ்வை இதுவரை கிடைத்தபடி ஏற்று அனுபவித்த 21 வயதுப் பெண் அவள் - பின்னால், முன்னால் பார்த்து



மருகும் பழக்கம் அற்றவள் முதன் முறையாய் வாழ்க் கையைத் திட்டமிட்டு எதிர் நோக்கும் சூழல்...

நினைவு தெரிந்த நாளாய் அனாதை விடுதியில் வளர்ந்தவள், தனக்குப் பெற்றவர்கள், உற்றவர்கள் பாசம் இல்லையே என்ற பரிதவிப்பிற்கும் தன்னைப் பலியிட்ட தில்லை.

'ச்சே.. நேர்த்திக்கு என்னா நீளத் தலைமுடி.. பிடிச்சுப் பார்த்தால் தடியாட்டம் கனக்குது...' என்ற பாராட்டில், கனகு டீச்சர் கற்றுத் தரும் கணக்கு, வகுப்பில் பிறருக்குப் புரியாவிடினும், தன் தலையில் புகுந்து விடும் போது -

'பொறுப்பானவள்', 'சூட்டிகை' என்ற பட்டங்களின் போது நினைத்ததுண்டு. தன் தாய்க்கு நீளமும் அடர்த்தியு மான கூந்தல் இருந்திருக்குமோ?

அப்பாவுக்குக் கணக்கு சாமர்த்தியம் இருந்தது போலும் - என்று.

அழகும், அறிவுமான பெற்றவர்கள்... தன்னை ஏன் அத்தனை விரைவில் விட்டுவிட்டு இறந்து போனார்கள்?

மரணத்திற்கு அத்தகு பாகுபாடெல்லாம் கிடையாது என்பதைக் காலப் போக்கில் புரிந்து சமாதானப்பட்டு விட்டாள். ஒரு விபத்தில் பெற்றவர்கள் காலமாக, தந்தை வழிப் பாட்டி சில வருடங்கள் சிறு பேத்தியைப் பேணி வளர்த்துப் பின் முடியாமல் விடுதியில் வந்து சேர்த்து விட்டதாய்ப் பழைய பொறுப்பாளர் தகவல் சொல்லி யிருந்தார்.

வேனில் விடுமுறை, பண்டிகை சமயம் இவள் பாட்டி யுடன் சேர்ந்திருந்ததுண்டு. வறுமையும் நோயுமாய்ப் போராடிய பாட்டியும் இறந்த பின், பிற உறவுகளும் யாரும் இவளைத் தேடி வராததில் முழு அனாதை யானாள்.

அவ்வப்போது பழம் நினைவுகளை அவள் உருட்டிப் பந்தாடினாலும் அவை தன்னைத் தாக்கிக் காயப்படுத்துமளவு அவள் விட்டதில்லை.

'இங்குள்ள எல்லாக் குட்டிகளும் உன்னைப் போலத் தெளிவாய் இருந்துட்டால் பிரச்சனையே இல்லை, நேர்த்தி!' என்று வார்டன் ஐயா பெருமையாய்ப் பெருமூச் செறிவார்.

கடவுள் நம்பிக்கை அந்த இல்லம் அவளுக்குத் தந்திருந்த பெரிய பலம்.

ஒவ்வொருவருக்கும் விதிக்கப்பட்டது அவரவர்க்கு உண்டு. நல்லதையே எண்ணி, அதன்படி வாழ்வோருக்குத் தெய்வ அனுக்கிரகம் பெரிய துணை என்ற நம்பிக்கை - ஆக, அன்றன்றுள்ள கடமைகளைச் செவ்வனே செய்தால் போதும் என்ற நிர்மல உறுதி.

ஆனால் தற்சமயம் அந்த உறுதி சற்றுத் தளரும் அளவிலான சூழ்நிலை!

இதுவரை ஞானாம்பாளை எட்டியும் பாராத உறவுகள் எல்லாம் அவர் விட்டுச் சென்ற ஓட்டு வீட்டிற்காகவும் அதன் சொற்ப பொருட்களுக்காகவும் தொண்டை வரளக் கூச்சலிட ஆரம்பிக்கவும், இவள் பெட்டியோடு கிளம்பி விட்டாள் -

உறவென்பது இதற்குத்தான் என்றால், அனாதையாய்ப் போனதில் வருத்தம் எதற்கு என்ற புதுத் தெம்புடன்!

போக இருந்த ஒரே இடம் 'சிநேக இல்லம்'தான். அங்கிருந்த புதுப் பொறுப்பாளரிடம் தன்னை அறிமுகப் படுத்திய பின், சில நாட்கள் அங்கு தங்க அனுமதியும் பெற்றுக் கொண்டாள்.

அனுமதி மிக ஆனந்தத்துடன் அளிக்கப்பட்டதானாலும் அவள் அது குறித்து ஆனந்தப்பட முடியாத நிலை!



சமையல்காரக் கோமதி அக்காளிற்கு இவளைக் கண்டதும் உற்சாகம் பீறிட்டது.

"அடடே... வாடிம்மா நேர்த்தி... சௌக்கியந்தானே?"

"ஆமக்கா."

"அதான் தெரியுதே. வற்றலாட்டம் போனே... இப்ப சதை பிடிச்சு வள்ளிக் கிழங்காட்டம் நல்லாத்தான் இருக்கே..."

நேர்த்தியைப் பேரழகி என முடியா விட்டாலும், அவளிடம் தனிப் பொலிவு இருந்தது. பல பெண்களிடையே தனித்துத் தெரியுமளவிலான உயரம், தனிக் கம்பீரம் தர, அவளது நீண்ட கூந்தல் நளினமும் சேர்க்க, தன்னம்பிக் கையுடன் தண்மையான பேச்சும் பழகும் விதமும் அவளை எல்லார் கண்களுக்கும் ரம்யமானவளாகவே காட்டின.

இப்போது உயரத்திற்கேற்ற உருவ அமைப்பும், அலைச்சல் இல்லாததால் அமைந்த சருமப் பொலிவுமாய் அவளை மேலும் மெருகேற்றியிருந்தன.

"நீங்க எப்படி யிருக்கீங்க கோமதிக்கா?"

கோமதிக்கு மொத்த முடியும் நரைத்து, சொற்ப பற்களே எஞ்சியிருந்தாலும், தன்னை விடுதிப் பிள்ளைகள் 'அக்கா' என்றே விளிக்க வேண்டுமென்ற கெடுபிடி!

"ஏதோ இருக்கோம் போ... காலம், உலகம் போகப் போக மோசமாத்தானே ஆவுது..."

"என்ன மோசம்?"

சமையல் கட்டின் மெழுகிய மேடையில் அமர்ந்து வறண்ட தோசையை எள்ளுத் துவையலுடன் இணைத்து வாயிலிட்டபடி பேச்சுத் தந்தாள் இளையவள் -

"வார்டனைப் பார்த்துட்டுத்தானே வந்திருப்பே - ஆளு எப்படி?"

"ம்... முன்னேயிருந்த கருணாகரன் சாரைப் போலில்லை..."

"அதைத்தான் சொல்றேன் - சபல புத்தி! வர போற வளுங்ககிட்ட எல்லாம் பல்லைக் காட்டுறது."

சொன்னது பொய்யில்லை - தன்னையும் அவர் பார்வை தாறுமாறாய் மேய்ந்ததே - இவள் இங்கு சில நாட்கள் தங்கப் போவது அறிந்ததும் இளித்த இளிப்பும் விகாரம்...

"இவரு சம்சாரம் பிள்ளைப் பேறுக்குத் தாய் வீடு போயிடுச்சு. தம் புருஷனைப் பத்தித் தெரிஞ்ச பத்தினி தம் தம்பியை இங்க காவலுக்குக் கூட்டியாந்து விட்டிருக்கா - ஆனா நிலைமையோ, ஒரே கம்பத்துல ரெண்டு யானையக் கட்டினாப் போலாச்சு! தம்பிப் பயல் இங்குள்ள பிள்ளைகளையே உத்துப் பார்க்கறான்... தடவுறான்."

"ஐயோ... நீங்க சொல்லலாமேக்கா - இத்தனை வருஷம் இருந்தவங்க நம்ப தலைமை அலுவலகத்திற்கேனும் இது பற்றி ஒரு வார்த்தை தகவல் தெரிவிச்சுடலாமே?"

ஆற்றாமையில் பதறினாள்.

"சொச்ச நாளையும் இங்க, இப்படியே கழிச்சிடலாம்னு நினைக்கேன்... இந்த வம்பெல்லாம் எதுக்கு?"

ஆனால் நேர்த்தியால் அப்படி விட முடியவில்லை. ஆதரவற்ற இக் குழந்தைகள் இது போல ஒரு ஆபத்தை உள்ளேயே சந்திப்பது அவளுக்கு ஆறவில்லை - மேலும் விவரங்களைக் கவனித்து, கணித்துக் கொடைக்கானலில் அமைந்த இல்லத்தின் தலைமை அலுவலகத்திற்கு விவரமாய்க் கடிதம் எழுதி விட்டாள். கூடவே அம்மலை வாசஸ்தலத்தில் தான் வந்து ஓரிரு வாரங்கள் தங்க முடியுமா என்ற விசாரிப்பும்...



பதில் வந்த அந்தச் சில நாட்களுக்குள் பொறுப்பாளரும், அவரது மனைவியின் தம்பியும் தந்த 'அன்பு'த் தொல்லைகள் தாராளம்...!



2

புலி திரியும் காட்டிலிருந்து தப்பி வந்தது போலிருந்தது! இவளது கடிதப் புகார் கிடைத்த தலைமைச் செயலகம் உடனே மேற்பார்வைக்கென இரு முதிய பெண்மணிகளை அனுப்பி வைக்க, இவள் நிம்மதியாகக் கொடைக்கானலுக்குக் கிளம்பினாள் -

எண்பது ஆண்டுகளுக்கு முன் இந்தியக் கோடையின் வெக்கை தாங்காமல் மலைவாச ஸ்தலங்களைத் தேடித் தங்க வந்த ஆங்கிலேயர்கள், பெற்றோர் இல்லாது தவித்த குழந்தைகளின் பராமரிப்பிற்கென்று ஆரம்பித்ததே 'சிநேக இல்லம்' - தொடர்ந்த வருடங்களில் தமிழகம் எங்கும் படர்ந்து பலருக்குப் பயன் தந்தபடி இருந்தது.

நேர்த்தி தன் மாணவப் பருவத்தில் ஒரு முறை அந்தக் குளுமையான ஊருக்குச் சென்றதுண்டு என்றாலும் அதிகம் பயணிக்க வாய்ப்பில்லாத அவளுக்கு மலைப் பாதையின் பசுமையின் ஊடாக ஊர்ந்த அப் பயணம் இன்பமாயிருந்தது.

கடும் உறுமலுடன் மேடேறிய பேருந்து அதிக வேகமெடுக்க முடியாததால் இவள் நிதானமாகவே இயற்கையை ரசித்தாள் - மழைக் காலம் என்பதால் முகட்டில் பொழிந்த மழை சரிவுகளில் எல்லாம் பாலாய் வழிந்து கொண்டிருந்தது. நீரின் மிகையால் காட்டு மரம் கொடிகளில் அசாத்தியச் செழுமை - யூக்கலிப்டஸ், பன்னீர் மலர்களின் கலவை வாசம் -

அத்தனையையும் ஆசையாய் அனுபவித்தாள் -

இங்கேயே ஏதும் வேலை அமைந்தால் தேவலை. இங்குள்ள இல்லத்தில் வேலை காலி இருக்குமா...? சம்பளம் அதிகம் இல்லாவிடினும் இத்தனை குளிர்ச்சியும் மணமுமான காற்றைச் சுவாசித்து வாழ்வதே பெரும் பேறு.

வரிசையாய்ப் பழக்கடைகளுடன் இருந்த ஒரு சிற்றூரைக் கடந்தது பேருந்து.

''என்னாப்பா கண்டெட்டரு, பஸ்ஸை வழக்கமான ஸ்டாப்புல நிறுத்தாமப் போற? நாக்கு வரளுது - ஒரு டீ பன்னு சாப்பிடக் கூடாதா நாங்க?''

பின்னாலிருந்து ஒரு பயணி குரல் கொடுத்தார் -

''அங்கே ஏற்கெனவே ஆறு பஸ்ஸும், நாலைஞ்சு வேனும் நிற்குதுல்ல? வேறு அருமையான இடத்துல நிறுத்தறேன் - இடத்தைப் பார்த்துட்டுப் பிறவு பேசுய்யா...''

உற்சாகமாகவே நடத்துனரிடமிருந்து பதில் வந்தது. சொன்னதிற்கு ஒப்ப, அடுத்த பத்தாம் நிமிடம் பேருந்து செருமி நின்ற அவ் வளைவு மெய்யாகவே அருமையாய் இருந்தது.

சாலையின் இருமருங்கும் கவிழ்ந்த வெள்ளைப் புனல் போன்ற ஊமத்தம் மலர்க்காடு. கீழே எங்கேயோ பாயும் ஓடை இங்கு வரை சிலுசிலுவென்றது. ஆங்காங்கே மேய்ந்த மட்டக் குதிரைகள்.

நடுவே நின்றது அச்சிறு குடில். அதைச் சுற்றிலும் பிரம்பு இருக்கைகள் - குடில் போலிருந்த கடையில் தட்டுத் தட்டாய்ப் பழ ரகங்கள் - ஓரமாய் ஆவியடித்த தேநீர் பாய்லர் -

''அடடே! இது எப்பப்பா முளைச்சுது?''

''ரெண்டு மாசமிருக்கும் - நேர்த்தி பழப் பண்ணையைச் சேர்ந்ததுதான் - பண்ணையில விளையுறதை இங்கே விற்பனைக்கு வைக்கிறாங்க - கூடவே டீக்கடை



வச்சதால, இப்ப நிறுத்தறது இங்கதான் - இடமும் வசதில்ல?''

பெரும்பாலான பயணிகள் ஆவலாய் இறங்க, நேர்த்தியும் இறங்கினாள். தனது பெயரைக் கொண்ட பண்ணை அது என்பதும் ஒரு காரணம் போலும். சுற்றிலும் ஆர்வத்தோடு பார்வையோட்டியவளுக்குக் கடைக்குச் சற்றுப் பின்புறமாய்த் தெரிந்த கனத்த குட்டைக் கல் சுவரும் அதை மிஞ்சி எட்டிப் பார்த்த கனிமரங்களும் தெரிந்தது. கிளைகளிலும் பருமனாய்ப் பழுத்துத் தொங்கிய பலாக்கள் - வெடித்துத் தரையில் கிடந்த ஒரு பழத்தின் தூக்கலான வாடை.... சுவரை ஒட்டி நடக்க, கரும்பச்சை வர்ணத்தில் ஒரு மரவாசல் வந்தது - அதில், வெள்ளை அட்டையில் கறுப்பு எழுத்துக்கள்.

'நேர்த்தி பழப் பண்ணை.'

இது பிரதான வாசலாய் இராது... கடைக்காக ஏற்படுத்தப்பட்ட சிறு வழி... உள்ளே விசாலமான தோப்புதான் -

பலரகக் கனி மரங்களோடு மிளகுக் கொடிகள் பிணைந்து கிடந்த பசுந் தோட்டம்.

ஆங்காங்கே காட்டு மலர்களின் வண்ணம், வாசம்.

ஆழ மூச்சிழுத்து அனுபவித்தாள் -

பெயருக்கேற்ப அத்தனையும் நேர்த்திதான் -

வேறு சில பெண்களும் பின்புறமாய் ஒதுங்கியவர்கள் இவளிடம் - 'ச்சே... ஆம்பிள்ளைகளை மாதிரி நாம தெருவை நாத்த முடியுமா... இப்படித்தான் ஒதுங்க வேண்டியிருக்குது... இத்தனை கடைகளைப் போடறவங்க ஒரு கழிப்பறை கட்டினாத் தேவலை...' அலுத்தனர்.

''ம்ம்..'' மையமாய்த் தலையசைத்தவள் மறுபக்கமாய் நடந்தாள் - மரங்களிடையே பளீரிட்ட அந்த நீலம் இவள் கண்ணை இழுத்தது - எம்பிப் பார்க்க, அது ஒருவனது சட்டை எனப் புரிந்தவளுக்கு நடந்த அந்த மனிதன் பார்வைக்கு மேலும் வாகாய்ச் சிக்கினான் - வெள்ளைக் கோடுகளும் சேர்ந்த டி-ஷர்ட்.. கையிலிருந்த காகிதத்தை வாசித்தவன் அவசரமாயும் ஆத்திரமாயும் அதைக் கிழித்து எறிய, இவளுக்கு அந்தக் குப்பையைப் பொறுக்கி ஒரு குப்பைத் தொட்டியில் இடக் கை பரபரத்தது. ஆனால் இங்கு அதற்கான ஒரு தொட்டியில்லை... தவிர பக்கவாட்டில் தெரிந்த அவன் முகம் அவன் மிகுந்த குழப்பத்தில் இருப்பதைக் காட்டியது.

பாவம்... அந்தக் கடிதத்தில் என்ன சேதி வந்ததோ... மனுஷர் இப்படிக் கலங்கிப் போயிருக்கிறார்.

மறு பக்கம் பெண்களின் பேச்சுக் குரல் கேட்க, இன்னும் பேருந்து கிளம்ப ஐந்து நிமிடமேனும் ஆகும் என்ற தெம்பில் இவள் மறுபடி தோட்டத்தை ஆராய்ந்தாள் - பூட்டப்படாத பச்சைச் சிறுகதவைத் தள்ளிய படி உள்ளே நான்கு அடி கூட எடுத்து வைத்திருக்க வில்லை...

அந்தக் குரல் ஆவலாய் வரவேற்றது!

''அடடே.. வாம்மா வா... சுரேன் நீ வருவேன்னான். நான்கூட முழுசாய் நம்பலை... இத்தனை நேரம் உனக்காக முன்புறம் காத்திருந்தோம்... கோபால் இந்தப் புறம் வாழை நடணும்னான்... அதுவும் நல்லதுக்குத் தான். வீடு திரும்பாமல் இங்கே இருந்ததால்தான்... யாரும்மா சொன்னா, நான் இங்கே இருப்பதாய்?''

அந்த முதிர்ந்த பெண்மணி மூச்சு விடாமல் பேச, நேர்த்தி தடுமாறினாள் -



''இல்லம்மா... நான் சும்மா... இந்தப் பக்கம்...''

''எந்தப் பக்கமாய் வந்தால் என்ன? வர வேண்டிய இடத்துக்கு நீ வந்துட்டே..'' இவள் புறமாய் நகர்ந்த அப் பெண்மணிக்குச் சற்றுத் தளர்ந்த, தாங்கிய நடை. ஆனால் ஆண்டுக் கணக்கில் தேடிய புதையலைக் கண்டு விட்டதான பரவசம் முகத்தில்!

நெருங்கியவர் இவளது இரு கைகளையும் சேர்த்துப் பற்றிக் கொண்டார்.

''நீங்க என்னை யார்னு...''

''உன் தலைமுடியை வச்சே கண்டு பிடிச்சுட்டேன், ராஜாத்தி. சுரேன் புகழ்ந்து பேசுவானே!

'''லதா ரொம்ப அழகும்மா - அதற்குச் சிகரம் வச்சது போலக் கூந்தல்!'னு - இந்தப் பயலுக்கு என்ன தெரியும்னு நினைச்சேன். ஆனா சரியாய்த்தான் கணிச்சிருக்கான்.''

இவளை மேலிருந்து பாதம்வரை கண்ட கண்களில் தான் எத்தனை களிப்பு... கனிவு.

இறுக்கிய கைகளின் பாச வெம்மை இவளைத் தகித்தது.

ஒருவேளை இந்த அம்மாள் மனநிலை பிறழ்ந்தவரா? இல்லை... தன்னைப் போலவே லதா என்றொரு பெண் உண்டா? தலை முடியில் மட்டுமேனும் ஒற்றுமை இருப்பதாய்த் தோன்றுகிறது.

''அம்மா... நான்...''

''அதோ சுரேன் வந்துட்டானே... வாடா.. வந்து யார் வந்திருக்கான்னு பாரு.''

குதூகலமாய் அவர் அழைத்த நபரைத் திரும்பிப் பார்த்தவளுக்கு லேசான ஆச்சரியம் -

கலங்கிய முகத்துடன் சற்று முன்பு பார்த்த பளீர் நீலச்சட்டைப் பேர்வழி. வேகமாய் இவர்களை நெருங்கிய

வனின் பார்வையும் தன்னைப் பாதாதி கேசம் அளக்க, சங்கோஜமான உணர்வு.

''உன் லதா வந்தாச்சுடாப்பா... இனி வர மாட்டா, போலம்மான்னு முகம் வாடினியே...'' என்றவர், இவளிடமாய்த் திரும்பி,

''இவனை விடவும் நான்தாம்மா உனக்காய் ரொம்ப ஏங்கிக் காத்திருந்தேன்... இது கொஞ்சம்.. கொஞ்ச மென்ன நிரம்பவே தனிமையான இடம். இந்த நைந்த காலோட அதிகம் நடமாட முடியாது. வெளியே போக வும் கூச்சப்படுவேன். ரெண்டு மணியான பயல்களைத் தந்த கடவுள் ஒரு பெண்ணையும் தரலையேன்ற ஏக்கமுண்டு... உன்னைப் பார்த்த மட்டிலேயே அது பாதி கரைஞ்சிடுச்சு போ...''

கைகளின் பிடி சற்றும் நழுவாமலேயே பேசினார். விழிகளிலும் கூட ஏக்கம் கரைந்த பரவசத்தில் துளிர்த்த துளி நீர் -

இந்த இக்கட்டிலிருந்து விடுதலை வேண்டுமெனினும் எப்படி என்ன சொல்வது... இந்தப் பரவசத்தில் எப்படி மண்ணள்ளிப் போடுவது என்ற தயக்கத்தில் இவள் வந்தவனை நோக்கினாள்.

'உரிய முறையில் விளக்கம் சொல்லுங்களேன்,' என்ற விண்ணப்பம் அவள் விழிகளில்.

ஆனால் வந்தவனும் வரவேற்பாய்ப் புன்னகைத்தான் -

''வா லதா... நீ வரலைன்னதும் அம்மாதான் ரொம்ப சோர்ந்துட்டாங்க. எங்கே உன் பெட்டி?''



3

நேர்த்திக்கு அதிர்ச்சியில் வார்த்தைகள் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொண்டன - பசுமையான பண்ணை என்று உள்ளே ஒரு எட்டு வைத்தவளை மிக மிக எதிர்



பார்த்திருந்தவர்கள் போல ஆளாளுக்கு வரவேற்றதில் சற்று நிலைகுலைந்தே போனாள்.

அதிலும் அந்த இளைஞன் தன்னை லதா என்று விளித்துச் சகஜமாய்ப் பேசியதில் மண்டை காய்ந்தது.

வார்த்தை வராத அவஸ்தையில் கைகளை மட்டும் ஆட்டினாள். ''ஓ... வெளியே இருக்கா - வா எடுத்துட்டு வந்திடலாம்.''

இவள் நன்றியுடன் அவனைத் தொடர முயற்சிக்க, அம்மாளின் குரல் தடுத்தது.

''நீ போய்ப் பெட்டியைக் கொண்டு வாயேன்டா... லதா இங்கே என்கிட்டவே இருக்கட்டும்.''

''இல்லை... ஒரு... ஒரே நிமிஷம்மா...'' என்று தன் கையை மெள்ள உருவியவள், வேகமாய் நடந்தவனைப் பின் தொடர்ந்தாள் -

''ப்ளீஸ்... அம்மாவை உடனே ஏமாற்ற வேணாம்... தாங்க மாட்டாங்க...'' என்றான் ஆரம்பமாய்.

''நான் கொடைக்கானல் போற பஸ்ஸுல ஏறி... இங்கே பஸ்ஸை டீ சாப்பிடறதுக்காய் நிறுத்தினாங்க... போகணும்...''

பேசியபடியே வாசலுக்கு வந்தவளுக்காய் அங்கு காத்து நின்ற பேருந்தின் ஓட்டுனர் இவளைக் கண்டதும் கத்த ஆரம்பித்தார்.

''நல்ல ஆளும்மா... சரி மத்தவங்களாவது கொடைக் கானல் போய்ச் சேர வேண்டாமா? பத்து நிமிஷமாய் பஸ் உனக்காகக் காத்து நிக்குது. நேரத்துக்கு நாங்க ஸ்டான்ட்டுக்குப் போகலைன்னா முதலாளி எங்க பேட்டா பணத்தை வெட்டிருவாரு... ஓடி வா.''

சுரேன் நீட்டிய இரு நூறு நோட்டுகளைப் பார்த்தவர் சுருதி குறைந்தது -

''இவங்க பெட்டி, பையை இறக்கித் தந்துட்டுக் கிளம்புங்க.''

ஓட்டுனர் சந்தேகமாய் இவளைப் பார்க்க, தொடர் ஓட்டம் போல, இவள் நீலச் சட்டைக்காரச் சுரேனைப் பார்த்தாள் -

''முதலில் விஷயத்தை எல்லாம் உங்களிடம் சொல்றேன் - பிறகு முடிவெடுங்க... கிளம்பணும்னால் மறுபஸ்ஸிலேயே ஏற்றி விடறேன் அல்லது ஓரிரு நாட்கள் அம்மாவோடு இங்க தங்கிட்டு நீங்க போகலாம்... எல்லாம் அவங்க திருப்தி... சந்தோஷத்துக்காக.''

அவன் குரலின் கெஞ்சல், கண்களின் கண்ணியம், வார்த்தைகளின் உண்மை அவளுக்கு முடிவெடுக்க உதவியது.

''சரி'' - என்றாள் சுருக்கமாய்.

அவன் கண்களில் நிறைய நிம்மதியூடே துளி வியப்பும் தெரிந்தது.

பின்னே ஊருக்குப் போகும் பாதி வழியில் ஒரு கோப்பைத் தேநீருக்காக இறங்கிய ஒருத்தி, அறிமுகமாகாத ஒருவன் அழைப்பிற்கு இணங்கி, உடனே பெட்டி படுக்கையுடன் வருவது சகஜமான, லேசான காரியமல்லவே!

இவளுக்குமே தன் செய்கை, சம்மதம் ஆச்சரியமாகத் தான் இருந்தது.

நடத்துனர் இறக்கிய பையைச் சுரேன் வாங்கிக் கொள்ள, பஸ் நகர்ந்து விலகியது.

''ஒரு ஃபோன் செய்து, இல்ல நிர்வாகியிடம் நான் இன்று வரலைங்கறதைத் தெரிவிக்க முடியுமா? இல்லைன்னா கவலைப் படுவாங்க.''

''ம்.. இங்கே 'செல்' எடுக்காது - இங்கேயிருந்து பதினைந்து நிமிஷத்துல... அதாவது காரில் போனால் எங்க வீடு வரும் - அங்கேயிருந்து தொலைபேசி மூலம் தகவல் சொல்லிடலாம்.''



''நல்லது... இப்ப அங்கே போகணுமா?''

''ம்... சுருக்கமாய் முதலில் உங்களுக்கு விவரம் சொல்லிடறேன்... நீங்க சந்திச்சது எங்கம்மாவை. சென்னையில் படிக்கிறதாய்ப் பெயர் பண்ணிக்கிட்டிருந்த என்னை இங்கே வரச் சொல்லிக் கட்டாயப்படுத்திட்டிருந்தாங்க - அங்கே.. அதாவது சென்னையில் எனக்கு லதா... லதாங்கி பழக்கமானா - அதைப் பற்றிக் கோடி காட்டியதும் அம்மா ரொம்ப உற்சாகமாய்க் கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சாங்க...''

பேச, விளக்கம் தர, நேரம் வேண்டுமென்பதால், இருவரும் மிக மெள்ளவே நடந்தார்கள் -

''லதாவையும் முதலில் இங்கே அழைச்சு வா - நம்ப பண்ணையை அவள் பார்க்கட்டும்னு.. கெஞ்சினாங்கன்னே சொல்லலாம்...

''ஆனா லதா இங்கே வரலை... மறுத்துக் கடிதம் எழுதிட்டாங்க.''

தொடர்ந்தவளை வியப்புடன் துளிப் பயத்துடன் ஏறிட்டான்.

''இல்லல்ல... எனக்கு மூடுமந்திரமெல்லாம் தெரியாது - நீங்க ஒரு கடிதத்தை வாசித்துக் கிழிச்சதைப் பார்க்க நேர்ந்தது - அதில் செய்த யூகந்தான்.''

சோர்வாய்ப் புன்னகைத்தான் -

''அயல்நாட்டிலிருக்கும் எங்க மாமா - அம்மாவின் அண்ணன் - நாளை இங்கே வர்றாங்க... அவங்க இந்தியாவில் இருக்கப் போகும் அரை மாசத்தில் அவங்களிடமும் லதாவைக் காட்டி ஒரு நிச்சயதார்த்தமேனும் நடத்திடணும்னு அம்மாவுக்கு ஆசை.''

சற்று முன் அவனில் தெரிந்த அச்சமும் குழப்பமும் இப்போது நேர்த்தியின் முகத்திற்கு இடம் மாறின.

''பயப்படாதீங்க - இந்த நாடகத்தை நாம நிச்சய தார்த்தக் காட்சிவரை யெல்லாம் இழுக்க நேராது - அதிகம் எதிர்பார்த்த அம்மாவின் ஏமாற்றமும் அதிகமா யிருக்கும்... ஆக, நீங்க ஒரு அல்லது ரெண்டே நாள் தங்கியிருந்து, அவங்க மனசு சற்று ஆறியதும் கிளம் பிடலாம்.''

''சீக்கிரமாய் வாடா, சுரேன் - பிறகு பொழுதன் னைக்கும் லதா கூடப் பேசிட்டே இரு. பாவம், பிள்ளை! பசியாய் இருப்பா - முதல்ல வீட்டுக்குப் போய்ச் சாப்பிடலாம்.''

''இதோம்மா!'' - என்றவன் வேகமாய்ப் போய் ஓரமாய் இருந்த தாங்கு கட்டையை எடுத்துத் தர, அந்த அம்மாள் அதை லாவகமாய்த் தன் இடது கையில் பொருத்தி, நடக்கலானார்கள் -

ஆனால் தன் விருந்தாளியைப் பற்றியிருந்த வலது கை தளரவேயில்லை.

இணைந்து நடந்த நேர்த்தி மிருதுவாய்ச் சொன்னாள் -

''உங்களுக்கு இப்படி ஒரு குறை இருப்பதாய்... எனக்குத் தெரியாதும்மா.''

''ம்ம்... தாயைப் பற்றி, நோயைப் பற்றி யெல்லாம் பேச எம் மகனுக்கு ஏது நேரம்?'' வருத்தமின்றிப் புன்னகைத்தவர் தொடர்ந்தார் -

''ஆனா உன்னைப் பற்றி நிறையச் சொல்லி யிருக்காம்மா.. எல்லாஞ் சரிதான்... ஆனா...''

அந்த இழுப்பு இவளுக்கு உறுத்தியது.

'என்ன?' என்று கேட்க முடியாத நிலைமையும் வேறு.

''சரி - அதெல்லாம் விடு - உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கும்மா, செல்லம்... நீ நம்ப பண்ணையைச் சுற்றிப் பார்த்துட்டு இங்கேயே இருப்பது பற்றி முடிவை எடுப்பேன்னு சுரேன் சொன்னாம்மா... இருந்திருடா..''



குழைந்து கெஞ்சியது, அத்தாயின் குரல்.

''இப்போது பண்ணை, பழ வியாபாரம் எல்லாம் நல்லாப் போகுது... நீ சரின்னா சுரேன் பூனையாட்டம் இங்கேயே இருந்திடுவான். உடையவன் இருந்து பார்த்தால்தானேம்மா தொழில் வளரும்? எங்க பாட்டி சொல்வாங்க -

'''நாலு வேதமும் தெரியும்; ஆறு சாஸ்திரமும் தெரியும் - வாய் மட்டும் ஊமை!'ன்னு. இத்தனை சொத்து பத்து இருந்தென்ன - உடனிருந்து ஆண்டு அனுபவியாமல? ம்ம்?''

உவமானத்தில் இவளுக்குச் சிரிப்புப் பொங்கியது. வாய் விட்டுச் சிரித்தவளை மூத்தவள் கண் விரிய ரசித்தார் -

''நீ நவீனப் பொண்ணாய் இருப்பேன்னு கொஞ்சம் பயந்தேன்டா... பட்டணத்துல படிச்சதுங்க நாகரீகம் நயங்கெட்டதாய் எனக்குத் தோணுது. ஆனா இந்த லதாப் பொண்ணு எப்படி யிருந்தாலும் நான் அனுசரிச்சுப் போகணும்னு முடிவு பண்ணியிருந்தேன்... ஆனா நீ பளிங்காட்டம், பத்தரை மாத்துத் தங்கமாய் ஜொலிக்கறே, என் ராஜாத்தி...''

இவள் கன்னத்தை இறுகப் பற்றி முகத்தை இழுத்து ஆசையாய் முத்தமிட, நேர்த்திக்குச் சிலிர்த்தது.

இது ஏதேனும் முன் ஜென்மத் தொடர்ச்சியா அல்லது இவள் நம்பிய கடவுள் காட்டும் அருளா?

இப்பண்ணையின் பெயர் ஏன் 'நேர்த்தி' என்றிருக்க வேணும்? வழக்கமாய் நிற்கும் இடத்தில் அல்லாமல் இங்கு நிற்கும் பேருந்தில் தான் ஏறியது ஏன்?

கிடைத்ததைக் கொண்டு இதுவரை வாழ்ந்தவள்தான் - ஆனால் இது போன்ற கொஞ்சல், கொண்டாடல் இவற்றுக்கான ஏக்கமே இல்லாதிருக்க இவள் ஒன்றும் பெர்ம்மை அல்லவே! எதிர்பாராமல் கிடைத்த இந்த அன்பு இவளைப் புரட்டித் தள்ளியது. இதிலேயே மூழ்கி விட வேணும் போன்ற சுக அயர்வு...

பாசத்திற்கான பேராசை...

ஆமாம்... பேராசைதான் - ஏனெனில் இந்தப் பாச மெல்லாம் இவளுக்கு உரியதல்லவே... யாரோ ஒரு லதாவிற்கானது -

இன்று வர முடியாது என்று முறுக்கிக் கொண்ட லதா - இனித் தன் புகுந்த வீடாகப் போகும் இங்கு வரும் போது... என்னாகும்?

தன் குட்டு வெளியாகி விடும்! நீருக்குள் விட்ட மூச்சு, பரப்பில் குமிழிடாமல் இருக்குமா?

ஆனால் இனி இங்கே என்ன சொல்லி வெளி யேறுவது?

உண்மையைச் சொன்னதும், இந்த அன்பெல்லாம் வாபஸாகி விடுமோ?

'நல்லா வந்தாய் ஏமாற்ற!' - என்று துரத்தி விடுவார்கள் -

ஆனால் மாற்ற வேண்டும் என்று தனக்கென்ன தேவை? அகஸ்மாத்தாய் நுழைந்தவளை இந்தத் தாயார் ஓடி வரவேற்றார். கூடவே மகனும் ஒத்து ஊத, சம்மதமாய்த் தலையசைத்து விட்டாள்... ஆனால் அதுவும் ஒரு குற்றம்தானோ...?

''என்னட லதாக் கண்ணு... என்ன யோசனை? இது காடு மாதிரியில்ல இருக்குது - இங்கே காலத்துக்கும் காலம் தள்ள முடியுமான்னா? நீ என்னைப் போல இங்கே அடைஞ்சு கிடக்க வேணாம்ப்பா - இங்கேயிருந்து ஒரு



மணி நேரத்துல கொடைக்கானல் டவுனுக்குப் போயிடலாம் - அங்கே கடை, கண்ணி, கிளப் எல்லாமுண்டு - என்ன, படம் பார்க்க தியேட்டர் கிடையாது - 'ஹோம் தியேட்ட' ராமே... ஒன்னரை லட்சச் செலவுல ஐம்பத்தினாலு இஞ்ச் அகல டி.வி., நாலு ஸ்பீக்கர்னு வீட்டுலயே வாங்கிப் போட்டுட்டா, வேண்டிய படத்தை வீட்டிலேயே பார்க்கலாம். நம்ப பழ லோடு லாரி வாரத்துக்கு மூணு தரம் மதுரைக்குப் போய் வரும் - கூடவே உனக்கான ஸி.டி.யை வரவழைக்கலாம் - என்ன, ராஜாத்தி?''

இதுவரை தேக்கியதை, மடை திறந்த தினுசில் அந்த அம்மாள் கொட்ட, நேர்த்தி சங்கடமாய் விழித்தாள் -

''முதலில் சாப்பிடுவோம்மா...'' என்று சுரேன் உதவியதில், வீடு சேர்ந்தவர்கள் முகம் கழுவிச் சாப்பிட அமர்ந்தார்கள் -

வயிற்றின் பசியை உணவின் மணம் மேலும் கிளப்ப, ஆவலாய்ச் சாப்பிட ஆரம்பித்த நேரம் -

''ஓ.. முக்கிய விருந்தாளி ஒரு வழியாய் வந்தாச்சு போல...!'' நக்கலாய் ஊடுருவியது ஒரு குரல்.



4

வேலையில் அமிழ்ந்தபடியே ராகம் இழுக்கும்போது சில சமயம் அதிசய அழகோடு சில ஸ்வரங்கள் கோர்வைப்படும் - அது போல எதிர்பாராமல் அமைந்து விட்டது இப்படி ஒரு அனுபவம்... ஆனால் இந்த அதிசய ராகத்தில் அபஸ்வரமாய் ஊடுருவியது யார் என்பதாய்த் திரும்பினாள் நேர்த்தி -

வெகு உரிமையாய் உள்ளே நுழைந்தவன் தன் மேல் பதிந்த இவள் கண்களை விடாமல் தன் விழிகளால் கவ்வியபடியே நடந்து உணவு மேஜையில் அமர, தன்

கண்களை மீட்க முடியாமல் சற்று மிரண்டுதான் போனாள்!

''இவன்தாம்மா எம் மூத்த மகன் - பேர் நரேன் - இந்த எஸ்டேட்டை நேர்த்தியாய் உருவாக்கி, பெயர் சூட்டிப் பராமரிக்கறதும் இவன்தான் - வாப்பா... உக்கார்...'' என்றபடியே தாய் மகனுக்குப் பரிமாற முயல -

''நீங்க சாப்பிடுங்கம்மா..'' என்றவன் தானே பரிமாறிக் கொண்டான். உணவை அளைந்தவன் பார்வை மறுபடி புதியவளை அலசியது. எதிர்பார்த்தது இது அல்லவே - என்பது போல ஒரு சின்னக் குழப்பம் இவன் முகத்திலும் தெரிந்தது.

''என்ன மிஸ் லதாங்கி - பயணமெல்லாம் சௌகர்ய மாய் இருந்ததா? சென்னை போல இங்கே சுற்றிப் பார்த் துச் செலவழிப்பதற்கு வசதி வாய்ப்புகள் கிடையாது... இப்பவே புரிஞ்சிருக்கும்... ஆக நீங்க நாளையே கிளம் பினாலும் ஆச்சரியமில்லை... ம்ம்?''

வார்த்தைக்கு வார்த்தை எத்தனை நையாண்டி! வீட்டின் மற்ற இரு உறுப்பினரின் முகங்களும் சுண்டியதைக் கவனித்தவள் பதில் பேசவில்லை. தன் கவனத்தை உணவில் செலுத்தினாள் -

கிடைத்ததை முழு மனதாய் அனுபவிப்பது இவளின் சித்தாந்தம்! இது போன்ற அதிசுவையான உணவை அவள் இதுவரை உண்டதேயில்லை. விடுதியில் கிடைத் தது ரேஷன் அரிசி மட்டுமே - பருமனும் வீச்சமுமாய். ஞானாம்பாள் பாட்டி வீட்டில் ஓரளவு தரமான அரிசி என்றாலும் நெய், முந்திரி, தேங்காயெல்லாம் இறை படாத சமையல். இங்கு முதலில் பரிமாறப்பட்ட வெறும் சாதம் கூடக் கமகமத்ததே!

''சாப்பாடு அருமை - அதிலும் குறிப்பாய் இந்த அரிசி...'' - பாராட்டினாள்.



''பாஸ்மதி ரகம்மா - உனக்குப் பிடிச்சிருந்தால் தினம் இதையே சமைச்சுடலாம்!'' தாயார் சொல்ல,

''இது கிலோ ஐம்பது ரூபாய்!'' - நிஷ்டூரமாய் வெட்டினான் மூத்தவன்.

மனம் மலரானால் வார்த்தைகள் மணமாய் வரும் - முள் மனதின் வெளிப்பாடு குத்தித்தான் கிழிக்கும். தனக்குள்ளாகவே விளக்கம் சொன்னவள் மறுபடி உண்பதில் கண்ணானாள். பலாக்காய்க் கறி மீண்டும் போட்டுக் கொண்டு கெட்டித் தயிரோடு கலந்து ருசித்தாள் -

''இதென்ன சக்கைப் பிரதமனா? ஓஹோ வெல்லமும் பலாப் பழமுமா... அபார ருசி'' - என்று இரு கிண்ண இனிப்பைக் காலி செய்தாள்!

சுரேனின் தாய்க்கு மகிழ்வில் கண்கள் துளிர்த்து விட்டன. ''யாரம்மா இப்போ இத்தனை ரசிச்சுச் சாப் பிடறா? குறிப்பாய்ப் பொண்ணுங்க எடை கூடிடுமோன்ற பயத்துல பருக்கைகளை எண்ணி எண்ணில்ல கொறிக்கு துங்க! நீ உண்டதில் என் வயிறு நிரம்பிடுச்சு.''

''ஓ... உங்களுக்கு வைக்காமல் சாப்பிட்டுட்டே னாம்மா?'' இவள் கேட்க, பெரியவள் வாய் விட்டுச் சிரித்தாள் -

கை கழுவும் போது, இவளைத் தொடர்ந்த சுரேன், காதருகே குனிந்து கிசுகிசுத்தான் -

''வீட்ல இப்படிச் சிரிப்புச் சத்தம் கேட்டே நாளாச்சுங்க... ரொம்ப நன்றி... அம்மாவும் வழக்கத்தை விட ரெண்டு பிடி கூடவே சாப்பிட்டாங்க.''

இவள் பதிலுக்குக் கிசுகிசுத்தாள் -

''ஆனா... நான் செய்தது சரியில்லைன்னு தோணுதுங்க, சுரேன்... இத்தனைக்கும் பிறகு உங்கம்மாட்ட,

‘‘‘நான் உங்க மருமகளாக வேண்டியவள் இல்லை - யாரோ ஒருத்தி!’ன்னு நான் கையாட்டிட்டுக் கிளம்ப முடியுமா? இனி உங்க லதாங்கி வந்தால் அவங்க என்ன நினைப்பாங்க?’’

‘‘ஷ்... வெளியே வாங்க - பேசலாம்,’’ என்றபடி, கை துடைத்து நகர்ந்தான்.

‘‘லதாம்மா, வந்து சோம்பு எடுத்துக்கோயேன்..’’ பெரியவள் அழைக்க, போய்ச் சீனிச் சோம்பை வாயிலிட்டு மென்றவள் ஜன்னல் வழியே வெளியே பார்வையை விட்டாள் -

‘‘அடடே.... அந்த விசிறி வாழை எத்தனை உயரம்! அகலம்! போய்ப் பார்க்கட்டுமாம்மா?’’ கேட்டாள் பவ்யமாய்.

‘‘அத்தைன்னே கூப்பிடேன், செல்லம்? எம் பேர் செங்கமலம் - அவர் கமலம்பார்... மற்றவங்களும் கமலம்மான்னே கூப்பிடறது. எனக்கு உடன் பிறந்தவங்களே இல்லைங்கறதால் ‘அத்தை’ ‘சித்தி’ன்னு வாயாரக் கூப்பிடவும் இளைய உறவுகளில்லை.’’

‘‘சரித்தை... தோட்டத்துக்கு...’’

ஜன்னல் வழியே பார்த்த கமலம்மாளின் முகத்தில் விஷமப் புன்னகை. ‘‘என்ன, சுரேனோட பேசணும் - அதான? தங்கமாய்ப் போம்மா - நான் கொஞ்சம் படுத்து எழறேன்... பயண அலுப்பிருக்கும். நீயும் கொஞ்ச நேரமேனும் படு.’’

வெளியே வந்து நின்ற போதிலும் வெயில் இவர்களைத் தொடவில்லை - மரங்கள் சூரியனின் வெப்பத்தைத் தடுத்து வெளிச்சத்தை மட்டும் வடிகட்டிக் கீழே அனுப்பியிருந்தன -

‘‘அடிக்கடி லதாவைப் பற்றிப் பேசுவீங்களாமே... அவங்க புகைப்படத்தை அம்மாவிடம் காட்டலையா?’’



‘‘நல்ல வேளையாய் இல்லை.’’

‘‘காட்டியிருந்தால் இந்தக் குழறுபடியும் இல்லை.’’

‘‘லதாவின் படத்தைக் காட்டியிருந்தால் அம்மா அவளை இத்தனை ஆர்வமாய்ப் பார்த்திருக்க மாட்டாங்க.’’

‘‘ஏன்... அழகான பெண்ணாய்த்தான்...’’

‘‘வேறு மாதிரியான அழகு... நவீன யுகத்தின் நாகரீகப் பெண்!’’

உதடு பிதுக்கினான்.

‘‘நீளத் தலைமுடின்னு அத்தை... அதாவது அம்மா... சொன்னாங்க...’’

புன்னகைத்தான் -

‘‘லதாவின் வித்தியாசமான கூந்தல்தான் என்னை முதலில் கவர்ந்ததுங்க. ஒரு மாதிரிப் பொன்னிறச் சிவப்பில் அலையலையாய்ச் சாயமேற்றிய கூந்தல் பாதி முதுகு வரை புரளும்...’’

‘‘ஓஹோ... நீளப் பின்னல் இல்லையா?’’

‘‘பொண்ணு பார்க்க எப்படடா இருப்பான்னு அம்மா நொச்சு எடுக்க, என்ன, எப்படிச் சொல்றதுன்ற குழப்பத்தில், ‘அவ தலை முடி கூட அழகும்மா!’ன்னேன் - அம்மா அதைக் கறுப்பாய் நீள இருக்கும்னு கற்பனை செய்துக்கிட்டாங்க.’’

அவன் நெற்றியைச் சொறிய, இவளும் புன்னகைத்தாள்.

‘‘சரி - நான் எப்போ கிளம்பறது?’’

‘‘அம்மா இத்தனை பேசி, இவ்வளவாய்ச் சிரித்து நாங்க பார்த்து ரொம்ப நாளாச்சுங்க... அதிகமாய் வெளியேவும் போக மாட்டாங்க - பசங்களான எங்களுக்கு அவங்களுக்கு ஏற்றாற்போல் உட்கார்ந்து கதை பேசத்

தெரியாது. அண்ணன் பொதுப்படையாய் உரம், மரம்னு பேசுவான்.''

''அவருக்கு நான் வந்தது பிடிக்கலை.''

''ம்ம்... அதற்குக் காரணமுண்டு.''

''அவர் மனைவி எங்கே...''

''அவனுக்கு இன்னும் கல்யாணமாகலை.''

''ஓ.. ஓதுதான் காரணமா - தான் தனியாளாய் இருக்க, தம்பி குடும்பஸ்தனாயிட்டான்ற...''

''இல்லைல்ல.. அது வேற காரணம்... பணப்பிரச் சனைன்னு வைங்களேன் - எங்கப்பா சில பஸ்களும் வச்சிருந்தார்... நஷ்டத்தில் போன அந்தத் தொழிலை மூடிட்டு... அப்பா இறந்த கடந்த வருஷமாய் விவசா யத்தை அண்ணன் முன்னேறிட்டார் - சமீபமாய் அதாவது மூணு வருஷமாய் அந்த உழைப்பிற்குப் பலனாய் நல்ல வருமானம் - இத்தனையிலும் என் பங்கு செலவு மட்டும்தான்!''

''சம்பாதிப்பதைச் செலவழிக்கவும் ஆள் வேணுமே.''

''குடும்பத்திற்காய்ச் செலவிட்டால் பரவாயில்லை - நான் காசை லதா மேலில்லையா ஊதினேன்? அவளுக்குச் சாப்பிடறதில் கூட சாதா ரகம் இடம் பிடிக்காது. உயர்ரக உணவகங்களில் சாப்பிட்டதில் குறைந்த பட்சம் ஐந்நூறாவது ஒரு வேளைக்குக் காலியாகும்... இது தவிரப் புடவை, நகைன்னு பிற செலவுகள் -''

ஒரு நேர உணவிற்குக் குறைந்தது ஐந்நூறா... ஒரு மாதச் சம்பளமாய் அத்தொகையைப் பெற, தங்களின் உடலைப் பிழிந்து தருபவர்களை இவளுக்குத் தெரியும்!

இவளது பாவனை பார்த்தவன் தொடர்ந்தான் -

''இதற்கே மலைச்சுட்டா எப்படி? போன மாசம் அவளுக்குப் பரிசாய்... ஏறக்குறைய நிச்சயதார்த்தம்



போல - அவளுக்கு நான் வாங்கிய மோதிரம் ஒன்னரை லட்சம்.''

வியப்பைச் சற்றுச் சிரமப்பட்டு ஜீரணித்தவள், காரியத் திற்கு வந்தாள் - ''சரி - இப்ப அவங்க... லதாங்கி வந்தால், நீங்க என்னை எப்படி அவங்களுக்கு விளக்கித் தப்பிக்கப் போறீங்க?''

அவன் முகம் வாடியது -

''அவ வரவே மாட்டாளாம் - பதிவுத் தபாலில் இந்தத் தகவலோடு வைர மோதிரத்தையும் வைத்தே அனுப்பி யிருந்தாள்... இனி நாம் சந்திக்க வேண்டாம்னு...''

அவன் குரல் நைந்திருந்தது -

சாட்சிக்காய் அவன் தன் சட்டைப் பையிலிருந்து எடுத்துக் காட்டிய மோதிரம், இந்த நாடகமெல்லாம் தனக்குப் புரிந்தது போலக் கண் சிமிட்டி மினுக்கியது!



5

ஞானாம்பாளின் வீட்டிற்கு வேலைக் காகப் போகும்போது 18 வயது நேர்த்தியின் காதுத் துளையில் இருந்தது, வெறும் வேப் பங்குச்சிதான்!

இவளுக்கான சம்பளப் பணத்தைச் சேர்த்து வைத்து அந்த அம்மாளே நடுவே ஒரு சிவப்புக் கல் பதித்த பூக்கம்மலும், ஒரே பவுனில் உள்ளங்கழுத்தில் ஓடிய ஒரு தங்கச் சரத்தையும் வாங்கிப் போட்டார்கள். உடுத்தும் புடவைக்குப் பொருத்தமாய் இரு கனத்த கண்ணாடி வளையல்களை மாற்றுவதுதான் நேர்த்தியின் அதிகபட்ச அலங்காரம்!

ஆக ஒன்றரை லட்சம் பெறுமான பொருளை, அலட்சியமாய், சட்ட விரோதமாய்க் கூட இப்படித் தபாலில் அனுப்பிய பெண்ணை நினைத்து அதிசயித்தாள்.

''ஓ... அதான் ரொம்ப வருத்தமாய்த் தெரிஞ்சீங்க.''

''ம்ப்ச்.. நரேன்.. அதான் என் அண்ணன் கோபப் படறதும் சரிதான். குடும்பத்தில் ஒருவர் மட்டும் சம்பாதிக்க, அடுத்த ஆள் அதைத் தப்பான வழியில் செலவழிக்கன்னு இருந்தால் சரி வராதுதான்.''

''உழைத்துச் சம்பாதிக்க, காசின் அருமை புரியும் - பிறகு கண்டதில் கண்டபடி இறைக்க மனசு வராது...''

சொன்னதும்தான் சற்று முன்பே சந்தித்தவரிடம் இப்படி ஆலோசனைகளை அள்ளி வழங்குவது தவறு என்பது உறைத்தது.

''மன்னிக்கணும்... ஏதேதோ பேசறேன். இப்போது நான் எப்ப, எப்படி உங்கம்மாவிடம் பேசிக் கிளம்பறது? அந்த வழியைச் சொல்லுங்க.''

''லதாவின் கோபம் இப்போதைக்கு ஆறாது - ஆக நீங்க கொஞ்ச நாளோ... ஏன், வாரங்களோ இங்கே தங்கினால் அம்மா பூரிச்சுப் போவாங்க... இதை எங்க வேண்டு கோளாய்க் கருதி...''

''எங்கன்னா? உங்க அண்ணனுக்கு இந்த வேண்டு கோளில் பங்கில்லையே?''

''ஆனா அம்மா மேல் கொள்ளைப் பிரியம் - அம்மாவின் மகிழ்விற்காய் எதையும் செய்வான்.''

''அதாவது என்னையும் சகிச்சுக்குவார்?''

அவளுக்குத் தன் நிலை, மொத்தத்தில் இந்தச் சூழ் நிலையே விநோதமாய்ப் பட்டது. செம்பொன் நிறத்தில் அலைபாயும் கூந்தலும், ஒப்பனையும் வைரங்களிலுமாய் மின்னும் லதாவின் இடத்தை இப்படிப் பழஞ்சேலையும் வழித்துச் சீவிய சடையுமாய் உள்ள தான் எப்படி நிரப்ப முடியும்?



தன் நினைப்பைச் சுரேனிடம் வெளிப்படுத்தியவள் -

''ஏற்கெனவே உங்கம்மாவும் அண்ணாவும் என்னை விசித்திரமாய்ப் பார்த்தாங்க. இது எனக்குப் பொருந்தாத பாத்திரம்!'' என்றாள்.

''அவங்க ரெண்டு பேருக்குமே நவீன யுக நாகரீகம் பற்றி அதிகம், எதுவுமே தெரியாதுன்னு வைங்களேன்!'' அடித்துச் சொன்னான்.

''பாரீஸின் ஃபேஷன் நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சிப் பெட்டி நம் வீட்டுக்கே கொண்டு வருதே.''

''அம்மா அதை எல்லாம் பார்த்தால்தானே! சீரியல் களைக் கூடப் பார்க்காதவங்க - பிடிச்சதெல்லாம் பழைய படம் அல்லது சமையல் குறிப்புகள். அண்ணன் பெண் களை நிமிர்ந்தும் பாராதவன்.. ஆக, உங்க அலங்கார இன்மை பிரச்சனை இல்லை.''

மூத்தவனின் ஊடுருவல் பார்வை நினைவிலோடிச் சிலிர்க்க வைத்தது - ''மொத்தத்தில் இது ஏமாற்றுத் தானே? அதுவும் உங்களுக்கான பெண் நான்ங்கற பொய், அபாண்ட ரகம்! இந்தப் பண்ணை வீடு ஒதுங்கி இருந் தாலும், இங்கு வேலை செய்பவங்க என்னைப் பற்றி ஏதோ பேச, செய்தி சுற்றிலும் பரவக் கூடும். உங்களுக்குக் கல்யாணம் பேசும்போது பிரச்சினையாகவும் கூடும்... ஏற்கெனவே உங்க வீட்டில் சின்னவருக்குன்னு நிச்சயித்த பெண்ணுன்னு ஒருத்தி இருந்தாளே - அது யார் என்னாச்சுன்னு...''

''ஆணுக்கு இந்த மாதிரி அபவாதமெல்லாம் பொருட் டேயில்லைங்க - மனைவி இறந்த மறு மாசமே ரதி போலப் புதுப் பெண்டாட்டி கிடைச்சிடுதே.''

''சரி - அப்ப என் நிலைமை?''

மிக இயல்பாகவே இவள் கேட்டாலும், கேள்வி அவனை அறைந்தது.

''மன்னிக்கணும்... ம்ம்.. உங்க பேரைக்கூடக் கேட்டுக்காமல்.. மன்னிச்சிடுங்க. ரொம்பத் தன்னலமாய்ப் பேசிட்டேன். உங்க குடும்பத்தாருக்கு நீங்க பதில் சொல்லணும். இப்ப மறுநாள் போனாலுமே உங்க வீட்டாரை நீங்க சமாளிக்கறது சிரமம் - எதையும் யோசிக்காமல்... ச்சே!'' - தன் நெற்றியை உள்ளங்கை களால் ஓங்கித் தட்டினான். பலமுறை.

''ஷ்..ஷ்.. அமைதியாயிருங்க, சுரேன் - எனக்குக் குடும்ப மெல்லாம் இல்லை..'' என்றவள் தன் பின்னணியை அவனுக்குச் சுருங்கச் சொன்னாள் - ''ஆனால் எல் லாரையும் போல எனக்கு மனச்சாட்சி உண்டு. கிறிஸ்தவ விடுதியில் வளர்ந்ததால் பாவம் பற்றிய பயமும், கடவுள் எல்லாவற்றையும், நம் எண்ணங்களையும் கூட, ஆராய்ந்து அறிபவர் என்ற பக்தி உணர்வும் உண்டு. ஆக இப்படியொரு நாடகம் நடத்த என்னால் முடியாதுன்னு...''

''சரி. கிறிஸ்தவத்தில் அன்புதான், அதுவும் பிறருக் கான அன்புதான் பிரதானம்னு நானும் கேள்விப் பட்டிருக்கேன் - உங்களுக்கு இங்கே பாதுகாப்பான ஒரு இடமும், அன்பும் கிடைக்கும்... நீங்க மறுத்திட்டீங் கன்னா உங்களோடு சேர்ந்து நானும் வேலைதான் தேடணும். ஏன்னா நரேன் என்னை, 'வீட்டை விட்டுக் கிளம்பு, சம்பாதிக்கும் வழியைப் பார்'னு கிளப்ப றான் - எனக்கும் எங்கே போறதுங்கறது.. புரியலை... வளர்ந்தவங்களுக்கு அனாதை விடுதி ஏதும் கிடையா தில்லை?''

''இது உளறல். உங்களுக்கு ரொம்ப அன்பான அம்மா, கொஞ்சம் கண்டிப்பான அண்ணன்னு, நல்ல குடும்பம் இருக்குதே!''

''டிகிரியில் தவறிய பேப்பர்களை எழுதறேன் - விவசாயம் பற்றிய சமீப ஆராய்ச்சி என்னன்னு தெரிஞ்



சுக்கறேன்னு, ஏதேதோ புளுகி இத்தனை நாள் சென்னை யில் இருந்தேன் - அண்ணன் எங்க ரெண்டு பேரிலுமாய் நம்பி ஜாயிண்ட் கணக்கு வைத்திருந்தான். அதில் மொத்தத்தையும் காலி பண்ணிக் கடனும் வாங்கி, அதில் மூழ்கியதும்தான் இங்கே இழுத்துட்டு வந்துட்டான்...''

''எந்தக் கரிசனையுள்ள சகோதரனும் செய்யறதுதானே இது?''

''நீ செலவழிச்ச சில லட்சங்களைக் கடனாய்த் தந்த தாய்க் கருதறேன் - நம்ப பண்ணையில் வேலை பார்த்து அதை அடைங்கறான் - எப்படி இத்தனை காசை ஊதினேங்கற கேள்வியில்தான் லதாவைப் பற்றிச் சொல்ல வேண்டியதாய்ப் போச்சு. அதைக் கேட்டதும் அம்மா ஒரேயடியாய் இளகிட்டாங்க.''

சுரேனின் சிவந்த முகம் மேலும் சிவந்தது - தலைமுடியை அளைந்தபடி, சிறுவனைப் போல, அவன் பேசியதை இவள் வேடிக்கை பார்த்தாள் - சகோதரருக் கிடையே தோற்றத்திலும் குணத்திலும்தான் எத்தனை வேறுபாடு!

சுரேன் நடுத்தர உயரம், சிவந்த நிறம்.

மூத்தவன் அசாத்திய உயரம், மாநிறம்... அதிலும் அந்தக் குடையும் கண்கள்...! பார்வைக்கு ஈடாய்க் குத்தும் கூர் மூக்கு.

வடிவான ஆனால் இறுகினாற் போன்ற உதடுகள் -

நக்கலாய்ப் பேசும்போது அதில் ஏற்படும் ஏளன மடிப்பு...

தன் சிந்தனை ஓட்டத்தை ஆச்சரியத்துடன் அவசர மாய் நிறுத்தினாள் நேர்த்தி.

சற்று நேரமே பார்த்த ஒருவன் இத்தனை அழுத்தமாய்த் தன் மனதுள் எப்படிப் படிந்தான்? தனக்குப் பரிச்சயமான

வேறு சில முகங்களைத் தன் மனக் கண்களில் கொண்டு வர முனைய, அவை இத்தனை தெளிவாய், நுணுக்கமாய் வர மறுத்தன!

''அண்ணன் கல்யாணத்திற்கு அவசரப்படலை... என்னையேனும் மாலையும் கழுத்துமாய்ப் பார்க்கணும்னு அம்மா பரபரக்கறாங்க. ஆனா லதா... நிச்சயமாய் இப்படி ஒரு அரைக் காட்டில் வந்து வசிக்கச் சம்மதிக்கமாட்டா... ஆனா எனக்கு இப்ப வேறு வழியுமில்லை. சேர்ந்து செலவழிச்ச சில லட்சங்களை மீட்டுத் தரும் வரையாவது இங்கே இருப்போம்... பிறகு... பார்க்கலாம்னா ஒரே கோபம் அவளுக்கு. வந்து ஒரு முறை பண்ணையைப் பாரேன் லதான்னு கெஞ்சியதும், சம்மதிச்சவள்... இப்போ வரலைன்னு எழுதிப் போட்டுட்டா. அவள் வந்துட்டு இரண்டே நாளில் கிளம்பியிருந்தாலும், அம்மா கொஞ்சம் சமாதானப்பட்டிருப்பாங்க - ம்ப்ச்.''

கைகளைக் கட்டியபடி அவன் சொன்னது அனைத்தையும் கவனமாய்க் கேட்டிருந்தாள் -

''வெளியே போய் வேலை தேடறதும் ஒண்ணும் சுலபமில்லை... குறைஞ்சது எனக்கு மாசம் பதினைந் தாயிரமேனும் வந்தால்தான் என்னால் சமாளிக்க முடியும்... படிப்பைக் கூட முடிக்காதவனுக்கு... ரொம்ப குழம்பியிருக்கேன்...''

''லதா வரலைன்னாலும் நீங்க தனியே அண்ணனுக்கு ஒத்தாசையாய் இருப்பதை அவர் தடை செய்யலையே?''

''ம்ம்... ஆனா அம்மா இத்தனை சிரிப்பும் பேச்சுமாய் இருக்க மாட்டாங்க - உங்களைச் சந்திச்சதில் அத்தனை சந்தோஷம் அவங்களுக்கு... அதுக்கேனும் லதா... ஒரு மரியாதைக்காய் இங்க வந்திருக்கலாம்... அவளுக்காய் எத்தனை செலவு செய்தேன்... நான் தங்கிய அடுக்கு மாடி நவீன வீட்டிற்கு மட்டுமே வாடகை மாதம் பத்தாயிரம்...''



இவளது முகம் அதிர்ச்சியில் சிவந்ததைக் கவனித்தவன், அவசரமாய் மறுத்தான் -

''ஐயோ... நாங்க சேர்ந்து அங்கே தங்கலைங்க - அங்கே இருந்தது நான் மட்டும்தான் - அடிக்கடி அங்கே தன் சிநேகிதிகளை அழைச்சிட்டு வருவா - ஆக, நான் ஒரு கோடீஸ்வரப் பந்தாக் காதலனாய் ஷோ காட்ட அப்படி ஒரு வீடு, விதவிதமான கார்களை வாடகைக்கு எடுத்து அவளோடு சுற்றல்... சென்னையில் ஒரு சினிமா டிக்கெட் நூறு ரூபாய்... ஆக காசு தண்ணீராய்... ஓடிடும்.''

பக்கத்துக் கிரகத்தின் விலைவாசியைக் கேள்விப் படுவது போல, இவள் வியந்து வாய் பிளந்தாள்.

'அண்ணன் உங்களை நம்பித் தந்த பணத்தை இப்படிக் கேளிக்கையில் வீணாக்கி... அதுவும்...''

''ஒரு பெண் மேலே... உண்மைதான். ஆனா லதா இப்படிப் பண்ணுவா... காரியமாகும்வரை ஒட்டிட்டு, காசு காலியானதும் வெட்டி விடுவான்னு அப்ப தெரியாதே... மன்னிக்கணும்.. உங்க பேரையே நான் கேட்டுக்கலை.''

''பரவாயில்லை - இப்போதைக்கு லதான்னே இருக்கட்டும்.''

''ரைட் - என் அன்பைப் புரிஞ்சுக்காமல் ஒரு கடிதத்தில், கூடவே நான் போட்ட மோதிரத்தையும் அனுப்பி... உறவை முடிச்சிட்டா.''

''பெண்களே இப்படித்தான் - நன்றி கெட்டதுங்க, ஏமாற்றுப் பேர்வழிகள்னு உங்க மனம் கசந்திருக்குமே!''

'ஆம்,' என்பதாய்த் தலையாட்டியவன் ஒரு கேள்வியோடு இவளைப் பார்த்தான் - ''அதனால...?''

''எதை நம்பி என்னை வருந்தி அழைக்கிறீங்க, சுரேன்? இதெல்லாம் சரி வராது. நான் முடிந்த வரையில் இதமாய், 'எனக்கிந்த எஸ்டேட் வாழ்க்கை சரிவராது!'ன்னு உங்க

அம்மாவிடம் சொல்லிட்டுக் கிளம்பறேன் - நீங்க உங்க அண்ணாவோடு சேர்ந்து உழைக்க, பண்ணை மேலும் நேர்த்தியாகும் - ஒற்றுமை உயர்வில்லையா?''

''வந்து... வந்த அன்றே கிளம்பறேன்னா அம்மா ரொம்ப வாடிடுவாங்க - நம்ப பயல்களுக்குக் கல்யாணமே ஆகாதோன்னு கூட ஒரு மாதிரிக் கலவரமாயிடுவாங்க... நாளை சொல்லலாமா? நானே உங்களைக் கொடைக் கானலுக்குக் கொண்டு சேர்த்துடறேன். இன்னும் சில மணி நேரங்கள்... அரை நாள் லதாவாய் நடிச்சீங் கன்னா... என்ன... மன்னிக்கணும். உங்க பேர்...?''

''நேர்த்தி!'' - என்றாள் அவள் ஒரு அரைச் சிரிப்புடன்.



6

ஒரு நிமிடம் பல வித முக பாவனைகளுடன் தத்தளித்தவன், ''ஹையோ - கதையா நிஜமா?'' என்றான் முடிவில்.

''சரடல்ல, சத்தியம்!'' - என்று வந்த பதிலில் பலக்கச் சிரித்தவன், சற்று யோசிக்கவும் செய்தான் -

''நேர்த்தி - அப்ப நீங்க போகக் கூடாது!''

''விடிய விடிய ராமாயணம் கேட்ட பிறகும் கதையைச் சொதப்புறீங்களே!''

''இது கடவுளின் திட்டம்... சித்தம்னு படுது. நீங்க வேலை தேடுவதாய்த்தானே சொன்னீங்க?'' விரல் ஆட்டி வினவினான்.

''சொன்னேன்.''

''இதையே வேலையாய் எடுத்துக்கலாமே!''

''எதையே?''

''வந்து... இந்த...''



''உங்க மனைவியாய் நடிப்பதையா?''

சுருக்கெனவே கேட்டாள்.

''லதாவிற்கும் எனக்கும் கல்யாணமாகலை - தவிர நாங்க மணக்க இருந்தது - அம்மா, அண்ணாவிற்குத் தவிர - வேறு யாருக்கும் தெரியாது.''

''சரி.''

''ஆக - அம்மாவின் ஒத்தாசைக்காய் இங்கு வந்ததாய்ச் சொல்லுவோம். அப்ப உங்க அழகான பெயருக்குப் பழுதில்லையே!''

''ம்ம்... ஆனாலும் பெரியவங்களை ஏமாற்றுகிறோம்கிற உறுத்தலை என்ன பண்றது?''

''அம்மாவை இத்தனை பூரிப்பாய்ப் பார்த்து ரொம்ப வருஷமாச்சு நேர்த்தி. இப்ப கல்யாணம்கிற எண்ணமே வேண்டாம்மா - முதலில் அண்ணனுக்குப் பார்ப்போம்னு சொல்லிடலாம்.''

''பரவாயில்லை - இதுக்கு அண்ணன் பயன்படறார்!'' - குறும்பாய் நகைத்தாள்.

''அதுதானே நிஜமும் - எனக்கிப்ப திருமணத்தில் நாட்டமுமில்லை - ஆனா ஒண்ணு... லதாவே வந்திருந் தாலும் அம்மா இப்படி மகிழ்ந்திருக்க மாட்டாங்க - அவளும் இப்படி இயல்பாய் இனிமையாய்ப் பெரியவங் களிடம் பழகும் ரகமில்லை.''

''ம்ம்... உண்மையைச் சொல்லட்டா, எனக்கிங்கே தங்கச் சம்மதம்தான் - முடிஞ்ச வேலைகளைச் செய்றேன்.''

''நம்ப முடியலைங்க.. நேர்த்திங்கற பேரே அபூர்வம் - அந்தப் பெயருள்ள பெண்ணை இதுவரை நாங்க சந்திச்சதுமில்லை - அம்மா அத்தனை ஆர்வமாய் ஒருத்தியை எதிர்பார்த்துக் காத்திருந்த சமயத்தில் இந்தப்

பெயருள்ள நீங்களாய்... வந்து நின்றது... கடவுளின் சித்தங்கறது இதுதான் போல...''

பிரமிப்புடன் பேசினான்.

உள்ளாக இவளுக்கும் அது ஆச்சரியமே என்றாலும் வெளிப்படையாய்க் காட்டி அலட்டிக் கொள்ளவில்லை.

''சரி - வாங்க - உங்கம்மாட்ட விளக்கமாய்ச் சொல்லிடலாம்.''

தன் பிடியைத் தளர்த்தாமல் நின்றாள் -

''ம்ம்... வந்திருக்கிறது யாரோ ஒரு பொண்ணுன்னா அம்மா இப்படிக் கொண்டாடுவாங்களான்னு தெரியலை... முகத்தைத் தூக்கி வச்சுக்குவாங்களோ?''

''சரி - அப்ப நான் கிளம்பிடறேன்!'' - உடனே ஒத்துக் கொண்டவள், ''இது அதிசயமான அனுபவந்தாங்க, சுரேன் - ஏறக்குறைய ஒரு கனவு போல... உங்க வீட்டுச் சாப்பாடு பிரமாதம்... உங்க அம்மாவின் பாசமும்.. அனுபவிச்சேன்...'' - தன் நன்றி நவிலலை முடித்தாள்.

அவனிடம் பொங்கிய சிரிப்பைக் கண்டு, 'என்ன?' என்பதாய் வினவியது இவளது முகம்.

''இல்ல... நீங்க சாப்பாட்டைக் குறிப்பிட்டதும், லதா உண்பதை உங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தேன் - இதில் ஐந்தில் ஒரு பங்கைப் பரிமாறி அதிலும் பாதியை வீணாக்கியிருப்பாள், லதா - தட்டில் இருந்ததையும் பேருக்குக் கொறிச்சிருப்பாளே ஒழிய, இப்படி ரசிச்சு ருசிச்சிருக்க மாட்டாள் - உடை, உணவில் மட்டுமல்ல, தோற்றம், எண்ணம், பேசும் பழகும் முறை எல்லாவற்றிலும் நீங்க இருவரும் இரு துருவங்கள்தான்.''

''ம்ம்... ஒரே தாயின் குழந்தைகளும் கூட வேறுபடும் போது... எங்க இல்லத்தின் ஐம்பது பிள்ளைகளும் ஐம்பது விதம்.''



''நீங்க எங்கம்மா ரசிக்கும் ரகம், நேர்த்தி - கல்யாணம், மருமகள்ன்ற குழறுபடியெல்லாம் துடைச்சிட்டு நீங்க நிம்மதியாய்த் தங்குங்க. ஒரு வாரமோ மாதமோ... அதற்குள் யார் கண்டா.. நானே கூட உங்களைப் போல ஒரு அருமையான பெண்ணைக் கண்டுபிடிச்சு 'இவளையே கல்யாணம் பண்ணிக்கறேன்'னு அழைச்சிட்டு வந்தால் நீங்க பெருந்தன்மையாய் விட்டுக் கொடுப்பது போல ஒதுங்கிடலாம். இல்ல, அம்மாவின் வலது கையாய் இங்கேயே தங்கிடலாம்... இது எப்படி இருக்கு?''

ஆவலும் துடிப்புமாய்க் கேட்டவனை அவளால் ஒதுக்க முடியவில்லை.

''உங்க கற்பனை வளமாகவே இருக்குது... ஆனால் உங்கம்மா என் மேல் வெறுப்புக் கொள்வது போல நான் நடந்தால் பிரிவு சுலபமாய்ப் பிரச்சனையற்று இருக்கும்.''

''உங்க கற்பனை வீச்சு கொஞ்சம் மோசந்தான், நேர்த்தி! இது இறைவனின் அதிசயமான வழி நடத்துதல்... காட்டுதல்னு தோணுது... அதை நீங்க ஏன் கெடுக்கணும்?''

''திடீர்னு பக்திமானாய் மாறிட்டாப்போல!''

சிறு நக்கலுடன் விசாரித்தாள்.

''எப்பவுமே எனக்குக் கடவுள் பயம் உண்டு - அதனால் ஒழுக்கமும் உண்டு. நான் லதா மேல் செலவழிச்ச இதே பணத்தை நாற்பது பெண்கள் மேல் செலவழிச்சிருக்கலாமே! காதல்னு நினைச்சு முட்டாளாய் இருந்தேனே தவிர, தப்பான வழியில் போகலை... நீங்க... இனி உன்னை நீன்னே கூப்பிடறேன் - இங்கே பன்மையும் பிறர் முன்னிலையில் ஒருமையுமாய்க் கூப்பிடறது குழப்பறது... இதுவரை நிகழ்ந்த அசாதாரணம் போல வேறு எத்தனையோ நடக்கலாம்... ப்ளீஸ்... சில நாட்கள் பொறுத்துப் பார்க்கலாமே?''

கண்களை மூடி நின்றாள் -

தன்னை மீறிப் பாயும் சம்பவங்கள்... அதன் போக்கில் விட்டால் என்ன? சுரேனும் கமலம்மாவும் நல்லவர்கள்... அன்பிற்கு ஏங்குவதைத் தவிர வேறென்ன அவர்களது எதிர்பார்ப்பு?

''சரி, சுரேன்.''

'நன்றி நே... லதா.''

இவள் கைகளைப் பற்றிக் குலுக்கியபோது சற்றுக் கூச்சமாய் இருந்தாலும், மனம் நெருடல் இல்லாது நிம்மதியாயிருந்தது...

**'நெருப்பு சுடும் எனத் தெரிந்திருப்பது அறிவு**
**தீக்குள் விரலை வைத்தல் அனுபவம்**
**அதைத் தீண்டும் இன்பமாய்க் காண்பது ஞானம்!'**

இப்படி அறிவு, அனுபவம், ஞானம் இவற்றின் இடையே உள்ள வேறுபாடுகளை அவள் அறிந்திருந்தாலும், ஞானியாக இருக்கத்தான் முடியவில்லை.

தாமரை இலைத் தண்ணீராய் ஒட்டாமல் உருண்டு வழியத் தயாராய் இருந்தவளைக் கமலம்மாளின் அன்பு இழுத்து நிறுத்தியது.

'அடடே! இது பெண் குழந்தை இல்லாத வீடம்மா - உனக்கு என்னென்ன தேவைன்னு ஒரு பட்டியல் போடு - ஸ்னோ, பூ, பவுடர்... சாயம்.. இப்படி..' கமலம்மாள் பரபரத்தார்கள் -

''எனக்கு எதுவும் தேவையில்லம்மா. வேண்டியது இருக்குது. இங்கே இல்லாத ரோஜாவும் சாமந்தியுமா?''

''அதெல்லாம் செடிக்குத்தான் செல்லம் அழகு. உன்னாட் டம் நீளச் சடை இப்ப அபூர்வம் - குளியலறையில வெந்நீர் விளாவியாச்சு - ஷாம்பூ சீகக்காய் ரெண்டும் உண்டு. குளிச்சிட்டு வா - நானே முடியை ஆற்றி ஐஞ்சு கால் பின்னல் போட்டு, பந்தாய் ஜாதிப்பூ வச்சு அழகு பார்க்கணும்டா... எத்தனை கால ஆசை தெரியுமா?''



இவளுக்குள் நெகிழ்ந்தது -

இந்தத் தாயை அள்ளிக் கட்டிக் கொள்ள வேணுமென்ற பாசப் பரபரப்பு.

''இல்லம்மா - அதிகமாய்ப் பூ வச்சா தலை வலி வரும் - உங்க ஆசைக்கு ரெண்டு சாமந்தி மட்டும் சூடிக்கறேன்!'' என்று பாசப் பெருக்கிற்குத் தற்காலிக அணையிட்டாள்.

மறுபடியும் தோட்டத்தைச் சுற்றி வரும் சாக்கில் ஒதுங்கினாள். ஆனால் வாணலிக்குத் தப்பி அடுப்பிற்குள் விழுந்தது போலானது.

இவளையே உற்றுப் பார்த்திருந்த நரேனைக் கண்டு முறுவலிப்பதா அல்லது காணாதது போலப் போவதா என்றிவள் முடிவெடுப்பதற்கு முன் அவனே கேட்டான் -

''என்ன... சுரேன் சொல்வதெல்லாம் உண்மையா?''

விழித்தாள் - வேறு ஒரு ஊருக்கான பயணத்தில் வழியில் ஒரு கோப்பைத் தேநீருக்காய் இறங்கியவள், இங்கே காதலியாக நடிக்க நேர்ந்ததைச் சுரேன் தன் அண்ணனிடம் சொல்லி விட்டானா?

இவளது விழிப்பைக் கண்டு மனதிரங்கியவன் போல, - ''முடிவெடுக்க ஒரு வாரம் தேவைன்னு கேட்டியாம் - ஒரு வாரம் போதுமா?''

நக்கலாய் இழுத்தான்.

''பெண் பார்க்கும் வைபவங்களில் ஒரு மணி நேரத்தில் அல்லது அதற்கும் குறைவான நேரத்தில் வாழ்க்கை பற்றிய முடிவுகள் எடுக்கப்படுதே?''

''அங்கு முறையாய்ப் பெற்றவர்கள் தங்களின் இரு குடும்பத்திற்கும், பிள்ளைகளுக்கும் ஒத்துப் போகு மான்னு ஏற்கெனவே ஆராய்ந்து தேர்ந்தெடுத்த பிறகே, பெண் பார்க்கும் படலம்... இங்கே தலை கீழ்!''

அவன் கண்களின் ஏளனம் இவளைச் சீண்டியது. குரலில் காட்டமும் கசப்பும் கலந்திருந்தன.

''நேரிடையாய் ஒரு ஆணும் பெண்ணும் பழகிப் புரிந்து இப்படி நிதானமாய் முடிவெடுப்பதுதான் நேர் வழின்றது என் அபிப்பிராயம்.''

அவனது அகண்ட தோள்கள் அலட்சியமாய்க் குலுங்கின -

''ஆனா ஒரு வாரத்தில் நீ இது ஒத்து வராதுன்னு கிளம்பிட்டா... அம்மா ரொம்ப ஏமாற்றமாய்... துவண்டிடுவாங்க - சுரேன் கல்யாணப் பேச்சோ, உன்னை நிர்பந்திப்பது போலவோ பேசக் கூடாதுன்னுட்டான். ஆனா மேலும் ஒரு வாரம் நீ தங்கினா... அம்மாவின் ஏமாற்றம் கூடும். நீ 'சட்'டுனு ஒரு முடிவெடுப்பது எல்லாருக்கும் நல்லது!'' என்றான் கறாராய்.



7

அதாவது, 'உடனே இடத்தைக் காலி பண்ணம்மா!' என்கிறான் - ஏன்?

இந்த ஆளண்டாச் சோலையில் ஒரு பெண் வந்திருக்கச் சம்மதித்தது பற்றிச் சந்தோஷப் பட வேண்டாமா?

''இல்லை... நான் இங்கே கல்யாணம் செய்ய முடிவெடுக்கிறேனோ இல்லையோ... அது வேறு. ஆனால் என்னால் உங்களுக்கு நிறைய நஷ்டம்னு...''

''அநாவசியச் செலவு!'' - திருத்தினான்.

''சரி - அதை ஈடுகட்டுவது போல ஏதாவது உதவிட்டு..''

வாய் விட்டுச் சிரித்தான் - அச் சிரிப்பு நரேனின் இளமையை மீட்டுத் தந்ததை ஆச்சரியமாய்க் கவனித்தாள் -

''ஓஹோ? ஒரு வாரம் தங்கியே இழந்த சில லட்சங்களை மீட்டுத் தருவீங்களா - மேடம் லதாங்கி?''



அவனது நக்கல் ஓரளவு பழகி விட்டிருந்தது.

''எனக்கு அது மாதிரியான மந்திர மாயமெல்லாம் தெரியாது - ஆனால் சுரேனிடம் நம்பிக்கை ஊறுவது போலப் பேசுவேன் - நக்கலாய்ப் பேசி நோகடிக்காமல் ஊக்கப்படுத்துவேன்... இப்படி ஒரு அழகான பண்ணையும் அன்பான குடும்பமும் எல்லாருக்கும் வாய்த்து விடாதுன்றதை உணர்த்துவேன்... பிறகு அவர் இங்கே உழைக்கத் தயாராகிடுவார்.''

''அடடே... சொன்னதும் கேட்டிடுவானா? ஓ... அதான் காதல் மந்திரமா?''

எரிச்சல் மிக, அலட்சியமாய்ச் சொன்னாள் -

''நீங்க காதலிச்சதே இல்லைங்கறது புரியுது.''

ஆனால் உள்ளூரச் சிரிப்புத்தான் - இவளுக்கு மட்டும் காதலைப் பற்றி என்ன தெரியும்?

'உள்ளத்தின் பலவீனங்களில் மிக நல்ல பலவீனம் காதல்!' என்று ஒரு மேல்நாட்டு அறிஞர் சொன்னதில் இவளுக்கும் உடன்பாடே.

தனக்குப் பலவீனமான உள்ளம் கிடையாது என்பதிலும் முழு நம்பிக்கை!

அதனால்தான் விஷப் பரீட்சை போன்ற இந்த ஒரு வாரத் தங்கலுக்கு இவள் சம்மதித்ததே...

கமலம்மாளின் அன்பும் முக்கிய காரணம்தான்.

இப்படிப் பாசமான மாமியும் அமைதியான வாழ்வும் கிடைக்க லதாங்கி கொடுத்து வைத்தவள் - போதாததற்குக் கல்யாணமாகும் முன்னமே அவளைப் பணத்தால் அபிஷேகித்த சுரேன் தொடர்ந்து தங்கத் தட்டில்தான் தாங்குவான்... ஒரு குறையெனில் அது மூத்தவர்தான்!

சுருக்கெனத் தைக்கும் நாக்கு

நறுக்கெனக் குடையும் பார்வை...

நரேனுடன் சேர்ந்திருப்பது எளிதல்ல...

தன் கவலை இவளுக்கே சிரிப்பூட்டியது.

இது போன்ற அர்த்தமற்ற கவலைகளுக்கு ஞானாம் பாள் பாட்டி ஒரு கதை சொல்லுவார் -

விவசாயி ஒருவனது தோட்டத்தில் தக்காளி அமோக மாய் விளைந்திருந்ததாம் - ஆனால் அவன் முகம் வாடி யிருக்க, மற்றவர்கள் அது பற்றி விசாரிக்க,

'விளைச்சலின் சொத்தைத் தக்காளிகளை என் பன்றி களுக்குத் தீவனமாய்ப் பயன்படுத்தி வந்தேன் - இம்முறை எல்லாம் நல்ல தக்காளிகள் - ஆக என் பன்றிகளுக்கு எதைப் போடுவேன்?' என்று அங்கலாய்த்தானாம்!

ஏதோ தான் இக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டுக் காலமெல்லாம் இந்த நரேனைச் சகித்துக் குப்பைக் கொட்ட வேண்டுவது போல அசட்டுக் கவலை...

அவன் காதலித்ததே இல்லை போலும் என்ற குற்றச் சாட்டில் சற்று அயர்ந்து மௌனமானவன், கடைசியாய்ச் சொன்னான் -

''காதல் சோம்பேறிகளின் பொழுதுபோக்கு - எனக்கு அதற்கெல்லாம் பொழுதில்லை..!'' என்று.

''ஆமாமா. பொழுதை எல்லாம் மரங் கொடி யோடவே செலவழிங்க - ஆனால் அதில் வரும் காசை யார் மீது செலவழிப்பீங்க?''

''தானம், தர்மம் என்பதெல்லாம் உன் அகராதியில் கிடையாது போல, லதாங்கி?''

அப் பெயர் தன்னதாய் இல்லாவிட்டாலும், அவன் உச்சரித்த விதம் கடுப்பேற்றியது.



''அருமையாய்க் குடும்பம் நடத்துவதே ஒரு தர்மம் தான் - குடும்பத்திற்காக மேலும் ஆர்வமாய் உழைப் பீங்க - தொழில் விஸ்தரிக்க, மேலும் பல குடும்பங்கள் பிழைக்கும்.''

''ஓ... இந்த ரீதியில் காதல் மந்திரம் ஓதித்தான் சுரேனை வழிக்குக் கொண்டு வந்தியா? பாராட்டுக்கள்!'' - வழக்கமான ஊசிக் குத்தலுடன் திரும்பி நடந்தான் -

கதவு தட்டப்பட்டது.

''திறந்துதான் இருக்கு!'' - குரல் கொடுக்க, நுழைந்தது கமலம்மாள் - கால்களோடு இப்போது கண்களிலும் சிறு தயக்கம் -

சுரேன், இவளிடம் திருமண அல்லது தங்கள் பற்றிய பேச்சே எடுக்கக் கூடாது என்பதால் வந்த தயக்கம் போல.

''வாங்கம்மா... ஒரு குரல் கொடுத்தால் நானே வந்திருப்பேனே.''

''இருக்கட்டும்டா... அறையில வசதி போதுமா? மாடியில இதைவிட விஸ்தாரமான அறைகள் உண்டு - ஆனா நான் அடிக்கடி உன்னை வந்து பார்த்துக்க முடியாதேன்னுதான் இங்கேயே...''

''ரொம்ப வசதிம்மா... உங்களுக்குச் சிரமம்.''

இளையவளின் விழிகள் தன் துவண்ட கால்களைத் தடவுவது அறிந்து, மூத்தவள் விளக்கினாள் -

''இது எனக்குப் பிறவிக் குறையம்மா, லதா - ஊனமாய்ப் பெண் பிறந்ததில் எங்கப்பாவுக்கு வருத்தம்.''

''அதில் யார் தப்பும் இல்லையேம்மா - தவிர வேகமாய் நடக்க முடியலைங்கறதைத் தவிரப் பெரிய குறையில்லையே.''

பெயருள்ள
சித்தங்கற

பிர

களைப் பற்றினாள்,

டா... ஆனா எங்கப்பா
ஊனமாய்ப் பிறந்தது
அம்மாவைத் தள்ளி
யலானவங்க. ஆனதால்
க்கு இருபதானதும் ஒரு
ரக்கர் சீரோடு என்னை
ஏறினோம். நிறைவான
**வாழ்க்கைதான** மாய் ரெண்டு குட்டிச்
சிங்கங்க பிறந்ததும் அவர் மேலும் ஓங்கி உழைச்சார் - பஸ் ரெண்டு வாங்கி ஓட்டியதில் லாபமில்லை. பண்ணையின் லாபத்தையும் சேர்த்து முழுங்கியது புதுத் தொழில்... அந்தத் தடுமாற்றத்தில் அவர் ஆரோக்கியமும் போச்சு... ம்ப்ச்... அவருக்குப் பிறகு நரேன் எல்லாத்தையும் சரி பண்ணினான் - பஸ்களை விற்றுப் பண்ணையை ஸ்திரப்படுத்தினான் - பழங்களை ஏற்றிட்டுப் போக ஒரு லாரி உண்டு... போதும் - நிம்மதியாய் வாழறோம் - ரெண்டு மருமகள்ங்க வந்தால் வீடும் மனசும் நிறைஞ்சிடும்.''

பேச்சு எங்கு சுற்றினாலும் மருமகளிடமே வந்து நிற்கிறது என்பதைக் கவனித்தவள் பரிவுடன் புன்னகைத்தாள் -

கமலத்தின் கண்களும் இளையவளை ஆசையாய் ஆராய்ந்தன -

''நீ ரொம்ப அழகுடா லதா... ஆனா...''

இவளுக்குள் சிறு 'திக்!' - குட்டு வெளிப்பட்டு விட்டதோ? லட்சங்களில் புரளுபவள் இப்படி எண்ணெயும் கடலை மாவுமாய் வழிவாளோ என்ற சந்தேகமா?

''நீ ரொம்ப வெளுப்பில்லைன்னாலும் இதமான இஞ்சி நிறம். கொஞ்சம் அழுத்தமான நிறங்களில்



உடுத்தினால் மேலும் எடுப்பாய் இருப்பே - ஆனா உனக்கு வெளிர் நிறம்தான் பிடிக்கும்னால் நான் உன்னை வற்புறுத்தலை...''

'இது வெளிர் நிறமல்ல - முப்பது முறையேனும் அடித்துத் துவைத்ததில் வெளிறிய துணி!' என்று சொல்ல முடியாமல் -

''ஹிஹி... இனிப் புடவை வாங்கறப்ப 'பளிச்'சுனு...''

''இங்கே என்ன கடை கண்ணியா இருக்குது?, ஆசைக்கு வாங்கி உனக்கு உடுத்திப் பார்க்க? நீ தப்பா நினைக்கலைன்னா...'

''சொல்லுங்கம்மா... அன்பை எப்படித் தப்பாய்ப் புரிஞ்சுக்க முடியும்?''

''அடியம்மா ராஜாத்தி!'' என்று கன்னங்களைத் தடவியபடி, உரக்கக் குரல் கொடுத்தார் கமலம்மா -

''சுப்பு - அதைக் கொண்டு வா.''

வேலைக்காரப் பெண் ஒரு அகண்ட தோல் பையைக் கட்டிலின் மீது வைக்க,

அதைப் பிரித்த கமலம்மாள் -

''இதெல்லாம் நான் சில முறையே கட்டின புடவைங்க. அது... உனக்கு நெருடல்ன்னா சொல்லிடு, தங்கம்... இதில் ஒன்றையேனும் கட்டிக் காண்பிச்சா எனக்கு... சந்தோஷமாயிருக்கும்... உங்க மாமா போன பிறகு இதெல்லாம் கட்ட எனக்கு மனசாகலை.''

பேசியபடி எடுத்த சேலைகளின் ஜரிகை கண்ணைப் பறித்தது. பத்திரிகைகளின் பின்புற அட்டைகளில் கண்டு அதிசயித்த வகைப் புடவைகள் அவை. ஞானாம்பாளிடம்,

'இதெல்லாம் என்ன விலையிருக்கும், பாட்டி?' எனக் கேட்டு -

'பதினஞ்சு, இருபதாயிரத்துக்குக் குறையாது!' என்று வந்த பதிலில் வாயடைத்திருக்கிறாள்.

ஆக இங்கிருந்த பத்துப் புடவைகளின் மதிப்பே குறைந்தது லட்சம் ரூபாய் பெறுமே -

"என்னடா... பழங்காலப் புடவைகள்னு பார்க்கறியா...?"

"இல்... இல்லம்மா."

"அதிகமாய் விசேஷங்களுக்குப் போகாத எனக்கு இவை பயன்படலைடா - ஆனால் வரப் போகும் மருமகள்களுக்காய் அப்பப்ப காற்றாடப் போட்டு மாற்றி மடிச்சுப் பாதுகாத்து வரேன் - புதுசு போலில்லை?"

"ஆமாம்மா... மூத்தவருக்குப் பெண் தேடலாமே நீங்க?"

"நாம முதலில் அண்ணாந்து பார்க்கக் கூடிய உயரத்துக்குப் போயிடணும்மா - பிறகு பெண் தானே தேடி ஓடி வரும்னுவான்."

"அப்படீன்ன... இதுவரை யாரும் வரலையா?" உள்ளூர நிம்மதி யிருந்தாலும் 'அடப் பாவமே!' என்ற தொனியில் இவள் கேட்க, மூத்தவர் முறுவலித்தார் -

"வருவதை நரேன் பொருட்படுத்தினால்தானே! காதில் போட்டுக்கறதில்லை. சேலைகளுக்குள்ளேயே பொருத்தமான பட்டு ரவிக்கைங்க உண்டு. முதலில் இதைக் கட்டிக் காண்பியேன் - கறுப்பு ரவிக்கை உன்னிடமே இருக்கலாம்!" - கமலா ஆரஞ்சின் நிறத்தில் அழகிய புடவை ஒன்று நீட்டப்பட்டது.

"சும்மா வீட்டிலிருக்கையில் ஏதுக்கம்மா?"

"நான் கண்டு ரசிக்கத்தான் - தவிர எந் தம்பி - ஒண்ணுவிட்ட உறவுதான் - இங்கே விருந்துக்கு வரான் - உன்னைப் பார்த்து அசந்து போகட்டுமே!"



தனக்குப் புதிதாய்க் கிடைத்த பொம்மையைச் சிநேகிதிகளிடம் காட்டிப் பொறாமைப்பட வைக்கும் சிறுமி போலப் பேசினார் கமலம்மாள்.

"இந்த இளநீலத்தை நாளைக் காலை கோயிலுக்குக் கட்டிக்கோ - மழைத் துளி போல ஜரிகை சொட்டுகள். அபூர்வ டிஸைனில்லை?"

"ம்ம்... சுரேன் என்னைப் பற்றி உங்களிடம்..."

"நாளையைப் பற்றி நான் ஏதும் கேட்கலைடா... சரிதானா?"

"இப்ப வரப்போகும் மாமாவிடம் என்னைப் பற்றி..."

"எனக்குத் தெரிஞ்ச, ஒத்தாசைக்கு வந்த சர்க்கரைக் கட்டின்னே அறிமுகப்படுத்தறேன் - திருப்தியா?"

இவள் மோவாயைப் பற்றி முத்தமிட்டுக் கிளம்பினார்.

சாவகாசமாய் எண்ணெய் ஊறி அனுபவித்து நீராடிய பின், சில தையல்களிட்ட பட்டு ரவிக்கைக்குள் புகுந்து சேலையைச் சுற்றினாள் - வலது கையில் தங்கப் புள்ளி யிட்ட கனத்த கண்ணாடி ஜதை. பிடரியில் மிச்சமிருந்த ஈரத்தைக் காயவிட, தோட்டத்தில் வெயில் படும் நிலமாய்த் தேடி நின்றாள் -

"நினைச்சேன்... என்னடா இப்படி அநியாயத்திற்கு எளிமைக் கோலத்தில் வந்திருக்கிறாளேன்னு... ஒரே நாளில் வேஷம் அலுத்துப் போச்சா... ஓஹோ... அம்மா விடமிருந்து இப்படிச் சேலைகளை உருவிக்கப் போட்ட வேஷமா அது?"

நரேனின் குத்தலை முகம் சுழிக்காமல் ஏற்றுக் கொண்டாள், நேர்த்தி.



8

என்னதானிருந்தாலும் இக் குடும்பத்தை உயர்த்தத் தன்னலமின்றி உழைப்பவன்.

தம்பியை நேர்வழிப் படுத்தி விட முனைபவன்...

தாயை அலாதிப் பாசத்துடன் பேணுபவன்...

நல்ல குணம்தான்... ஆனாலும் அதை வெளிக்காட்டும் முறைகள்தாம்..., கைக்கருகே பழுத்துத் தொங்கிய பலாப்பழத்தை இந்த யோசனையுடன் வருடியவளுக்குச் சிரிப்பு வந்தது -

உள்ளே இனிய சுளைகளை மறைத்து, வெளியே முள் முள்ளாய் உறுத்தும் பழத்தைப் போலவே!

ஆனால் நரேனுக்குத் தாங்கவில்லை -

தன் குத்தலில் அரண்டு மிரளாமல் ரசனையாய்ச் சிரிக்கிறாள் என்றால்... அந்தப் புன்னகையில் சற்றுத் தடுமாறினான்.

''இது... இது... அம்மா உனக்குத் தந்த புடவையா?''

மாலைச் சூரியனில் பொன்னிறப் பட்டு தகதகத்தது -

கறுப்பு விளிம்பைத் தூக்கிக் காட்டிய ஜரிகை வேலைப்பாடு - அகண்ட கறுப்பு முந்தானை கொடியுடலை மூடிய பட்டிலும், இருக்கிறதா இல்லையா எனும் சன்ன நகையிலும், முழந்தாளை எட்டும் அடர்ந்த கூந்தலிலும் தான் வழி தப்பிப் பூலோகம் இறங்கிய தேவதை போலிருப்பதை நேர்த்தி அறியவில்லை - ஆனால் இவளைப் பார்த்த கண்களில் மிகுந்த ரசனையிருந்தது.

தன்னை ஒரு லயிப்போடு பார்த்தவனின் தாக்கம் தாளாமல், என்ன பேசலாம் என்றவள் யோசிக்க, மீண்டும் குதர்க்கமாய்க் கேள்வி வந்தது -

''ஆனால் வாங்கிய நகையைப் போடலியே... ஏன்.. ஒரே நாளில் நிறைய அதிர்ச்சிகளைத் தர வேண்டாமென்ற கருணை.''



இவள் விழித்தாள் -

''நகை... யேதும் அம்மா தரலை... தந்தாலும் போட்டிருக்க மாட்டேன்... இதுவே... விலையுயர்ந்ததாய்ப் படுது...'' என்றாள் மிருதுவான பட்டை நீவியபடி.

''ஒருவேளை இந்தப் புடவைக்கு நீ வாங்கிய நகை பொருந்தலையோ? வேறொரு செட் நகை வாங்கத் திட்டமா?''

இவளுக்குள் சற்று எரிச்சல் எட்டிப் பார்த்தது.

''நான் போட்டிருக்கிறதே போதும்... மேலும் வாங்க நினைச்சதில்லை.'' -

'வசதியில்லை' என்பதை மறைத்துப் பேசினாள் -

அவன் விழிகள் யோசனையுடன் இவளது விரல்களைத் துழாவுவதைக் கண்டதும்தான் நினைவு வந்தது -

சுரேன் லதாங்கிக்கு வாங்கித் தந்த வைர மோதிரம்!

அது தன் விரலில் இல்லையே.

''பயணத்தின்போது நான் விலையுயர்ந்த நகை ஏதும் போட்டுக்கறதில்லை..'' என்றாள் சமாளிப்பாக.

தானிருப்பது ஒரு நாடக மேடை - அதற்குத் தோதாய் வசனங்களைப் பேச வேண்டுமென்று தன்னையே உஷார்ப்படுத்திக் கொண்டாள் -

''அப்படீன்னா நாற்பத்து எட்டாயிரத்துக்கு ரசீது வந்ததே - அது நீ வாங்கியதற்குத்தானே?''

''எங்கே... எங்கே யிருந்து?''

''அது கூட நினைப்பில்லை... ம்ம்? சென்னையின் சொர்ணாம்பிகை நகைக்கடையிலிருந்து.''

''சென்னை...? நான் அங்கே...'' 'சுற்றுலாவிற்காகப் போய் ஏழு வருடமிருக்குமே!' என்று முடிக்க முடியாமல் திணறினாள் -

பொய் சொல்லுவது மட்டுமல்ல, மெய்யை மறைப்பதும் கூட ஒரு மகா அவஸ்தை என்ற எண்ணத்தோடு.

''ஒரு மாதம் முன்பே வாங்கிய பொருள்தான் - கிரெடிட் கார்ட் மூலம் வாங்கிய நகைக்குத்தான் ஒரு மாதம் கழித்துக் காசு அழுதால் போதுமே. இப்பதான் பில் கைக்கு வந்தது.''

இவள் பதிலேதும் சொல்ல முடியாமல் திணற, அவன் தொடர்ந்தான் -

''பார் லதாங்கி... இந்த நாடகம்... இதில் நீ போடும் வேஷம் ஏதும் உனக்குப் பொருந்தவில்லை.''

இப்போது ஏற்பட்ட அதிர்ச்சியில் நேர்த்திக்கு வார்த்தைகளுமே கூட மறந்து போயின!

''ஆயிரங்களும் லட்சமுமே உனக்குத் துச்சம் - நிமிடமாய்ப் பணத்தை ஊதித் தள்ளிட்டு மிக எளிமையானவள் போல இந்த வேஷம்... எப்படிப் பொருந்தும்?'' - கூர்ந்த அவன் பார்வை மறுபடி அவளைத் தடவியது -

கையில் கண்ணாடி வளையல்... ம்ம்? ஒருவேளை அம்மாவின் வைர வளையலையே வாங்கிடலாம்ங்கற திட்டமா?

ஆக இவள் அஞ்சியது போலில்லை என்றாலும் எல்லாவற்றையும் கவனிக்கிறான். பெண்ணின் ஆடை, அணிகலன் பற்றி ஏதுமறியாதவனும் அல்ல.

எதிரியின் பலம் அறியாமல் போரிடக் களத்தில் இறங்கிய பரிதவிப்புடன் நின்றாள்.

இவளை மீறி விழிகள் மன்னிப்புக் கோரின.

''பரவாயில்லை... ஏன்னா நீ வந்த பிறகுதான் அம்மா இப்படி உற்சாகமாய்ப் பேசறாங்க, சிரிக்கறாங்க... வீட்டை வளைய வர்றாங்க. அப்பா இறந்ததும் ரொம்ப ஒடுங்கிப் போயிட்டவங்க.''



''அம்மா எப்போதும் சந்தோஷமாய் இருக்கணும்.''

''ஆனால் நீ சுரேனிடம் இப்படிச் சொல்லலையே?'' - கண்களை இடுக்கியபடி, அடுத்த இடுக்கிப் பிடியைப் போட்டான். எதைக் குறிப்பிடுகிறான் என்று புரியாமல், நழுவவும் வகையின்றி, மறுபடி விழித்தாள்.

''ஒரு வாரம் மட்டும் இருப்பேன்... கல்யாணம் பற்றிய பேச்செடுக்கக் கூடாதுன்னு...''

''ஓ... அது வந்து...''

''இந்த ஒரே வாரத்தில் அம்மா தன் உடைமைகளில் பாதியையேனும் உனக்குத் தாரை வார்த்து விடுவார்கள் என்ற நம்பிக்கை.. ம்ம்?''

தன் பாக்கெட்டுகளில் கைவிட்டபடி சற்றே மோவாய் உயர்த்தி அவன் பேசிய விதம் ஒரு வித மிரட்டலாயும், மறுபக்கம் சற்று மயக்குவதாயும் இருக்க, அவசரமாய்த் தன் பார்வையைப் பிடுங்கிப் பக்கத்திலிருந்த பலாப் பழத்தில் பதித்தாள்!

''இன்று உங்க மாமா வருவதாயும்... அதனால் கொஞ்சம் கௌரவமாய் உடுத்தணும்னு அம்மா தந்தது இந்தப் புடவை.''

''ம்ப்ச்... ஏன் ஒரு வாரம் மட்டும் தங்கல்னு கேட்டேன்.''

''ஒரு பெண் இரு பிரம்மசாரிகள் இருக்கும் வீட்டில் அதிக நாட்கள் தங்கினால் ஒரு மாதிரியான பேச்சுக் கிளம்பும்!'' - பொறுமையாக விளக்க ஆரம்பித்தாள்.

''இங்கே யாரும் அப்படி இல்லாததைக் கற்பனை செய்து பேசுவதில்லை. தங்கள் வேலையை மட்டுமே கவனிக்கும் தொழிலாளிகள்.''

''ஆனாலும் யாரிந்தப் பெண் - எந்த உறவின் முறையில் இப்படி உரிமையாய் வந்து தங்கியிருக்கிறாள்

என்று யோசிக்கவுமா மாட்டார்கள்?'' - அவளையும் மீறிப் பேச்சில் சிறு குத்தல் சேர்ந்து விட்டது.

''அம்மாவின் உறவுக்காரப் பெண் என்றே பொதுவில் நினைப்பார்கள். ஆனால் நீ சுரேனுடன் மரத்தடியில் நின்று மணிக்கணக்காய்ப் பேசுவது சில யூகங்களுக்கு வழி வகுக்கும்தான்.''

தோள் குலுக்கினாள்.

ஆகப் பழி எல்லாம் இவள் தலையில்தான்!

வந்ததும் நேர்ந்த சிக்கலான சூழ்நிலை பற்றித் தான் சுரேனுடன் நீளப் பேசியது உண்மைதான்... என்றாலும்...

''இப்ப என்னை என்னதான் செய்யச் சொல்றீங்க?''

''உன் பெயருக்குப் பங்கம் வரக் கூடாதுன்னு நீ நினைப்பது சரிதான். ஆனால் அது உன் கையில்தான் இருக்கிறது... தோட்டத்தில் சுரேனுடன் நின்று பல்லைக் காட்டினால்...''

மறுபடி ஒரு தோள் குலுக்கல்.

அவனது விரிந்த தோள்களை அழுந்தப் பற்ற வேண்டும் போலொரு உந்துதல் எழ, அதைப் பல்லைக் கடித்து...

அவன் பேச்சுத் தொடர்ந்தது -

''ஆனாலும் இந்த ஒரு வாரத்தில் தம்பியை நம் தோட்டத்தை முழுசாய்ச் சுற்றி வரச் செய்தாலே கூடப் போதும்... பார்த்தால் இங்கு உழைக்க அவனுக்கு ஆசை எழும்.''

''இப்போ நாமும்கூட வெகு நேரமாய்ப் பேசியபடிதான் இருக்கிறோம்... இது அநாவசிய யூகங்களுக்கு இடம் தராதா?''

நரேனின் பேச்சை எப்படி நறுக்குவது என்று புரியாமல் சற்றுக் கடும் ஆயுதத்தையே உபயோகித்தாள் -



ஆனாலும் துளி நேரம் கலைந்த அவன் முக பாவனையில் ஒரு முறுவலும் எட்டிப் பார்த்து இவளை ஆச்சரியப்படுத்தியது -

''கடுகடுவெனும் உன் பாவனையைப் பார்த்தால் யாருக்கும் அந்தச் சந்தேகம் வராது, லதாங்கி!'' - என்றபடியே விலகினான்.

சுரேனின் மாமா வந்ததும் மரியாதை நிமித்தம் போய் வணங்கிய நேர்த்தியைக் கண்டவர் கண்களில் ஆவலான கேள்வி. ஆனால் கமலம்மாளின் முகத்தில் ஏமாற்றம்.

''ஏம்மா லதா... உன்னைத் தங்கச் சிலையாட்டம் பட்டுல பார்க்கக் காத்திருந்த என்னை ஏமாற்றிட்டியே...''

சமையலறையில் விருந்தினருக்காகச் சூடு படுத்திய சூப்பைப் பரிமாற எடுத்துக் கொண்டிருந்த இளையவளிடம் குறைப்பட்டாள்.

''நீங்க ஏம்மா அலையறீங்க? பெரியவரிடம் பேசிட்டு இருந்தால் நான் பரிமாற மாட்டேனா?''

''பேச்சை மாற்றாதடா தங்கம்.''

சிறு பிள்ளை போலக் குறைப்பட்ட குரலில் இவள் முறுவலித்தாள்.

''உங்களுக்கு ஒத்தாசைக்குன்னு வந்தவள், சும்மா உட்கார்ந்திருந்தால் எப்படிம்மா? வேலைக்கு என்... இந்த எளிய சேலைதான் வசதி.''

உண்மையில் தற்போது நேர்த்தி உடுத்தியிருந்த எளிய புடவையே அவளுடைய உடைமைகளில் சிறந்தது. யோகா பாட்டி போன பண்டிகையின்போது எடுத்துத் தந்த கார்டன் ஷிபான். தளிர்ப் பச்சையில் பொடி மஞ்சள் தூவிய அமைப்பு. சற்று நவீனமாய்த் தைக்கப்பட்ட ரவிக்கை - கூடவே கலகலத்த டஜன் வர்ண வளையல்கள் அவளை இந்தப் பெரிய இடத்திற்கு முரணாகத் தோன்றாமல் காத்தன.

"அது சரி - பழம் மோஸ்தர் புடவைகள் உனக்குப் பிடிக்காதுதான்... மதுரைக்கு ஃபோன் போட்டு நவீனமாய் ஏதும் வரவழைக்கவா?"

வேறு வினையே வேண்டாம்! நரேன் தயாராய்ச் சூடு படுத்தி வைத்திருந்த வாணலியில் தன்னைத் தூக்கி இட்டது போலாகுமே அது!

"பட்டை உங்களுக்குப் பிறகு கட்டிக் காட்டறேம்மா... வேலை செய்ய இது வசதி... தயவு பண்ணி..."

இவள் கெஞ்சலில் மசிந்து போனார், கமலாம்மாள் -

"அண்ணன் உன்னைப் பார்த்ததில் ரொம்ப உற்சாகமாயிட்டார் - பொண்ணு அமர்க்களமாயிருக்காளே - யாரு எவர்னு குடையறார்."

இவள் அஞ்சியது அது குறித்துத்தான் - பட்டில் பகட்டாய்ப் போய் நின்று கருத்தைக் கவர வேண்டாம் என்றுதான் எளிமையாய் உடுத்தியது.

ஆனால் மாற்றியும் பயனில்லை போலவே.

பெருமூச்சுடன் விருந்தைப் பரிமாறினாள் - ஆனாலும் அவர்கள் பேச்சைக் கேளாதிருக்க முடியவில்லை.

அண்ணனின் குடும்பத்தைப் பற்றிப் பிரியமுடன் விசாரித்த கமலம்மாள் தொடர்ந்தது தன் மூத்த மகன் நரேனின் பெருமைகளைப் பற்றி...

ஆனால் அண்ணன் குறுக்கிட்டார்.

"அந்த உழைப்புதான் தோட்டத்துப் பசுமையிலே தெரியுதேம்மா - ஆனால் உன் கடமை முடியலை... அதை நினைப்பில் வை. அதே போல நம் குடும்பமும் தழைக்கணும். தளிர் தளிராய் உம் பேரன் பேத்திங்க வீடு முழுக்க ஓடித் திரியணும்."

"ஆமண்ணா... இப்ப அந்த நம்பிக்கையும் வந்திருக்குது..."



"என்ன, பெண் பார்க்க ஆரம்பிச்சாச்சா?"

பெரியவரின் பார்வை தன்னில் பதிவதை உணர்ந்தவள், புலவ் பாத்திரத்தை மீண்டும் நிரப்புவது போல எடுத்துச் சமையலறைக்குக் கிளம்பினாள் -

தொடர்ந்த மௌனம் இவளது நடையை விரைவாக்கியது. தன் கேள்வி கிளப்பிய சங்கடம் உணர்ந்த பெரியவர், பேச்சை மாற்றினார் -

"ஆமா... அதென்ன பேர் - நேர்த்தி?"

பின் பாதி உரக்க ஒலிக்க, தன்னையும் அறியாமல் திரும்பி விட்டாள்

இவள் -

"கூப்பிட்டீங்களா?" - என்றபடி!



9

"ஒரு நிமிஷம் திகைச்சுட்டேன், நேர்த்தி!" - சிரித்தான் சுரேன்.

"ஐயோ... நானும்தான்... நின்று திரும்பிய பிறகுதான் இங்கே நான் நேர்த்தியில்லைன்னு எனக்கு உறைச்சுது!" சிரித்தாள் - "எப்படியோ இடையே புகுந்து சமாளிச்சீங்க."

"சமாளிச்சேனோ சொதப்பினேனோ... நம்ம எஸ்டேட்டின் பெயர் ரொம்ப அழுத்தமாய் லதாவின் மனசுல பதிஞ்சிடுச்சு போல... அதையே தன் பெயராய் நினைவுக்குமளவுன்னு ஏதோ உளறினேன். ஆனா அதற்கு ஈடு கட்டறது போல அண்ணனோடு இப்ப வங்கிக்குப் போன விஷயம் வெற்றி!"

பூரிப்பாய்க் கட்டை விரல் உயர்த்தினான்.

"இது பொதுமக்களுக்குப் பயன்படும் திட்டமென்பதால், வங்கி அதிகாரிகள் கேள்வி கேட்காமல் உதவணும்."

''கேள்வி யெல்லாம் கேட்டாங்க. ஆனால் நல்ல திட்டம், நிச்சயம் எங்க வங்கியின் மூலம்தான் நீங்க இதை அமல்படுத்தணும் - எங்களுக்கும் பெயர் கிடைக்கு மேன்னு ரொம்ப இணக்கமாய்ப் பேசியதில் நரேனுக்கும் சந்தோஷம் - அதிலும்...''

''சொல்லுங்க.''

''அது உன் திட்டமும்தான்னு கண்டு பிடிச்சதும்...''

''ஐயோ... ஏதோ சிலது சொன்னேன்... அதிலும் நான் இங்கே இறங்கியதும் சில பெண்கள் சொன்னதை வளர்த்து இப்படியெல்லாம் வசதிகள் செய்தால் உங்கள் பழ விற்பனை கூடும்னு...''

''கோடு போட்டால் அதிலிருந்து கோலம் வளைக்கிற ஆள் நம்ம அண்ணாச்சி... உன்னைப் போலவே... ஆக விலாவாரியாய் ஏதும் பெரிதாய் நான் விளக்காமலேயே திட்டத்தின் பெரும்பங்கு உன்னதுன்னு புரிஞ்சுகிட்டார்... தவிரப் பொறுப்பற்ற தம்பியிடமிருந்து அவர் பெரிதாய் ஏதும் எதிர்பார்க்கலை...''

''எல்லாரும் பிறக்கும்போதே பொறுப்போடவா பிறக் கறாங்க! வாழ்க்கையில் போகப் போகப் புரிஞ்சு ஏற்றுக் கறதுதான்.''

நன்றி என்பதாய்த் தலை வணங்கினான் சுரேன்.

''அனுசரணையாய்ப் பேசறே, நேர்த்தி... அம்மாவும் என்னை விட்டுக் கொடுத்தே பேச மாட்டாங்க.''

முகம் சிவந்தவள், ''நரேன் என்ன சொன்னார்?'' என வினவினாள்.

''லதா மந்திரம் சிறப்பாவே வேலை பார்க்குதேன்னு கேலிதான் - வேறென்ன?''

இப்போது அவளுள் கோபச் சிவப்பு...



''ஏன் எப்போவும் இடக்காய்ப் பேசறார்... ஏதும் காதல் தோல்வியா?''

விபரம் புரியாதவன் விழித்தான் -

''என்ன முழிக்கறீங்க?''

''காதலே பண்ண முடியாமல் இருப்பதுதான் காதல் தோல்வியா?''

ஒரு கணம் யோசித்தவள் வாய்விட்டு நகைத்தாள் -

''ச்சே... நீங்களும் நக்கல் பேர்வழிதான்...''

''பிறகென்ன? முதலில் காதல் தோன்றினால்தானே அது தோல்வி அடைய? நரேனுக்குக் குடும்ப நிலையை உயர்த்துவது ஒன்றேதான் குறி. அதைச் சாதிப்பதில் அவன் காதலில் விழுந்து தடுமாறலை... அம்மா நமக்காகப் பெண் பார்ப்பதுதான் சரியாய் வரும்னு எனக்கு உபதேசம் பண்ணினவன்... ஆக, காதலிக்கும் வாய்ப்பேயில்லை.''

''நீங்களும் அண்ணாவின் ஆலோசனையை ஏற்றுக்கலை.''

வருத்தமாய்த் தலையசைத்தான்.

''கேட்டிருந்தால் இந்த அநாவசிய வருத்தம், பண நஷ்டம் நேர்ந்திருக்காது.''

''சமீபமாய் மேலும் 48,000 பில் வந்துதாமே! உங்கண்ணாவுக்கு என் மேல் ரொம்ப ஆத்திரம்.''

''கார்ட் மூலம் வாங்கினதிற்கான செலவு ஒரு மாசத் திற்குப் பிறகு தான் பழுக்கும்... மன்னிக்கணும். நேர்த்தி... உங்களைக் காய்ச்சினானா?''

''பின்னே? ஆனால், பாவம்! அவருக்கு ஒரே குழப்பம், இப்படி ஆயிரம், லட்சம்னு ஊதற பெண் இப்படிப் பரிதாப எளிமையில் இருக்கிறாளேன்னு.''

''இருக்கட்டும்... நேர்த்தி பண்ணையின் விஸ்தீரிப்பை நான் விவரிச்சதும் அண்ணன் திறந்த வாய் மூடலை.''

குறும்புக்காரக் குழந்தைகளாய் இருவரிடமும் சிரிப்புப் பொங்கியது.

''இத்தனை நாள் பணத்தைத் 'தா தா'ன்னு அரிச்ச தம்பி, இப்போது புதுப்புதுத் திட்டங்களோடு, அதை அமல்படுத்த வங்கிக்கும் கூட்டிப் போனால்...? அதிலும் நீ சொன்னது போல மாமாவிடம் அது பற்றிப் பேசி, வங்கிக்குத் தேவையான விண்ணப்பத்தையும் நான் பக்காவாய்த் தயாரித்து வைத்திருந்தேனா...''

''ஆகக் கடன் கிடைச்சிடும் - வட்டி விகிதம்?''

''பொது நன்மையைக் கருத்தில் கொண்ட திட்டம் என்பதால் மிகக் கம்மி. இருக்கறதைப் போட்டுக் கட்டட வேலையை ஆரம்பிச்சுடலாம். இப்படி ஒரு சுகாதார ஓய்வறையை நகர்மன்றமே கட்டலாமான்னு யோசித்ததாம்.''

''அப்படீன்னா வெறும் கான்ட்ராக்ட் மட்டுமே நாம எடுத்துக் காசும் பார்க்கலாமே?''

''அடடா... அண்ணனையும் மிஞ்சும் தொழில் மூளை!''

''அல்லது இடத்தை இலவசமாய்த் தந்து விட்டு - ஓய்வு, கழிப்பறைகளை அரசாங்கம் கட்டட்டும். நீங்க சிற்றுண்டி, பழச்சாலை, சில கடைகளைச் சுற்றிலும் போட்டால் வியாபாரம் அமோகமாயிருக்கும்.''

கைதட்டல் ஓசை இருவரையும் உலுக்க, சுற்று முற்றும் பார்த்தார்கள் -

தன் உற்சாகத்தில் சற்றுக் குரல் உயர்த்தியே பேசிய தால் விஷயம் நரேனை எட்டிவிட்டது - வந்து நின்ற வனைக் கண்டதும் புரிந்தது.

''இது இன்னும் அற்புதமான திட்டம், லதா... குறுக்கிட்டதற்கு மன்னிக்கணும் - தொழில் சம்பந்தமாய்ப் பேசியதால் காதில் ஏற்றிக்கிட்டேன் - நகர்மன்றத் தலை வரிடம் இது பற்றியும் பேசணுமே, சுரேன்... நன்றி லதா.''



நையாண்டியாய் லதாங்கி என்று இழுக்காமல் இயல் பாய் அழைத்துப் பாராட்டியதில் குளிர்ந்து போனாள் -

''வங்கியின் குருமூர்த்தி ஸாரும் நமக்குப் பரிச்சய மானவர் - ஆக, நாளை அவங்க கேட்ட தகவல்களோடு வங்கிக்குப் போறோம் - நீயும் வர்றே லதா.''

பூரித்தாலும் தன்னிலை மறந்தாளில்லை.

''எனக்கென்ன தெரியும்? கோயிலுக்குப் போய் உங்களுக்காய் வேண்டிக்கறதைத் தவிர.''

கமலம்மாவிற்குத் தனியே பட்டுப் புடவையை உடுத்திக் காட்டியவள் வெளியே மிக எளிமையாகவே உலவினாள் - அலங்காரப் பதுமையாய் உலவிக் கருத்து களைக் கவர விரும்பவில்லை.

மாமா நேர்த்தி என்று சொல்ல, 'கூப்பிட்டீங்களா?' என்ற அசட்டுத் தனத்தை விட்டு, இப்போது வியா பாரத்தில் மூக்கை நுழைக்கும் அதிகப் பிரசங்கித்தனம் வேறா?

முதலீடு போட்டாலும் காலப் போக்கில் நல்ல வரு மானம் கிட்டும் - மலையேறும் பயணிகளின் ஓய்வுக்காய்ச் சில அறைகள் - சிறுவர் விளையாடச் சிறு பூங்கா, அத்தியாவசியப் பொருட்களை விற்கும் கடை... இப்படி விஸ்தீரித்துப் போக, சில ஆண்டுகளில் லாபம் நிச்சயம் - நரேன் குற்றம் சாட்டியது போலத் தன்னால் ஏற்பட்டதாய் அவன் கருதும் நஷ்டத்தை இப்படி ஒரு மறைமுக வழியில் ஈடுகட்டி விடலாம்...

தன்னை எத்துணை ஆர்வமாய் உடன் வரச் சொல்லி அழைத்தார்.

ஆனால் இப்படிப் பூரித்துப் போவது அசட்டுத்தனம்.

இன்னும் நான்கு நாட்களில் இங்கிருந்து போக வேண்டியவள், நாடகமாடித் தங்கியிருப்பவள் வேறு...

இப்படிப் பெருமிதப் படுவது முறையல்ல - இப்படி அடக்கியதையும் மீறி அவளது மனம் சந்தோஷத்தால் எம்பிக் குதித்தபடியேதான் இருந்தது..!



10

வீட்டில் சூழல் மாறித்தான் போயிருந்தது. தாயின் முகத்தில் முறுவலைக் காண மகன்கள் ஏங்கியது போய்த் தன் இரு மகன் களின் உழைப்பை, ஒற்றுமையைக் கண்டு, நிஜமாகவே அத் தாய் பூரித்து மகிழ, அச் சிரிப்பில் மகன்களின் உற்சாகம் எம்பி ஏறியிருந்தது.

திங்களன்று காலை டவுனிற்குக் கிளம்பிய நரேன், இவளையும் வம்படியாய்க் காரில் ஏற்றி விட்டான்.

''ஏதோ எனக்குத் தோன்றியதைச் சொன்னேன்... எனக் குப் பெரிய அதிகாரிகளுடனெல்லாம் பேசிப் பழக்கமே யில்லை...''

''இருக்கட்டும் - புடவைக் கடையில் விற்பனைக்கு மெத்தப் படித்த அதிகாரிகள் நிற்பதாய் நான் கேள்விப் பட்டதில்லை.''

இப்போது குலுங்கிய அவனது தோளில் அலட்சியத் தூடே அன்பும் தெரிந்தது. சிரிப்பிலும் குத்தலில்லை - குறும்பு மட்டும்தான். அதில் வெகு இளமையாய்த் தெரிந்தவனை ஆர்வமாய்ப் பார்த்திருந்தாள்.

''என்ன?''

''இல்லை... நீங்க என்ன சொல்ல வர்றீங்க...?''

''நீ போகப் போவது புடவைக் கடைக்கு.''

''அது நான் போகத் தேவையற்ற இடம்னு நீங்க நினைப்பீங்க.''

இழுத்தாள்.



''அடிக்கடி போகத் தேவையில்லை... ஆனால் அவ்வப்போது போகலாம் - அது அவசியமும் கூட.''

''புரியலை...'' - என்றபடி, தோள் குலுக்கியபோது தான், தன்னையும் நரேனின் பழக்கம் தொற்றிக் கொண்டதை உணர்ந்தாள் -

தன்னை மிகவும் பாதிக்கிறான்தான்...

இவளது சலனம் புரியாமல் தொடர்ந்தான் -

''நேற்றும் கோயிலுக்கு அதே புடவையைக் கட்டி யிருந்தே.''

ஆக அதே பச்சை, மஞ்சள் கார்டன் புடவை மறு நாளும் உடுத்தப்பட்டதைக் கவனித்திருக்கிறான் -

''ம்ம்...''

''கொண்டு வந்த எட்டில் அதுதான் உனக்கு மிகப் பிடித்த சேலை போலும்ன்றது ஆயாவின் அபிப்ராயம்.''

இப்போதிவள் முகம் அவமானத்தால் சிறுத்துச் சிவந்தது. மிக மிருதுவாய் மன்னிப்புக் கோரியது அவன் குரல்...

''ஸாரி லதா - இப்படி உளவறிவது தப்புத்தான் - பட்டுக் கட்டிய உன்னை உரிமையாய்த் திட்டியவன் உள்ள நிலவரத்தையும் தெரிஞ்சுக்கணுமே.''

''அதனால? வீட்டிற்கு வந்த பெண்ணின் சேலைகளை எண்ணிச் சொல்லுன்னு...''

''நோ.. நோ. அத்தனை மட்டியில்லை நான். லதாம்மாவின் பெட்டிகளை வைக்க அறையில் போதிய இடமிருக்கான்னு கேட்டேன். பதிலுக்கு ஆயா - 'எங் கேய்யா - கொண்டு வந்தது ஒரே ஏர்-பேக்தானே!'ன்னதும் -

''அதில் நாலைந்து செட் உடைகளைக்கூட வைக்க முடியாதேன்னு மறு தூண்டிலை வீசினேன். 'நைலக்ஸ்

சேலைன்றதால் எட்டுப் புடவைகளை மடிச்சு வச்சிருக்காங் கன்னு வந்தது மீன்!''

மீன் பிடித்த விதம் சுவாரஸ்யமென்றாலும், தன்னைப் பற்றி அவனறிந்த தகவல் நேர்த்திக்கு ரசிக்கவில்லை. போடும் வேஷத்திற்கு மிக முரணான தகவல் அல்லவா? தவிரத் தன் ஏழ்மையை வெளிச்சம் போட்டுக் காட்டிச் சிறுமைப் படுத்துவானேன்...

ஆனால் அந்த விவரம் நரேனைக் குஷிப்படுத்துவது போலப் பட்டது.

''ஒரு பெண்ணிற்கு ஒரு டஜன் புடவைகளாவது வேண்டாமா... அதான் மேலும் நாலு வாங்கப் போறோம்.''

''அதை முடிவு பண்ண வேண்டியது நான்!'' - கெத்தாய்ப் பதிலளிக்க முயன்றாள் -

''பரிசாய்த் தருவதை ஏற்றுக் கொள்ளலாமே?'' - அவனது குழந்தைக் குரல் இவளை ஆச்சரியப்படுத்தியது.

நாடியில் கரப்பான் பூச்சி ஒன்று ஊருவது போன்ற தாடியுடனும் கம்பளிக் குல்லாவுடனுமிருந்த அந்தக் காஷ்மீரி எடுத்துப் பரப்பிய சேலைகளைப் பிரமிப்பாய்ப் பார்த்தாள் -

மிக மிருதுவான பட்டு... தூக்கிய கைகளிலிருந்து நழுவி வழிந்த மிக மிருதுவான பட்டு... தூக்கிய கைகளி லிருந்து நழுவி வழிந்த மென்மையில், பொறுமையும் திறமையுமாய் நெய்த பூ வேலைப்பாடு.

''அபூர்வமான அழகு...'' - பாராட்டினாள்.

''இது காஷ்மீர நெசவு... இதைக் கட்டினால் நீங்களும் எங்க ஊர் பெண்களைப் போலவே தேவதையாட்டம் தெரிவிங்க...''

பீற்றினார் கிழவர்!



''ஆனால்... இதன் விலை...?''

''மூவாயிரத்துக்குள்ளேதான்... விலை கூடியவையும் உண்டு. ஆனால் அன்றாடம் கட்டும் புடவைகளைக் காட்டிக் கேட்டதால்தான் இவை.''

வார்த்தைகள் அகப்படாததால் வெறுமே இவள் வாய் திறந்து மூடியது.

''ரொம்ப நன்றி... இதை யெல்லாம் மடித்து வைக்க உதவட்டுமா? நான் பிறகு... பிறகு வர்றேன்.''

அவர் இவளது உதவி தேவைப்படாது என்றுவிடத் தப்பி ஓடினாள் - நரேன் அச்சிறு வணிக வளாகத்துள் இல்லை... அரை மணி நேரங் கழித்தே தன்னைச் சந்திப்பதாய்ச் சொல்லியிருந்தான். இவளது மணிக்கட் டிலிருந்த பழுப்பேறிய கடிகார டயல் பத்து நிமிடங்களே கழிந்திருந்தன என, மெள்ள நடக்கலானாள் - வெளியே போகும் போது போடச் சுமாரானதாய்த் தோல் செருப்பு இருந்தாலும், வீட்டினுள் உபயோகிக்கும் ரப்பர் செருப்பு உரிந்து பரிதாபமாய்க் கிடந்தது - புது 'ஹவாய்' வாங்கு வதற்காய் அடுத்திருந்த 'பாட்டா'வில் வெகு சாவகாச மாய்த் தேடியும் மேலும் எட்டு நிமிடங்களையே கரைக்க முடிந்தது.

மறுபடி கடைகளின் முன்னாக நடந்தவளின் கால்கள் நின்றன. விசிறி போல விரிக்கப்பட்ட வண்ணச் சேலை களின் வசீகரத்தில் கண்கள் சிக்கியதால்...

அதோ அந்த மூன்றாம் சேலை... ஆழ்ந்த சிகப்பில் பொடிப் புள்ளிகளிட்டது - முந்தானையில் புள்ளிகளூடே மின்னும் வெள்ளிப் பொட்டுகள்.

விலையை விசாரித்து, ஒத்து வருமாயின், அதை வாங்கி விடுவதென முடிவு செய்தாள். தன்னை ஒரே புடவையில் பார்க்கும் சங்கடத்திலிருந்த மற்றவர்களுக்குச் சற்று விடுதலை!

ஆனால் நுழைந்து விலை விசாரித்தவளைக் கடைக்காரர் லேசில் விடுவதாயில்லை. கடையில் ஈயோட்டும் வேளை என்பதால் கிடைத்த வாடிக்கையாளரின் கையில் இரு புடவைகளையேனும் வைத்து விடும் மும்முரத்தில் மேலும் புடவைகளைப் பரத்தினார்.

''இல்லைங்க... அந்தச் சிகப்பு என்ன விலைன்னு மட்டும்...''

''விலை கிடக்குதும்மா -ஸார் நமக்குத் தெரிஞ்சவர் தான் - பிடிச்சதை எடுங்க - இப்பெல்லாம் ரவிக்கையும் இணைஞ்சே வருதே - நம்ம ரஹ்மது டெய்லரிடம் சொன்னா ஒரே நாளில் தைச்சுத் தந்திடுவான் - தெரிஞ்ச பஸ் மூலம் பண்ணைக்கு அனுப்பி வச்சுடறேன்.''

ஆகத் தான் நரேனுடன் வந்து இறங்கியதைப் பார்த்ததால்தான் இத்தனை தடபுடல்...!

''அந்தப் புடவை எவ்வளவு?''

இவள் விடமாட்டாள் என்பது புரிந்து மேலேறி அதை அவிழ்த்த நேரம் மற்றொரு வாடிக்கையின் குரல் குறுக்கிட்டது.

''ஸாக்ஸ் பார்க்கணும்.''

அதட்டலாய் வந்த குரலில் அவசரமாய் இறங்கிய கடைக்காரர், வந்த ஜோடியைக் கண்டதும் மேலும் பரபரத்தார்.

''இருக்கேம்மா - ஆங்க்கர் போதுமா?''

''பின்னே? ஸ்காட்லண்ட் யார்னா இங்கே கிடைக்கும்?''

எள்ளியவளை ஓரக்கண்ணால் நோட்டமிட்டாள் நேர்த்தி.

சற்று விநோதமான ஜோடிதான்.

அவன் கரடி போல மேனி யெங்கும் ரோமத்துடன்... அதன் கருமையை எடுத்துக் காட்டுவதற்கே போலக் கழுத்திலும் கையிலும் தக்கை தக்கையாய்த் தங்க நகைகள்.



பல வர்ணங்களால் மெழுகிய சட்டை - இறுகிய பான்ட். மெழுகுப் பொம்மை போலிருந்த பெண்ணின் அலங்காரமும் அதீதம்தான்.

விதவிதமான சாயங்களின் அப்பல்... இதையெல்லாம் கழுவினால் உடனே போய்விடுமா என்று அநாவசியக் கவலையுடன் யோசித்தாள் நேர்த்தி!

அதிலும் கூந்தலில் அவளிட்டிருந்த சாயம் போல எளியவளான நேர்த்தி இதுவரை கண்டதேயில்லை!

கூந்தலைப் பாத்திகளாய்ப் பிரித்து மாற்றி மாற்றிச் சிவப்பிலும் பொன் பழுப்பிலுமாய் முக்கி எடுத்தது போன்ற ஒரு விநோத அமைப்பு.

தலையை லேசாகக் குலுக்கி, மெல்லிய விரல்களால் அவள் தன் கூந்தலைச் சிலுப்ப, காதிலும் விரல்களிலும் கிடந்த நகைகள் ஜாலமாய் வெட்டின.

'இதெல்லாம் வைரம் போலும்...' நினைத்தபடி தன் சிவப்புச் சேலையை நீவினாள், நேர்த்தி - அதன் விலைப் பட்டியல் முந்நூறு என்று தெரிவித்ததால், திருப்தியுடன் அதை வாங்கிக் கொள்ள முடிவெடுத்தாள்.

இவளைப் பணிவுடன் பார்த்து நயந்தார் கடைக்காரர் -

''வேறேதும் பார்க்கறீங்களா... ஐந்தே நிமிஷங்கம்மா...''

''பரவாயில்லை - இருக்கேன்.''

இவள் நகர்ந்து கொள்ள, வந்த ஜோடி சுவாரஸ்யமாய்க் காலுறைகளைப் பார்வையிட்டது.

''ச்சே... இதெல்லாம் நான் வாங்கக் கூடிய ரகமே யில்லை ஷிவ் - ஜோடி இருபது ரூபாய்... ஆனா இந்தக் குளிருக்குக் காலுறை போட்டால்தான் தாங்கும்... ஆக, இது மட்டும் போதும்...''

அவள் நுனி விரலால் ஒன்றைத் தொட்டுக் காட்ட, ''நான் இதை வாங்கிக்கட்டுமா லதாங்கி?'' பவ்யமாய் அனுமதி கோரினான் அவளது 'ஷிவ்.'

ஒரு உதட்டுப் பிதுக்கலுடன் வெளியே நடந்தவளைச் சிறு யோசனையுடன் நேர்த்தியின் பார்வை பின் தொடர்ந்தது.

சற்று அபூர்வமான பெயர்தான் -

ஒருவேளை இவள்தான் சுரேனின் லதாங்கியா? இப்படிச் சாயமேற்றிய கூந்தலைத்தான் அவன் தன் தாயிடம் புகழ்ந்திருந்தானோ? சிங்கத்தின் பிடரி போன்றிருந்த இந்த அலங்காரத்தைக் கமலம்மாள் கண்டால்...?

இவளுக்குச் சிரிப்புப் பொங்கியது!



# 11

சகோதரர்கள் இருவரும் இத்தனை விரைவாய்க் காரியத்தில் இறங்குவார்கள் என்றவள் நினைத்தாளில்லை.

ஆளுக்கு ஒரு வேலையாய்ப் பிரித்து முடித்து, மறுபடி பண்ணைக்குத் திரும்பும் போதே, உடன் மூர்த்தி எனும் கட்டட நிர்வாகி ஒருவரை ஏற்றிக் கொண்டனர்.

இவளுக்கும் விளக்கம் கிடைத்தது -

''நிலத்தை அளந்து, எடுத்து எங்கிருந்தால் வசதி, எந்த அளவில் வைக்கலாம்னு வரைபடத்தோடு முடிவு செய்து வைத்தால், வங்கி அதிகாரிகள் கடனை இன்னும் துரிதப்படுத்துவாங்க.''

''தவிர இருப்பதைப் போட்டு நாம அடிப்படை வேலைகளையும் ஆரம்பிச்சுடலாம்...''

ஒரு சதுர அடிக்கான செலவு என்ன - சமையல், பராமரிப்பு, பரிமாறும் வேலைக்கு உள்ளூர் ஆட்கள் தேவலையா அல்லது வெளியூர் நபர்களை வரவழைப்பதா என்று விதவிதமான விவாதிப்புகள்.



''உள்ளூர்க்காரங்களுக்கு வேலை தர்றது வசதி - வெளியூரிலிருந்து வரும் வேலையாட்களுக்கு நாமில்ல இட வசதி செய்து தரணும்?''

இவளும் சம்பாஷணையில் உற்சாகமாய்ப் பங்கெடுத்துக் கொண்டாள். ''ஏன்... பண்ணைக்கு வலதுபுறம் பயன் படாமல் நெடுக ஓடும் ஒரு கட்டடம் இருக்குதே! அதில் ரெண்டு கழிப்பறையைச் சேர்த்துட்டால் போதுமே. பரிமாறுவது கூட இப்ப ஒரு கலையாய்க் கற்பிக்கப்படுவது - முறையாய்ச் சமையலும் கற்றவங்க வந்து செய்தால் உங்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும் - அவங்க செய்றதை, பரிமாறுவதைப் பார்த்து நம்ப உள்ளூர் ஆட்களும் வேலையில் தேறட்டும்... பொதுவாய் நல்ல தரம் கிடைக்கும்...''

ஆர்வமான அவள் கருத்துக்களை ஆவலாய்க் கேட்டுக் கொண்டனர்.

''நிச்சயமாய்... லதா, உனக்குக் களைப்பாய் இருக்கும்... ஆனாலும் இங்கே கூட நின்றால் எங்களுக்கு இப்படிப் பல நல்ல ஆலோசனைகள் கிடைக்கும்.''

நரேனின் வேண்டுகோளைக் கேட்டதில் ஆச்சரியம் என்றாலும், இவள் பிகு பண்ணவில்லை.

அவசரமாய் மதிய உணவை முடித்தவர்கள், நிலத்தை அளக்க, குறிக்க ஆரம்பிக்க, இவள் அவற்றைக் குறிப்பெடுக்கலானாள்.

''அம்மா குடை தர... பிடிக்கச் சொன்னாங்க...'' என்றபடி குடையுடன் வந்து நின்றாள் ஒரு பணிப் பெண்.

''சரி... அதுக்கு நீ எதற்கு... குடை மட்டும் போதுமே...''

சற்று நேரம் குடையுடன் நின்று எழுத முயன்றவள், பணிப்பெண்ணின் தலை மறைந்ததும் குடையை மடக்கி விட்டுக் காரியத்தில் கண்ணானாள்.

''முதலில் கழிப்பறைகள்... அந்த வசதி இல்லாத தால்தான் உங்களுக்கு இந்தச் சாலையோர ஓய்வகம் கட்டும் பொறியே கிளம்பிச்சு...''

மூர்த்தி ஆரம்பித்தார் -

''மன்னிக்கணும், ஸர் - அது அத்தனை பாங்காய் இராது. கண்ணைப் பறிப்பது போல ஒரு கைகாட்டி மரம் - அதில் வெவ்வேறு நிறப் பலகைகள் இங்கிருக்கும் வசதிகளைத் தெரிவிக்கட்டும் -

சிறுவர் பூங்கா, உணவகம், ஐஸ்க்ரீம், கழிவறைகள், தலைசுற்றல் காய்ச்சலுக்கான எளிய மருந்துக் கடை.... ம்ம்... குளிருக்குத் தேவைப்படும் மப்ளர், காலுறை, சால்வைகள் விற்கும் ஒரு சின்னக் கடை... இந்த முன் னேற்பாடுகள் இல்லாமல் வருபவர்களும் இருப்பாங்க...''

''க்ரேட்!'' சுரேன் கண்களை விரித்தான் - ''அப்ப முதல்ல சிறுவர் பூங்கா வரட்டும், மூர்த்தி ஸர்.''

''ம்ம்... அதில் குட்டியாய்ச் சறுக்கு, ஊஞ்சல், ஒரு கூண்டில் கிளி, குருவிகள்னு...''

''பிரமாதம்...'' தோன்றியவை, அதே வேகத்தில் மறந்தும் போகும் என்பதால், அத்தனையையும் குறித்து வைத்தாள் -

தேநீரோடு வந்த பணிப்பெண் மறுபடி குடை பிடிக்க, நேர்த்தியின் சங்கோஜத்தைக் கண்ட நரேன் நகைத்தான்.

''இது அம்மாவின் திருப்திக்கு... இருக்கட்டும்... இது வும் கூட ஒரு தோரணையாய்தான் தெரியுது...'' என்றபடி.

பேருந்து ஒன்று மகா இரைச்சலுடன் கடக்க, அதி லிருந்து ஒரு கூவல், ''நேர்த்தி'' என்று கேட்டது. தன்னிச் சையாய்த் திரும்பத் துடித்த தலையைத் தடுத்து நிறுத்தி னாள் - பண்ணையின் பெயர்ப் பலகையை யாரோ உரக்க வாசிக்கிறார்கள் - அவ்வளவுதான்... அசடாட்டம் திரும் பிப் பார்க்கக் கூடாது.



மதிய வெயிலில் ஆரம்பித்த பணி இருட்டும் வரை வளர்ந்து ஓரளவு திருப்தியாய் முடிய வீடு திரும்பினார்கள் -

இரவு உணவை அனைவருக்கும் பரிமாறிய கமலாம் மாளுக்குக் குறைதான் - ''லதாவை ஏம்ப்பா வறுத்தெடுக் கணும்?''

''என்னம்மா - திட்டத்தின் அச்சாணியே மேடம் லதா தான் - எப்படி உருவாக்கலாம், விஸ்தீரிக்கலாம் என்ற தோடு கூடவே நின்றதால்தான் வேலை சீக்கிரமாய் முடிஞ்சது.''

''ம்ம்... ஏம்மா இவ்வளவு நாளாய் நீங்க இப்படி ஏதேனும்... அதாவது ஒரு பெண்ணின் பார்வையிலிருந்து 'ஐடியா' தந்திருக்கலாமே...? நீங்க கோடு போட, நாங்க அதில் ரோடு வளர்த்திருப்போம்ல?''

''அடடே... என்னையே மட்டம் தட்ட ஆரம்பிச்சாச்சா? எனக்கென்னப்பா தெரியும்? அதற்குத்தான் சின்னவளா, சூட்டிகையாய் மருமகள் வரணும்ங்றது.''

இதுவரை கிடைத்த புகழ்ச்சியில் சற்று நெளிந்த நேர்த்தி, இப்போது உஷாரானாள்!

'மருமகள்' என்ற வார்த்தையில் அவளது குற்ற உணர்வும் பயமும் நெருடுவதைப் புரிந்த சுரேன் -

''மருமகள்ன்ற பேச்சை விடுங்கம்மா - லதா தொடர்ந்து இங்கே தங்கட்டும் - ஒரு புத்திசாலியான பெண்ணாய், சிறந்த காரியதரிசியாய், கடும் உழைப் பாளியாய்...''

கை நீட்டி முழங்கியவனைத் தடுத்துச் சிரித்தாள் - ''போதும் சுரேன்... ப்ளீஸ்...''

பேச்சு தானாகவே திசை மாறியது...

''யம்மா, ஜிக்கிக்கு நோவு கண்டிருச்சும்மா...''

பணிப் பெண் சொல்லவும், பேச்சு வீட்டு நாயைப் பற்றியானது.

''ஜிக்கி கர்ப்பமாய் இருந்ததா என்ன?'' கேட்டான் சுரேன்.

''ம்ம்... நான் பார்த்துட்டு வர்ரேம்மா!'' என்று எழுந்த நேர்த்தியைக் கமலம்மாள் தடுத்தாள் -

''வேண்டாம்டா... இந்நேரம் புதுமுகம் கண்டா ஜிக்கி பயந்துக்கும் -கடிச்சாலும் கடிச்சிடும்... போகாதே.''

''அதற்கு என்னை நல்லாத் தெரியும்மா... தினம் பார்ப்பேனே... அதை ஒரு தரம் பார்த்தால் எனக்கும் திருப்தி... கூட ரெண்டு சாக்கு விரித்து, ஒரு தட்டில் பாலும் வைக்கணும்...''

''வெட்டினரி டாக்டருக்கு வேணுமானால் ஃபோன் போடறேன்... ஆனால் இதுவரை அதற்குத் தேவையே வந்ததில்லை,'' என்றபடி நரேன் எழுந்தான் -

கால்நடை மருத்துவர் வருவதற்குள் ஜிக்கி நான்கு குட்டிகளை ஈன்றிருந்தது. மருத்துவர் தந்த சில சத்து மருந்துகளை வாங்கிக் கொண்டாள்.

மறுநாள் யாரோ சமையலறையில் உருட்டும் சத்தத்தில் விழித்த நரேனுக்கு அங்கு நின்றவளைக் கண்டு வியப்பு -

''என்ன லதா... இந்த நேரத்துல இங்கென்ன வேலை...''

''இல்ல... சும்மாதான்... பால்...''

''ராத்திரி -சரியா சாப்பிடலையா?''

''எனக்கில்லை... ஜிக்கிக்கு... குட்டி போட்டதால் சோர்ந்திருக்கா... இடையே இளம் சூடாய்ப் பால் வச்சால் நல்லது - டாக்டர் தந்த டானிக்கையும் கலந்து வச்சேன்...''



''ஏன் ராணிட்ட சொல்லக் கூடாது?''

''பாவம்! அவ எனக்குக் குடை பிடிச்சதிலேயே அயர்ந்துட்டா...'' சிரித்தாலும் அவன் விழிகள் அவளை வினோதமாகவே பார்த்தன -

''தமிழ்ல கடிதாசி எழுதவே நாங்க பிறத்தியாரைத் தேடணும் - இதுல இங்கிலிபிஷ்ல எழுதணும்னா எப்ப டிம்மா? நம்ம மொழியில நாலெழுத்துப் படிச்சாப் போதும் - கணக்கு, பூவோளம்னு போதாம இது வேற புது நொச்சு....''

மருதுவின் மனைவியின் அங்கலாய்ப்பைக் கேட்டபடி பாலில்லாத கடும் காப்பியைத் துளித் துளியாய்ப் பருகிக் கொண்டிருந்தாள் நேர்த்தி. சாணமிட்டு மெழுகிய அந்த ஓட்டு வீட்டின் தரை உட்காரக் குளுமையாகவே இருந்தது. 'நேர்த்தி' பண்ணையை நெடுக நடந்து கடக்க இறுதியாய் வந்ததுதான் பண்ணையாள் மருதுவின் இச்சிறு வீடு. மரங்களில் படர்ந்திருந்த வெனிலா கொடிகள் இவளை ஈர்த்திருந்தன. பணம் கொழிக்கும் பயிர் என்பதால் சுற்றிலும் மின்வேலி. அக்கொடிகளில் பூக்கள் பூத்து ஒரே வாரத்தில் பீன்ஸ் போலக் கொத்துக் கொத்தாய்க் காய்கள் உயிர் பெற்றுத் தொங்குமாம்...

''அது மட்டுமில்லைம்மா - ஏக்கருக்குப் பல லட்சம் லாபங் காணலாம்...'' என்றும் மருது சொல்ல, அதிசயமாய்ச் சுற்றி வந்தவளுக்கு வீட்டில் காபி உபசாரத்தோடு மருதுவின் மகன் பத்து வயது ரஜனியின் அறிமுகமும் கிடைத்தது. சூட்டிகையான பயல் -

''இவன் படிக்கணும்னு நொச்சியதை எசமான்ட்ட சொன்னேன் - ம்மா... படிப்புக்குப் பணம் கட்டி அவரே டவுனு ஸ்கூலுக்குப் போகச் சொல்லிட்டாரு... ஆனா அங்க படிப்பு எளிமையா இல்லீங்களே!''

''ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதணும் - அவ்வளவு தானா? அதுவும் தெரிஞ்சுக்க வேண்டியதுதானே?''

''அப்ப அவுகள்ல அதைக் கத்துத் தரணும்?''

''மறுமுறை நீங்க பள்ளிக்குப் போனால் உங்க வீட்டு நிலவரத்தை எடுத்துச் சொல்லுங்க - இப்ப நான் உதவறேன் - என்ன?''

சிறுவனோடு உட்கார்ந்து கற்றுத் தந்த திருப்தியோடு வீடு திரும்பிய போது இருட்ட ஆரம்பித்திருந்தது -

எத்தனை இனிமையான வாழ்விது! இங்கு 'ஏமாற்று' மருமகளாய் அல்லாமல், அனைத்திலும் உதவும் காரிய தரிசியாய் நுழைந்திருந்தால்... தன்னை மீறிப் பெருமூச் செறிந்தாள் - எழும் கட்டடத்தையும் ரசிக்கலாம், வந்த இச்சில நாட்களில் வீட்டையும் சீர்ப்படுத்தியிருந்தாள் - எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் உதவியபடி... எத்தனை திருப்தியான வாழ்வு...

இங்கேயே... இப்படியே தொடர முடிந்தால்... போதுமே...

கமலம்மாளிடம் அத்தனை உண்மையையும் காலில் விழுந்து சொல்லி விட்டால்...? இப்படியுமா என்னை ஏமாற்றினாய்... என்று வெறுத்து விடுவார்களோ? அல்லது நேற்றுப் பார்த்த லதாங்கியை ஒத்த உண்மை யான லதாங்கி வந்து சேர்ந்து விட்டால்....?

நேற்று அப் பெயரில் ஒரு அலங்காரவல்லியை... மற்றொருவனுடன் கண்டதைச் சுரேனிடம் சொல்லுவதா வேண்டாமா?

அத்தனை கேள்விகளும் குடைய, அயர்வுடன் ஒரு மரத்தடியில் அமர்ந்தாள் - பருத்த மர வேர் சாய்ந்து அமர வாகாய் இருந்தது. இதமான இறங்கு வெயில் ஒத்தட மளித்த சுகத்தில்... கண்கள் தாமாய்ச் செருகின - பின்னால்



கடும் அரவம் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் திறந்தாள் - திரும்பியவளின் முகம் அச்சத்தில் உறைந்தது...

ஓங்கிய கம்புடன் கடுமையாய் நின்றது... நரேன்!



12

சற்றும் எதிர்பாராத ஒரு காட்சி!

ரௌத்திர பாவம், கையில் ஆயுதம்... ஒரு கணம் நடுங்கிப் போனாள். அலறும் முன் கழி இறங்கியது - இவள் முதுகிற்குப் பின்னால்!

ஆக நரேன் வேறு எதையோ அடிக்க முனைந் திருக்கிறான். புத்தியில் உறைத்ததும், திரும்பியவளின் முகம் பீதியில் வெளுத்தது. தரையில் 'சொத்'தென விழுந்தது, ஒரு கனத்த நாகம்! அடிபட்ட அதிர்ச்சியில் சுற்றுக் கிடந்து, பின் நெளிந்தது.

''பா... பாம்பு...''

''உன்னை இந்நேரம், இங்கே யார் வரச் சொன்னா?'' சிறுமியைக் கண்டிப்பது போன்ற தொனிதான்... ஆனால் குரல் நடுங்கியதோ... விரல்களில்கூட மெல்லிய நடுக்கம்.

பதறி எழுந்தவளின் கால்கள் தடுமாறியதில் தளிர்க் கைகள் பிடிமானம் தேடிக் காற்றில் அலைந்தன.

விரைந்து பற்றியது அவன் கரம்.

அவள் எழும்ப உதவியவன் அறிந்துதான் செய்தானோ அல்லது எதிர்பாராதது நடந்ததின் விளைவோ, அவளை இழுத்து மார்போடு சரித்துக் கொண்டான்.

இன்னும் அரவம் சற்றே தொலைவில் நெளிந்த அச்சத்தினாலோ என்னவோ இவளும் திண்மையான தோளில் பதுங்கினாள் - உரக்கக் கேட்ட அவனது இதய

ஒலி ஏதோ இசை போல ஒலித்து அதில் அவளை லயிக்க வைத்தது -

அவன் உடலின் வெதுவெதுப்பு, சுற்றிய கைகளின் வலிமை, உச்சந் தலையில் அழுத்திய மோவாய்- எல்லாமும் மிகப் பாதுகாப்பான உணர்வைத் தர, நீளப் பெருமூச் செறிந்தாள் -

ஆறுதல் கூறுவதாய் அவன் கரம் அவள் முதுகை நீவ, விளைந்தது ஆறுதல் அல்ல... வேறு ஏதோ ஒரு குறு குறுப்பு.

''இனி இப்படித் தனியே வர வேணாம்... ம்ம்?''

''ம்ம்.''

''கொஞ்சத் தொலைவில் மருதுவின் வீடு இருக்கும்... உனக்குக் குடிக்கத் தண்ணீர் வேணுமா?''

இன்னும் அணைத்த நிலையிலேயே சம்பாஷணை தொடர்ந்தது. இருவரும் அதை உணரவில்லையா அல்லது விலக விரும்பவில்லையா என்பது புரியாத பிரமை நிலை.

''ம்ஹூம்... அங்கே யிருந்துதான் வர்றேன்.''

அரை உறக்கத்திலிருப்பது போன்ற குழறிய குரலில் சொன்னாள் -

''ஓ...''

''ரஜனிக்குப் பாடம் சொல்லித் தந்தேன்...''

''ரஜனி?''

''மருதுவின் மகன்...''

இப்போது அவளைப் பிரித்துச் சற்றுத் தள்ளி நிறுத்தியவன், அன்றுதான் புதிதாய்ச் சந்திப்பது போலப் பார்த்தான் -

''ல்ல... கடிதம் எழுதணும்... அதாவது ஆங்கிலத்தில்னு... அதுதான் உதவினேன்.''



''லதாங்கி...?'' என்றான், ஒரு கேள்வி போல...

''இல்லை... ஆமாம்...'' - தடுமாற்றம் தொடர்ந்தது -

நெருங்கிய காலடிச் சத்தத்தில் நடுவேயிருந்த இடைவெளியை அதிகப்படுத்தினார்கள். ஏதோ கனவுலகிலிருந்து விழித்த பாவனை இருவரிடமும்...

''மன்னிக்கணும்... நீ பயந்ததால் இப்படிப் பிடிச்சு...''

''தப்பு... எம் பேரிலும்தான்.''

''ஐயா, செடிக்கு மருந்தடிக்கறது பத்தி பேச மதுரையிலேருந்து ஆளு வந்திருக்காக...''

இருவரையும் சேர்ந்து பார்த்த வேலையாள் தயக்கத் துடனேயே சொன்னவன், நரேன் சுட்டிக் காட்டிய திசையில் திரும்பி, ''அடேங்கப்பா... என்னா நீளம்!'' என வியந்தான்.

அச்சமின்றி இயல்பான வியப்பு மட்டுமே...

அதை உணர்ந்ததுபோலப் புன்னகையுடன் விளக்கினான் -

''இங்க பூச்சி யெல்லாம் சகஜம்மா...''

''பூச்சி?''

''அப்படித்தாம் சொல்லுவோம்...''

''இருந்தும் எனக்கே இது விஷ ஜாதியா இல்லையான்பதில் சந்தேகம் - பதட்டத்தில் தட்டி விட்டேன் - லதாவை எச்சரித்தால் பயந்திடுவாளோன்ற பதட்டம் வேற...''

நரேனின் தடுமாறலான விளக்கத்தை வேலையாளும் வினோதமாகவே கவனித்தான்.

''ஐயா... இதுக்குச் சாவடிக்கற விஷமில்லைங்க... ஆனால் உடம்பெல்லாம் தடிப்புத் தடிப்பா வீங்கிடும்...''

இவளுக்குச் சிலிர்த்தது - ஆதரவாய் நரேனின் கைகள் தன் தோளில் விழ, மேலும் சிலிர்த்தது - இம்முறை அச்சத்தால் அல்ல...

அவனோடு இணைந்து நடந்தவளுக்குப் புதுப் பயம் முளைவிட்டது. அது குறித்து யோசிக்க யோசிக்கப் புதுக் கிளைகளைப் பரப்பியது. அக் கிளைகள் தந்த புது நிழலும் அவஸ்தையையே தந்தது -

மருமகளாய் இங்கு புகுந்ததைச் சற்று முன்புகூட நெருடலுடனேயே நினைத்தவளுக்கு இப்போது அதே எண்ணம் உள்ளே நிழல் பரப்புவானேன்...?

இப்படி ஒரு நேச விதை முன்பே உள்ளே பதுங்கியிருந்ததோ? இப்போது சாரலாய் விழுந்து சிலிர்க்க வைத்த அணைப்பில்... நரேனின் கரிசனையில் மன மண்ணை விட்டுத் தளிராய்த் தலை நீட்டுகிறதோ?

நரேனின் உள்ளிலும் ஏதேதோ எண்ணங்கள் புரண்டன போலும்... அமைதியாகவே நடந்தனர். வழக்கம் போலில்லாத வேகமற்ற நடை. இருவரும் இணைந்த வேகத்தில் தம்தம் யோசனைகளுடன் நடந்ததுமே கூட இன்பம்தான்.

ஆனால் வீடு நுழைந்ததும் அங்கு லேசான பரபரப்பு...

"ஐயா, உங்களை அம்மா தேடுனாக..." லயித்திருந்த இன்பக் கனா கலைந்த விதிர்ப்புடன் இருவருமே கேட்டனர் -

"ஏன்... என்னாச்சு?"

"உங்க மாமாட்டேருந்து ஃபோன் வந்ததுய்யா... அதிலேருந்துதான்..."

"என்ன சொல்லியிருப்பார்?" என்று தனக்குள்ளாகவே பேசியபடி, தாயின் அறையை நோக்கி, நரேன் நடக்க, பரிதவிப்பில் இவளும் தொடர்ந்தாள் - ஆனால் மகனைக் கண்டதும் கமலம்மாளின் குரல் உயர்ந்த விதத்தில் இவளது கால்கள் வெளியேவே தயங்கி நின்றன.

"பெரியவங்க சொல்றதைக் கேட்கணும் - இப்பப் பாரு, என்ன நடந்து போச்சு?"



"சொல்லுங்க... என்னாச்சு?" பணிவும் பிரியமுமாய்க் குழைந்தது மகனது குரல்.

"உந் தம்பியின் தப்புதான் - நம்ப லதா இங்கே வந்திருப்பது வீட்டுக்கு மருமகளாய்ன்றதை உன் மாமாட்ட சொல்ல வேணாம்னுட்டான்..."

"அது... சரிதானேம்மா? தீர்க்கமாய் இன்னும் முடிவு பண்ணாததால்..."

"என்னப்பா முடிவு? இது கடவுளின் தீர்மானம்... இல்லைன்னா அந்தத் தங்கக் கட்டி இங்க வந்து சேருமா? அந்தச் செல்வத்தை நாம நகர விடாமல் அள்ளிக்க வேண்டாம்?

தான் அருகே இருப்பது அறியாமல் வந்த வாஞ்சையான பேச்சில் இவளுக்கு விம்மியது.

"சரி - மாமா ஃபோன்ல என்னதான் சொன்னார்?"

"அவர் உறவுல... அதாவது உங்க அத்தையின் மருமகனுக்கு நம்ப லதாவைக் கேட்கறார்."

ஒரு நிமிடம் மௌனம்...

"பார்த்தியா, நீயும் இப்படி முழிக்கறே..." தாய் சொல்ல, இவளுக்கு நரேனின் முகத்தை, அதன் பாவனையைக் காணும் ஆவல் மிகுந்தது.

"இப்படி அம்சமும் அடக்கமுமான பொண்ணுக இப்ப கிடைக்கறது அபூர்வம்ப்பா... அத்தனை அன்பானவ... நம்ப கையிலே வந்து விழுந்த வைரத்தை நழுவ விடலாமா?"

"பெண்ணைத் தங்கம் வைரத்துக்கு ஒப்பிடாதீங்கம்மா... ஏதோ நாம் காபந்து பண்ணும் பொருள் போலவும், வந்து திருடிட்டுப் போயிடுவாங்கன்றது போலவும்... இப்ப பெண்கள் அந்த நிலைமையில் இல்லை..."

''வெட்டிப் பேச்சுப்பா... நான் விவரமாய்ச் சொல்லிட்டேன் -லதா எங்க வீட்டுக்கான பொண்ணு... சுரேனுக்காய் வந்தவன்னு...''

சாப்பிட்ட இனிப்பூடே கசப்பும் கலந்ததுபோல இவள் விழித்தாள். இங்கு யாருக்குமே மனைவியாகும் தகுதி தனக்கில்லை என்று பட, அங்கிருந்து நழுவினாள் -

ஆனால் தாய் மகனுக்கிடையே பேச்சுத் தொடர்ந்தது -

''லதா நம்ப புது வேலைத் திட்டத்தில் உதவ வந்திருக்கான்னு சொல்லுங்க - இன்னும் ஆறு மாதங்களுக்கு வேறு பேச்சுக்கே இடமில்லை... நாளையே ஒரு பிரார்த்தனையோட அஸ்திவார வேலை ஆரம்பிக்கலாம்னு.''

''நான் சொன்னதை விட்டுட்டு நீ வேறெதையோ...''

''நடக்கப் போவதைப் பற்றிச் சொல்றேம்மா - இத்தனை சுமுகமாய் வேலை ஆரம்பிக்கும்னு நினைக்கலை... இப்படிக் கிடைத்த சந்தர்ப்பத்தை விடாமல் தொடரணும்...''

''நானும் அதையேதானேப்பா சொல்றேன்... வந்த மருமகளை...''

''இல்லானை இல்லாளும் வேண்டாள் - வள்ளுவர் வாக்கும்மா...''

''உலக நடப்புதான் - ஆனா நாம் என்ன இல்லாதவங்களா? லதாவும் எளிமையான பொண்ணு... தந்த பட்டையே கட்டக் கூச்சப்படறா...''

''அதெல்லாம் பழங்காலத் துணி - நவீன குமரிகளுக்குப் பிடிக்காது...'' அதற்குள் பின்புறம் இருந்து எழுந்த கூக்குரலில் அவர்களும் பேச்சை விடுத்து வெளியே விரைந்தனர்.



## 13

''அடடே... ரஜனி! நீ சமர்த்தாச்சே... அழலாமா?''



''நான் சும்... சும்மாதான்க்கா பக்கத்துல நின்னேன்... தொடக்கூட இல்லை...''

''நாய்க் குட்டியை நெருங்கினியா?'' இயல்பாய் விசாரித்தாள் நேர்த்தி...

''ம்ம்... ரொம்ப குட்டியாப் பட்டாட்டம் இருந்துதா... ஜிக்கி பாக்காத சமயமாய்க் குனிஞ்சேன்...''

நாய்க் கடியால் வலித்த புஜத்தைப் பற்றியபடி முனகினான். ''ஜிக்கிக்குப் பயம். தன் குட்டிகளை நீ எடுத்துட்டுப் போயிடுவியோன்னு... வா, சட்டையைக் கழட்டு...''

துணிகளைத் துவைக்கும் சோப்பைத் தேய்த்து தாராளமாய் நீரைக் கொட்டிக் கடிபட்ட இடத்தைக் கழுவினாள் -

அதைப் பார்த்த நரேன் கேட்டான்,

''முதலுதவிப் பெட்டி காரில் உண்டு - எடுத்துத் தரவா - பான்டேஜ் போட்டுடலாம்...''

''இல்லைல்ல... இந்தக் காயத்தை மூடக் கூடாது - முதல்ல ரஜனியை டாக்டரிடம் கூட்டிட்டுப் போகணும்...''

''ஓஹோ... இவன்தான் மருதுவின் பையனா?''

''உடனே டெட்டனஸ் டாக்ஸாய்ட் ஊசி போட்டுட்டால் கவலையில்லை...''

ரஜனி வயிற்றைப் பிடித்தபடி கவிழ்ந்து கரைந்தான் -

''நான் வரலை... எனக்கு ஊசி வேணாம்...''

''எறும்பு கடிச்சாப் போலிருக்கும் - அதற்குப் போய் இத்தனை கண்ணீரை விரயம் பண்ணாதே, ரஜனிப் பையா...''

''ல்ல... தொப்பையில தொப்புளைச் சுத்தி நிறையக் குத்துவாங்க... வலிக்கும்...''

''ஓ... அப்படி நினைச்சுட்டியா... அதெல்லாம் முன்னே... இப்ப மூணு இல்லை, அஞ்சு ஊசிதான்... அதுவும் சாதாரணமாய். கை இல்ல, இடுப்பில்தான்...''

''பொய்யி...'' கண்கள் வழிந்தன.

''மெய்யோ மெய் - முதல்ல, அழுகையை நிறுத்து - அக்கா உன் கூடவே வர்றேன் - டாக்டர் முரடாய்த் தெரிஞ்சால், நானே ஊசியைப் பூவாட்டம் போட்டுடறேன், என்ன?''

நரேன் வாகனத்தை ஓட்டியதால் ரஜனி மேலும் அழவில்லை. முதலாளியோடு காரில் போகும் குஷி. தவிர, நாய் கடித்த அதிர்ச்சி, அழுத அசதியெல்லாமும் மாய்ச் சேர, அமைதியாகவே வந்தான் - கண்களில் லேசான உறக்கக் கிறக்கம்.

நரேன் பேசலானான் -

''நீ ஒரு டாக்டர்னே நினைக்கத் தோணுது, லதா...''

''ம்ம்...கட்டடக் கலை நிபுணர்ன்னு கூட நினைக்கலாமே... நேற்று முழுக்க உங்களோடு அந்த வேலைதானே செய்தேன்?'' சின்னச் சிரிப்புடன் சமாளித்தவளுக்கு, கெட்டிக்காரத்தனமாய்ப் புளுகினாலும் தன் நாடகம் எட்டு நாட்களை எட்டுவது சிரமம்தான் என்று பட்டது.

★ ★ ★

கண்ணாடிப் பையிலிருந்து பச்சைத் திராட்சைகளை ஒவ்வொன்றாய் எடுத்து விரல்களில் வைத்து உருட்டி, ஒரு விநோத வஸ்துவைப் போலப் பார்த்துவிட்டு நீரில் அவற்றைத் தூக்கி இட்டாள்...

ஒரு டஜன் உயர்ரகத் திராட்சைப் பழங்கள் பசும் கோலி போல நீர்ப் பரப்பில் பட்டுப் பின் மூழ்குவதைக் கண்டவனுக்கு அதற்கும் மேல் பொறுக்கவில்லை.

''லதாங்கி, அது ஜாதித் திராட்சை... விதையில்லாதது. கிலோ நூறுக்கும் மேலே... அதைச் சாப்பிடாமல் இப்படி ஏரியிலே தூக்கி எறியறது...''



''ஏன்... ஏரியிலிருக்கும் மீனும்தான் சாப்பிடட்டுமே...''

பெருகிய ஆத்திரத்தைப் பல்லைக் கடித்து அடக்கினான் -

''மீனுக்குப் பொரி போதுமே...''

''ஸாரி, ஷிவ்... இதெல்லாம் நான் சாப்பிடறதில்லை... வீணாக்கு வானேன்னுதான்...''

''வேண்டாம் - வை. நான் ஊருக்கு எடுத்துட்டுப் போறேன் - என் அக்கா பொண்ணுக்கு ரொம்பப் பிடிக்கும்...''

ஆனால் அவன் சொன்னதைக் காதில் வாங்காமல், மேலும் சில திராட்சைகளை அவள் நீருக்கு இறைத்தாள் -

''லதா, வேணாம்...''

உயர்ந்த அவன் குரலில் இவள் முகமும் வெடுக்கென உயர்ந்தது.

''சரி- அப்ப நான் இறங்கிக்கறேன்...''

''நினைச்ச இடத்தில், நினைச்ச கணம் இறங்க இது காரும் ரோடுமில்லை...''

''போட்-மேன், படகைக் கரைக்கு விடுங்க...'' காட்டமாய் உத்தரவிட்டாள்.

''படகை ஒரு மணி நேரத்திற்கு எடுத்திருக்கேன் - வாடகை எண்ணூறு ரூபாய்...''

''பிச்சைக் காசு...'' மகா அலட்சியத்தில் வார்த்தைகளைத் துப்பினாள் - இப்போது அவனது கோபமும் வெளிப்படையானது.

''சம்பாதிச்சவனுக்குத்தான் தெரியும், காசு எத்தனை சிரமத்தில் வந்ததுன்றது...''

''சரி - அதையே யோசிச்சபடி போங்க... நான் ஹோட்டெல் அறைக்குப் போறேன்.''

''அதன் வாடகையும் சமான்யமில்லை...''

''தொடர்ந்து நான் கொடைக்கானலில் தங்குவதா யில்லை. சென்னைக்குத் திரும்பலாம்...''

''நான் வியாபாரி லதாங்கி'' - அவனது குரல் மிரட்டியது. ''இதுவரை செலவழிச்சதற்கானதை உன்னிட மிருந்து வசூலிக்கணும்... பிறகு திரும்பலாம்...''

அவளது முகம் சற்று வெளுத்தது -

ஆனால் படகைச் செலுத்திய ஆள் இவர்களின் பேச்சு ஏதும் காதில் விழாதது போல ஒரு ரப்பர் முக பாவனை யில் இயந்திரம் போல நீரைத் துடுப்பால் விலக்கிக் கொண்டிருந்தான் -

படகும் ஏரியில் மிதந்த மற்றவற்றைப் போலச் சாதாரணமாயில்லை. நல்ல அகண்ட அமைப்பு.

மேலே வெயிலிலிருந்து பாதுகாப்புத் தர, வர்ணத் துணிக் கூரை. அதன் கீழே இருவர் தாராளமாய்ப் படுக்குமளவில் கனத்த மெத்தை - மிருதுவான தலையணைத் திண்டுகள்.

இங்கிதம் அறிந்த படகோட்டி வேறு!

ஆக ஏரியில் படகின் தயவில் மிதந்து கொண்டிருந்த மற்றப் பயணிகளின் ஆர்வப் பார்வை அடிக்கடி இவர் களின் மீது பட்டது.

ஆனால் லதாங்கிக்கு எதுவும் ரசிக்கவில்லை.

ஆயிரங்களை, ஏன் லட்சத்தைகூட முறுமுறுப்பில் லாமல் இவளுக்காக ஊதிய சுரேனை ஒதுக்கிவிட்டு, நூறுகளைக் கூடக் கணக்குக் காட்டும் இவனுடன் வந்த பிசகு புரியப் பொருமினாள்...

தராதரம் தெரியாமல் கால் வைத்தாயிற்று... வழு வழுத்த அவளது புஜங்களை இறுக்கமாய்ப் பற்றி இழுத் தவன் குரலில் போலிக் குழைவு.

''செலவழிக்கறது பத்தி ஏதுமில்லை, லதா... அதுக் கேத்த பலன் வந்திரணுமில்ல? என்ன நான் சொல்றது...?



நேத்து ராத்திரி நம்ப ஹோட்டெலு ரூமு எத்தனை சொகுசாய் இருந்துச்சு. மூஞ்சைத் திருப்பிட்டு படுத் திட்டியே! இப்ப மிதந்தபடி நாம சொர்க்கத்தை அனுப விக்க வேண்டிய சமயத்துல மறுபடி என்னைய சீண்டிக் கோபப்படுத்தறே... ம்ம்... இதெல்லாம் சரியா?''

பேசியபடியே தன் கன்னத்தை உரசிய உதடுகளைத் தள்ளிவிட, அவன் பிடி முரடானது.

இவள் அலறினாள்.

''ஐயா, படகுக்காரரே... என்னைக் கரை சேர்த் திடுங்க... இந்தாள் என் புருஷனெல்லாம் இல்லை... நம்பி வந்ததுக்கு... ச்சே... பட்டுட்டேன்... கரைக்கு... ப்ளீஸ்.''

''என்னடி, ட்ராமா காட்டறே? நேத்து நைட்டு ரூம்ல நடக்காததை இங்கே இத்தனை பேர் பார்க்க நடத்திக் காட்ட எனக்குத் தெரியும்.''

இந்த மிரட்டலில் இவள் பதறி எழுந்து நிற்க, படகு கட்டின்றி ஆடியது.

இப்போதுதான் துடுப்புப் பிடித்தவரின் வாய் திறந்தது -

''உட்காரும்மா - போன வாரம் இப்படி நடு ஏரியிலே எழுந்து நின்னு மறுபடகுக்கு மாறின பொண்ணு தடுமாறித் தண்ணியில விழுந்திடுச்சு - ரெண்டு அவர் கழிச்சு பிணமாத்தான் எடுத்தோம்... கரைக்குப் போயிடறேன் - முதல்ல உக்காருங்க...''

உயிர் மீதுள்ள பயமோ என்னவோ, ஷிவ் எனப்பட்ட சிவராமும் பேசாமல் அமர்ந்திருக்க, அன்னப்பட்சி போன்ற படகு கரை நோக்கி நகர்ந்தது.

கரையேறியவளுக்கு ஆத்திரம் மிஞ்சியது...

''பை ஷிவ் - இது நிரந்தரமான குட்-பை. இனி நாம ஒருத்தர் முகத்தை மற்றவர் பார்த்துக்கவே வேணாம்.''

அவன் நக்கலாய்ச் சிரித்தான் -

"இங்கே யிருந்து சென்னைக்குப் பொடிநடையாய் நடந்திட முடியுமா என்ன? டிக்கெட் பதிவு செய்யணும் - அதுவும் மகாராணிக்கு ஏ.ஸி. குளிர் வேணும் - வழிக்கு சிக்கன் பர்கர், ஐஸ்-வாட்டர்னு..."

"எல்லாம் சுரேன் பார்த்துக்குவார் - வரும் வழியில் கூட அவர் பண்ணையைப் பார்த்தேன் - விஸ்தீரிக்கப் போறார் போல... அங்கே போய்ட்டா என்னைத் தங்கத் தட்டில் தாங்குவார்... அப்படிப்பட்டவரை விட்டுட்டு வந்ததுக்குத்தான் இந்தப் பாடம்... பேரம் பேசும் உன்கிட்ட சிக்கி..."

அவளின் கடுப்பைக் கவனிக்காமல் தன் கைக்கடி காரத்தில் கண்களைப் பதித்தவன் -

"உலகத்தில் உழைக்காமல் எந்தச் சொகுசும் கிடைக் காதுடீ, லதாங்கி..." அவன் பேச்சில் இவளுக்குக் கூசிக் கொதித்தது.

"போய் அறையில் இரு. இன்னும் படகுச் சவாரி அரைமணி நேரத்திற்கு இருக்கு - முடிச்சுட்டே வரேன்... இதுவரை நான் இறைத்த காசுக்கானதை எனக்குத் தந்துட்டு உன் முன்னாள் காதலன்ட்ட ஓடிப் போகலாம் - சரிதானா?"

அவனது சைகையில் படகு மறுபடி ஏரிக்குள் புகுந்தது. - ஆத்திரத்தில் உடம்பு நடுங்க, அருகேயிருந்த விடுதியை நோக்கி நடக்கலானாள்.

ச்சே! நழுவிய பின்புதானே சுரேனின் அருமை புரி கின்றது. எத்தனை கண்ணியமாய்ப் பழகினான்...!

ஒன்றரை வருடங்கழித்து மிகத் தன்மையாய், தனிமையில்,

'நாம கணக்கில்லாமல் செலவழிப்பது சரியில்லைன்னே படுது, லதா... அண்ணன் கோபிப்பதிலும் அர்த்த மிருக்குது... குடும்பத் தொழிலைக் கவனிக்காமல் நான் இப்படிப் பணத்தை அழிப்பதில் அம்மாவுக்குமே கவலை... அதைப் போக்க, முதலில் நாம கல்யாணம் பண்ணிக்க லாம்... மாசத்திற்கு ஒரு வாரமேனும் சென்னையில் உனக்கு வேண்டியபடி வந்து இருந்து போகலாம்... என்ன?" - இப்படி நயந்தவனை எப்படிப் பந்தாடினாள்...!



'பாபலாலில் ஒரு மோதிரம் பார்த்தேன், சுரேன்...' பூனையாய் அவனை உரசினாள் - 'விலை ஒன்னேகால்... ஒன்னரை லட்சம்னு நினைக்கிறேன்... அதை வாங்கி என் விரல்ல போட்டு நிச்சயம் பண்ணிட்டீங்கன்னா... அடுத்துக் கல்யாணக் கனவு காணலாம்..."

இந்தப் பேராசையான சீண்டலையும் அவன் நிஜமாக் கிய போது சற்று அதிரத்தான் செய்தது -

ஆனால் தன் விருப்பப்படி சுற்றும் வாழ்க்கை முறைக் குக் கல்யாணமெல்லாம் சரிவராது என்ற தயக்கமும் சுவர் எழுப்பியது.

அதுவும் பட்டணத்துப் பரபரப்பு, பகட்டிற்குப் பழகிய தான், மரங்கள் மட்டுமே மிகுந்த வனத்தில் வாழ்நாளை மொத்தமாய்க் கழிப்பது... ஒரு உதட்டுச் சாயம் வாங்கக் கூட ஒன்றரை மணி நேரப் பயணம்...

ஒன்றரை லட்ச வைரத்தை விரலில் போட்ட பின்னும் யோசித்தவளை வேறு ஒருவனோடு மிக நெருக்கமாய் டிஸ்கோவில் பார்த்த போது சுரேனின் கோபத்தை இவள் முதலில் பார்த்தது -

எதற்கும் தன் முன் மண்டியிடாத குறையாய்க் கெஞ்சுபவனை அவள் மதிக்கவில்லை. தடாலடியான மற்ற ஆண்களால் கவரப்பட்டாள்...

ஆனால் இப்போது தெரிகிறது, அவரவர் லட்சணம்...

கீழ்த்தரமான குணம்... தன் பெண்மையை, ஆண் களின் காய்ந்த கண்களுக்குக் காட்டியே ஒரு இளவரசி போல வாழ்ந்து விடலாம் என்றிருந்த தன்னை அவர்கள்

காலடியில் தேய்த்துக் கசக்கி விடவல்லவா முனை கிறார்கள்...?

ஓரளவு மகிழ்வு மானத்தோடு இனி வாழ வேண்டு மெனில் சுரேனிடம் சரணடைவதுதான் வழி.

உடனே பெட்டியை அடுக்கி இங்கிருந்து கிளம்ப வேணும்... ஷிவ் தடியன் படகுச் சவாரி முடிந்து திரும்பு வதற்குள்...

அவசரமாய் நடந்தவளை ஒரு குரல் அவசரமாகவே வழி மறித்தது. ''மேடம் லதாங்கி... நீங்க நேர்த்தி பண்ணைக்குத்தானே போகணும்? நான் அழைத்துப் போறேன்...''



## 14

ஆபத்பாந்தவனாய்த் தன்னைக் காட்டிக் கொண்டவனை மேலும் கீழுமாய் நோட்ட மிட்டாள் லதாங்கி -

ஆள் அத்தனை பாந்தமாயில்லை. தலையில் தேய்த்து மிஞ்சிய எண்ணெயை முகத்திலும் தடவியது போன்ற 'வழுவழு'த் தோற்றம். தாடையிலும் இடுப்பிலும் அசட்டுச் சதைப் பிதுக்கம்...

ஆகப் பதிலளிக்காமல் நடையைத் தொடர்ந்தாள்.

''நான் இப்ப பண்ணைக்குத்தான் போறேன்... அதுதான் கேட்டேன்.'' பண்ணையின் வேலையாட்களில் ஒருவனோ?

கால் பார்வையை மட்டும் அவன் புறமாய்ப் பாய்ச்சி யவள் - ''ம்ம்...'' என்றாள்.

''நான் நேர்த்திக்கு வேண்டியவன்... அவளுக்கு இப்படியொரு வாழ்வு கிடைக்கும்னு கண்டேனா... என்ன? நாமும் கிடைச்ச கொம்பை விடக்கூடாதுன்னு கிளம்பின போதுதான் அந்த ஆள்... ஆளு உங்களோட பேசினதைக் கேட்க நேர்ந்தது...''



இவளது புருவங்கள் அழகாய்ச் சுழித்தன - ''நேர்த்தி?''

''ஆமாங்க. அநாதை விடுதியில் வளர்ந்த பொண்ணு... அவ அங்கே நின்ன தோரணையைப் பார்க்கணுமே - குடை பிடிக்க ஒரு ஆள்...! நம்ப முடியாமல் குரல் கொடுத்தேன்... ஆனா அவ திரும்பலை...''

லதாங்கியின் அவசர நடைக்கு ஈடு கொடுத்தபடி அவளைத் தொடர்ந்தவனின் பேச்சும் தொடர்ந்தது -

''சினிமாவுல வர்றது போல ஒரே சாயல்ல ரெண்டு பேரோன்னு ஒரு டவுட்டு. அடுத்த ஸ்டாப்புல பஸ் டீக்காக நின்னப்ப இறங்கி, அந்த நேர்த்தி பண்ணையப் பத்தி விசாரிச்சேங்க... அங்கே வேலை பார்க்கறவர்னு ஒரு ஆளையே காட்டுனாங்க...

''எம் முதலாளி உங்க முதலாளியோட படிச்ச வர்ப்பா''ன்னு எடுத்து வுட்டேன் - கூட ஒரு பொண்ணு நின்னுச்சே - முதலாளிக்குக் கல்யாணமாயாச்சான்னு பேச்சை வளர்க்க, மீனு சிக்கிடுச்சு.

'''அந்தம்மா வந்து ஐந்து நாளுதான் ஆச்சு... பெரியம் மாக்கு ஒத்தாசைக்கு வந்திருக்காங்க... பேர் லதாங்கி - தங்கமான பொண்ணு!'ன்னான்...''

''பின்னே - ஏதோ நேர்த்தின்னே?''

அவள் பேச்சின் ஒருமை அலட்சியத்தைத் துடைத்துப் போட்டுவிட்டுப் பல்லைக் காட்டினான் -

''நிஜப் பேரு அதுதாங்களே. நேர்த்தி ஆறு நாளைக்கு முன்னேதான் கொடைக்கானல் பஸ்ல ஏறினா - எப்படியோ வழியில் இறங்கி இங்கே புகுந்துட்டா - தவிர சிநேக இல்லத்தில் அவளில்லை - வழியில் இறங்கினதாய் - பாதுகாப்பாய் இருப்பதாய்த் தகவல் மட்டும் வந்திருக்குது.''

தன் பிரச்னையில் மூழ்கியிருந்த லதாங்கியின் புத்தி இப்போது விழித்துக் கொண்டது...

''அவ பேர் லதாங்கின்னா... அப்படீன்னா நான்தான் அவள்னு ஏமாற்றி நாடகமாடியிருக்கா...!''

முகம் பரபரக்க, கண்களில் புரிதலின் வெளிச்சம்.

''இப்ப அங்கே போய் அவளைக் கையும் களவுமாய்ப் பிடிச்சுடலாம், மேடம்... நீங்களும் வந்தால்...''

''ஒரு டாக்ஸியைப் பிடி. நான் ஐந்து நிமிடங்களில் வந்துடறேன்.''

ஏரிக் கரையில் சுற்றுலாப் பயணிகளை ஒரு சுற்று ஏற்றிப் போகக் காத்திருந்த குதிரைகளைத் தாண்டி இவன் வாடகைக் கார்களின் அணிவகுப்பை நோக்கி விரைந்தான்.

★ ★ ★

''என்னண்ணா ஒரு லாரி மணல் எண்ணூறு ரூபாவா? கொள்ளையில்ல? என் சிநேகிதன், தன் கிராமத்துப் பக்கமிருந்து பாதி விலைக்குக் கிடைக்கும்னு சொல்வான் - எப்படியும் வங்கிக்குப் போகணும் - அப்படியே டவுனில் அவனைப் பார்த்துக் கேட்கவா?

பேசிய தம்பியைத் துளி ஆச்சரியத்தோடு பெருமித மாய்ப் பார்த்தான் நரேன்.

ஆயிரங்களைத் தூசாய் எண்ணி ஊதி உதறித் தள்ளி யவன் சில நூறுகளை மிச்சம் பிடிக்க நினைப்பது பெரிய மாற்றம்தான் - அதுவும் ஒரே வாரத்தில்...!

'கால் கட்டுப் போட்டால் எல்லாம் நேராகிவிடும்!' என்று பெரியவர்கள் சொன்னது இத்தனை சத்தியமா?

ஆனால் உள்ளே விரக்தியும் காந்தியது. அதை ஆற்ற முயன்றபடி தம்பியிடம் பேசினான் -

''நிச்சயமாய், சுரேன் - அப்படியே சிமெண்ட்டிற்கும் சொல்விடு - பிறகு...''

''சொல்லுண்ணா...''

சகோதரர்களால் இப்போது இயல்பாய்ப் பேச முடிந்தது. முன்பு பணம், கடன், செலவு பற்றி ஒருவரை ஒருவர்



பிடுங்கி எடுத்தவர்கள், இப்போது அதையெல்லாம் பற்றி இணக்கமாய்ப் பேசியதும் அல்லாமல், மனம் பற்றியும் பேசினார்கள் - தெளிவு வரும் வரையிலான பேச்சு!

காரில் ஏறிய இளையவனை மூத்தவன் கையசைத்து வழியனுப்பிய காட்சியில் தாயுள்ளம் நனைந்தது - ஒரு வரை ஒருவர் தவிர்த்த அவலம் போய் இப்படி ஒரு அன்புக் காட்சி கண்களுக்கு அதிசயமாய்க் கிடைத்த வரம்தான்.

மீண்டும் வீட்டினுள் யோசனையுடன் வந்த நரேன், தாய் மதிய உணவு பற்றி ஏதோ கேட்டதைக் கூட உணராமல் தன்னறைக்குப் போனான் -

ஆனால் பெற்றவளுக்கு இப்போது கவலையில்லை.

'பிள்ளைங்களுக்குச் சதா வேலை ஞாபகம்!' - என்றே பெருமிதமாய் அலுத்துக் கொண்டார்.

காற்றிலாடிய முல்லைக் கொடி அவர் கவனத்தைக் கவர, ''ஏன் சீனு... இதைக் கொம்பிலே படர்த்தி விடுன்னு சின்னம்மா சொல்லலை...''

கேட்டதோடு, தானே தொய்ந்து அலைந்த பசுங்கொடியைக் கொம்பில் பிணைக்க, சீனுவும் வந்து உதவினான் -

''ஆரம்பிச்சேம்மா... பிறவு...''

''பாதியில் நிறுத்திட்டே.... ம்ம்? லதா எங்கே?''

''இன்னைக்கு ரஜனிப் பயலுக்கு ரெண்டாவது ஊசியில்லம்மா - அம்மாதான் வைத்தியர்ட்ட பயலை இட்டுப் போவறாங்க.''

''நாய்க்கு வெறி நோய்த் தடுப்பு ஊசியை வருஷத்து ஒருதரம் போட்டுட்டா மனுஷங்க பயமில்லாமல் இருக்க லாமாம்... எனக்கு அதெல்லாம் தெரியலை... ஏன், நம்ப நரேன் கூட அதுபற்றி ஏதுஞ் சொல்லலையே...''

''லதாம்மா கிளம்பையிலே நீங்க குளிச்சிட்டு இருந்தீங்கம்மா... உங்ககிட்ட சொல்லச் சொன்னாங்க... நான்தான்... ஹிஹி...''

'மறந்தியாக்கும்? உம் மறதிக்கு நல்ல தடிப்பா ஒரு ஊசியப் போடச் சொல்லணும்டா...''

சீனு சந்தோஷமாய்ச் சிரித்தான் - பெரியம்மா இப்படியெல்லாம் இதுவரை அவனைக் கிண்டலடித்தது இல்லையே...

அப்போதுதான் அந்த டாக்ஸி அதீத உறுமலுடன் உள்ளே வந்து நின்றது.

''யாருன்னு பாரு...''

''விருந்தாளிகம்மா - ஒரு ஆணும் பெண்ணும்.''

கண்களைச் சுருக்கிய கமலம்மாள் வாசலை நோக்கி விந்தி விந்தி நடக்க, வாசற்படிகளில் குதிரை போல ஏறி வந்தாள் லதாங்கி.



15

கமலம்மாளின் கருத்தில் கண்டதும் உறைத்தது வந்த பெண்ணின் விநோதக் கூந்தல்தான் - பட்டை பட்டையாய் நிறங்கள்... அதை இப்படித் தேசியக் கொடி போல விரித்துப் பறக்க வேறு விட்டிருக்கிறாளே... யாரிவள்? யாரைத் தேடி?

''நான் லதாங்கி - சுரேன் இருக்காரில்லை?''

''வாம்மா - இது சுரேன் வீடுதான் - நான் அவர் தாயார் - உள்ள வா.''

''அவர் எங்கே?''

''டவுனுக்குப் போயிருக்கான்.''

''கொடைக்கானலுக்கா?'' வந்தவளின் முகம் விழுந்தது -

''ஆமம்மா. மூத்தவன் இருக்கான் - பார்க்கறியா?''

இப்போது முகம் சற்றுக் கறுத்தது -

''வே... வேணாம். நான் காத்திருக்கேன் - சுரேனைத் தான் பார்க்கணும்...''



''இரும்மா - முதல்ல மோர் சாப்பிடுங்க.''

''வேணாம்... ஜூஸ் இருக்குமா? டின்னில் அடைச்ச பழரசம்?''

''பண்ணையில் அதற்கென்ன தேவைம்மா? மரத்திலிருந்து நாலு ஆரஞ்சுகளைப் பறிச்சுப் பிழிஞ்சு தரச் சொல்றேன்.''

இளையவள் முகம் சுழித்தாள்.

''அது... அதெல்லாம் சுகாதாரக் குறைவு... வேணாம்.''

''அப்ப நானே பதனமாய்ப் பிழிஞ்சு தரேம்மா - பிரயாண அலுப்போடு இருப்பே.''

''ம்ம்'' - போனால் போகட்டும் என்ற முனகல்.

''இந்தத் தம்பி யாரு?''

லதாங்கியுடன் நிற்கவா அமரவா என்ற பரிதவிப்பில் நின்ற இளைஞனைக் காட்டி விசாரித்தார் கமலம்... ''உனக்கு...''

''எனக்குத் தெரியாது - இந்தப் பண்ணைக்கு வரணும்னார் - நானும் இங்கே வர வேண்டியிருந்ததால் சேர்ந்தே வந்தோம்.''

அது மெய்யே என்றாலும், முகத்திலடித்த அத்தொனியில் உடன் வந்தவன் காற்றாடப் போவது போல வெளியே நடந்தான்.

''இப்படி நிற்கறேம்மா,'' - என்றபடி.

''தம்பி, உங்களுக்குக் குடிக்க?''

''காபி இருந்தால் நல்லது... குளிருக்கு... ஹிஹி...''

''அனுப்பறேம்பா...''

கனிந்த ஆரஞ்சுகளைப் பிழிந்த கமலத்தின் உள்ளே கேள்விகள் ததும்பின -

'யாரிந்தப் பெண் - பெயர் லதாங்கி என்கிறாளே? சிங்கத்தின் பிடரி போலச் சிலுப்பான விநோதத் தலைமுடி... ஒருவேளை இவள்தான்...?' ததும்பிய கேள்விகள்

நுரை தள்ளின - நுரைத்த சந்தேகத்தை ஒதுக்கியவள், பழரசத்தில் அளவாய் இனிப்பிட்டு வேலைக்காரி மூலம் முன்னறைக்கு அனுப்பினாள் - வலுவற்ற கால்கள் இப்போது மேலும் தொய்ந்தன.

★ ★ ★

''என்ன ரஜனி, அடுத்த ஊசி இன்னும் மூணு நாள் கழிச்சுதான் - நீயே போய்ப் போட்டுக்குவேல்ல? அக்கா அப்போ ஊரில் இருப்பேனோ இல்லையோ?'' குரல் தடுமாறப் பேசினாள் நேர்த்தி.

''சரிக்கா... நீங்க சொன்னாப்பல ஊசி அத்தனை வலிக்கல... கட்டெறும்பு கடிச்சாப்புலதான்...''

''ம்ம்... ஓடு வீட்டுக்கு. ஜிக்கியும் சாதாரணமாய்த்தான் இருக்குது. ஆக ஒன்னும் பயமில்லை...''

''வரேன்க்கா...''

ஒரு இளம் முறுவலுடன் வீட்டினுள் நுழைய முனைந்தவளை அந்த அழைப்புச் சுண்டி நிறுத்தியது -

''நேர்த்தி!''

திடுக்கிட்ட இதயம் சற்று நின்று பின் துடித்தது -

தன் முன் தெரிந்த முகத்தைப் பார்த்ததும், மீண்டும் துடிப்பு நின்றது! அதிகப் பரிச்சயப்படாத முகம் என்றாலும், மறக்கவும் முடியாததாயிற்றே. சமீபமாய்... பத்து நாட்களுக்குள் சந்தித்த முகம்... சந்தித்த கையோடு இவளிடம் பல்லிளித்து அறையும் வாங்கிய முகம்!

இவளது திகைப்பை ரசித்தான் போலும்...!

''என்ன நேர்த்தி - நினைப்பு வந்திருச்சா?''

''நீங்க எங்கே... இங்கே?''

''எல்லாம் உன்னைப் பார்க்கத்தான் - அப்படியே பத்திரமாய்க் கூட்டிட்டும் போயிடலாம்னு...''



எதிர்பாராத அதிர்ச்சியில் இதயம் எகிறிப் படபடத்தது -

நரேனிடம் வார்த்தைக்கு வார்த்தை பதிலடித்தவள் இப்போது ஊமையாகி யிருந்தாள் -

தப்பித்தால் போதுமென்று பட, வீட்டினுள் நுழைந்த வளை மேலும் சீண்டினான் -

''எங்கே? பெட்டியை எடுத்துட்டு வரப் போறியா?'' காபியைப் பருகியபடி கேட்டவனின் அகங்காரம் இவளை உலுக்க, சற்றுச் சூடானாள் -

''இல்லை - இந்த வீட்டு முதலாளியைக் கூட்டிட்டு வரப் போறேன் - பேசுவதை அவரோடு பேசுங்க...''

''யாரது, நேர்த்தி?''

கணீரென்று விசாரித்த நரேனின் குரல் ஒரு புறம் கொள்ளை ஆறுதலையும், மறுபுறம் இனி என்ன சொல்லி, எப்படிச் சமாளிப்பது என்ற திகிலையும் தந்தது.

அவசரமாய்க் காபியைக் குடித்துத் தெம்பேற்றிய புதியவன் பேச ஆரம்பித்தான் - ''நான் ராஜன்ங்க... இங்குள்ள சிநேக இல்லத்திற்கு வந்தேன் - முன்னமே நேர்த்தியைப் பழக்கம் - அதான் பார்த்துப் போலாம்னு...''

''பார்த்தாச்சுல்ல... கிளம்பறீங்களா?''

இவளுக்கு விலுக்கென்றது.

நரேன் சற்று முன் தன்னை அழைத்தது எப்படி? நேர்த்தி என்ற பெயரிட்டல்லவா? தன் நிஜப் பெயர் அவனுக்கு எப்படி... எப்போது தெரிய வந்தது...?

நம்ப முடியாமல் அவனை ஏறிட்டன இவளது விழிகள். அந்தப் பார்வையை உரிமையுடன் சந்தித்த அவன் விழிகள் சிரித்தன -

தைரியமூட்டிய அச்சிரிப்பில் இவளுக்குத் தெம்பேறியது.

''என்ன சார்... தேடி வந்த விருந்தாளியைக் கிளப்பறீங்க?''

''விருந்தாளி தேடி வந்த நோக்கம் என்னன்னு முதலில் சொல்லட்டும்.'' கைகட்டிச் சற்றுக் கறாராய் வந்த கேள்வியில் ராஜன் அயர்ந்து தெரிந்தான் -

''ஏதோ பிரியமாய், பொறுப்பாய்த் தேடி வந்ததுங்க - தவிர சிநேக இல்லத்திலும் கொஞ்சம் பிரச்னை - 'நேர்த்தி எங்கே'ன்னு பதட்டம். வயசுப் பொண்ணு இதோ இங்க இருக்கேன் - அங்கே போறேன்னு தாவா காட்டினா அது முறையா? அழகுப் பொண்ணுக்கு உலகத்துல நூறு ஆபத்து.''

''ஆமா - பொறுக்கிகள் ஆயிரக்கணக்கில் இருக்காங்களே.''

இந்தக் குத்தலில் ராஜனுக்குப் பொத்துக் கொண்டது -

''இல்லை -லதாங்கிறவங்கதான் இங்கே வர வேண்டியது... நீங்க அவங்களை எதிர்பார்க்க, இவளும் அதே பெயரில் இங்கே புகுந்து...''

''நீங்களும் குழம்பி என்னையும் குழப்பப் பார்க்கறீங்க...''

''இவ... இவங்க பேர் நேர்த்தி.''

''ஆமா - அப்படித்தானே கூப்பிட்டேன்.''

''ம்ம்... ஆனால்...''

''பண்ணைக்கு முன்னமே பேர் வச்சிட்டேன் - எனக்கு ரொம்ப ராசியான பெயராய் அமைஞ்சிடுச்சு...''

''ஆமா... இல்லை...'' ராஜன் திணறினான்.

''நாளைக் காலை நானும் எங்கம்மாவும் நேர்த்தியைச் சிநேக இல்லத்திற்குக் கூட்டிட்டு வர்ரோம் - பொறுப் பாளரிடம் பேசறோம்... திருப்திதானே?''

''பெரியம்மாட்ட...''

''காபி நல்லாயிருந்ததாய் நானே சொல்லிடறேன்!''

இவளுக்குள் சிரிப்பு முட்டியது. நரேனைக் கட்டிக் கொள்ளலாம் போன்றதொரு விறுவிறுப்பான குஷி!

ஆக, இவருக்கு விஷயம், விவரம் தெரிந்திருக்கிறது - கமலம்மாவிற்கு?



''லதாங்கியோடு வந்தேன்... அவங்க உள்ளேயிருக் காங்க...'' என்றபடி, வாசலை அடைத்தது போல மறித்து நின்ற நரேனைத் துழாவி உள்ளே போக முயற்சித்தான் ராஜன் -

''அவங்களும் கூடிய சீக்கிரம் கிளம்பிடுவாங்க -என் தம்பி வந்த பிறகு சரி பார்க்க வேண்டிய கணக்கது.''

''ஒரு வார்த்தை சொல்லிட்டு...''

''நானே சொல்லிடறேன் -கிளம்புங்க... தேடி வந்த துக்கு நன்றி.''

குரலின் கடுமை நெம்ப, ராஜன் வேறு வழியின்றிக் கிளம்பினான். உள்ளாகக் குதித்த சிரிப்பும், குழப்பக் கேள்விகளுமாய் இவள் மறுபடி நரேனைப் பார்த்தாள்.

''என்ன நேர்த்தி... அப்படிப் பார்க்கறே?''

''எம் பேர்... உங்களுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்குது...''

''இன்னைக்குத்தான் சுரேன் விவரமாய்ச் சொன்னான். ஆனாலும், நீ ஊதாரி லதாங்கி இல்லைங்கறதை யூகிக்க, பெரிய துப்பறியும் நிபுணத்துவம் தேவையில்லை - உன் எளிமையும் பிறருக்கான பரிவும் பேராசையுடைய லதாங்கியோடு ஒத்துப் போகலை. தவிர குட்டி டாக்டர் போல நடவடிக்கைகள் வேறு... அம்மா கூட யூகிச் சிருப்பாங்கன்னு நினைக்கிறேன்...'' கண் சிமிட்டினான்.

''ஐயோ... அப்ப நான்தான் பொய்க்காரி ஆயிட்டேன்...''

''ம்ம்... எல்லோருக்கும் பிடிச்ச பொய்க்காரி...'' என்றவனது சிரிப்பில் மெய்ம்மறந்து நின்றாள்!



16

கடந்த ஒரு வார நிகழ்வுகளை அங்கும் இங்குமாய்க் கிள்ளி அசை போட்டவன் வலது கரத்தை நீட்டினான் -

''வா, நேர்த்தி. அம்மாவைப் பார்த்துடலாம்.''

தயக்கமின்றி அவன் கையைப் பற்றி நடந்தவளுக்கு உலகையே ஜெயித்து விட்டது போலொரு துள்ளல்.

வீட்டிற்குப் பெரியவள் என்ன சொல்வார்களோ என்ற தயக்கத்தைக் கூட விரட்டிய பரவசம்.

வரவேற்பறையில் வெகு ஒயிலாய் அமர்ந்திருந்த லதாங்கியை இருவருமே பொருட்படுத்தும் நிலையில் இல்லை.

அந்த உல்லாசம் அமர்ந்திருந்தவளுக்குள் தீ மூட்டியது. ஆனாலும் ஏதும் செய்யக் கூடாத நிலை!

சாப்பாட்டு அறையின் நீண்ட ஜன்னலின் அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுச் சரிந்து உட்கார்ந்திருந்தார் கமலம் - முகத்தில் நிறையக் குழப்பம்...

தாயை அழைக்க முற்பட்டவனைச் சைகையால் அமர்த்தினாள் -

தான் மட்டுமாய் மூத்தவளை நெருங்கி, மெதுவாய்த் தரையில் மண்டியிட்டாள்...நரம்போடிய முதிய கையை ஒரு மலர் போலத் தன்னதில் ஏந்திக் கொண்டாள்...

''அம்மா... என்னை மன்னிச்சிடுங்க...''

கமலம்மாளின் விழிகள் இவள் மீது கருணையாய்ப் பதிந்தன -

''எதுக்குடா செல்லம்... என்னாச்சு..''

''நான்... எம் பேர் லதாங்கி இல்லை...''

''ம்ம்... எனக்கும் குழப்பம், சந்தேகமெல்லாம் தோணுச்சு... இப்படி ஒரு நல்ல பொண்ணா சுரேனை அப்படிச் சுழட்டியடிச்சதுன்னு. இப்ப... இங்கே வந்திருக்கிற பொண்ணு யாரு... லதாங்கின்னா... இவதான் சுரேன் பயலுடைய...''

''லதாங்கிம்மா... அவர்களுக்கிடையே ஏதோ சச்சரவு போல..''



''பிழைச்சாம் பிள்ளை!'' சற்று மகிழ்ந்த அன்னை பெருமூச்சும் விட்டார். ''ஆனா இந்தப் பொண்ணும் பாவம்தான்... அவனைத் தேடி வந்திருக்கா.''

இப்போது நரேனின் சீரான காலடிகள் இவர்களை நெருங்கின - ''அவங்க சமாச்சாரத்தைச் சுரேன் வந்த பிறகு அலசுவோம்மா... இப்ப இந்தப் பெண்ணின் பேர் என்னன்னு கேளுங்க.''

அவசரமாய்ப் பதிலோடு இடைபுகுந்தாள் இவள் -

''நேர்த்தி... அதுதான் இந்தப் பண்ணைக்குள் கொஞ்சல் ஆவலோடு நுழைஞ்சுட்டேன்... அந்நேரம் நீங்க என்னை லதான்னு நினைக்க, நானும் மறுத்துப் பேச முடியாத சூழ்நிலை... உங்களை ஏமாற்றணும்ங்ற நினைப்பே கிடையாதும்மா...''

''யோசிக்க, நாந்தான் அவசரப்பட்டேன்... இல்லையா? ஆனா அதுவும் நல்லதுக்குத்தான், செல்லம்... இனியும் எங்கேயும் போகக் கூடாது நீ... உங் குடும்பத்திடம் வந்து பேசறேன்... கெஞ்சறேன்...''

''அதுக்கு அவசியமில்லைம்மா,'' என்ற நேர்த்தி, தன் கடந்த காலத்தை விவரிக்க, எழுந்த கமலம்மாள் இளையவளையும் எழுப்பிக் கட்டிக் கொண்டார்...

''நேர்த்தி -அபூர்வமான பேர்... அதைவிட அதிசயமாய் உன்னை எங்களிடம் வந்து இணைச்சுட்டார் பாரு ஆண்டவர்! ஓஹோ... அதான் உன்னை நான் மருமகள்னு சொன்னதும் திகைச்சு மறுத்தியாக்கும்? இனி அந்தத் தொந்தரவெல்லாம் தர மாட்டேன்...உனக்கு எப்போ எப்பேர்ப்பட்ட பிள்ளை வேணும்னு சொல்லு... அதே போலப் பார்த்துடலாம்...''

இளையவள் சற்றே திகைக்க, நரேன் பேசினான்.

''ஏம்மா, இங்கே இருக்கும் உங்க பையன்களில் மூத்தவனை முடித்தால் என்ன...?''

தாயின் கண்களில் கிளம்பிய 'அப்படி வா வழிக்கு' குறும்பில் நேர்த்தியின் முகம் சிவந்து போனது.

நெகிழ்வான இந் நேரத்தில் இப்படி அபத்தமாய்ப் பேசலாமா என்று குறுகினாலும் உள்ளே இனமறியாத ஆனந்தக் குறுகுறுப்பு...!

★ ★ ★

லதாங்கியை அதிக நேரம் தனியே உட்கார விடுவது மரியாதையாய் இராது என்பதால், மேலும் பழரசம், பிஸ்கட்டுகளைப் பரிமாறிய நேர்த்தி உடன் அமர்ந் திருந்தது அவஸ்தையான அனுபவம்தான் - இவளை நிமிர்ந்தும் பாராமல் கையோடு எடுத்து வந்திருந்த ஒரு வெளிநாட்டு நாகரீகப் பத்திரிகையைப் புரட்டி அதில் பொதிந்திருந்தாள் லதா - அந்தி மயங்கலில் வெளி வாசலில் வாகன உறுமல் கேட்டதும் பத்திரிகையை மூடிவிட்டுப் பரபரத்தாள் - பட்டாம்பூச்சி போலக் கைகளை அகல விரித்தபடி வரவேற்க விரைந்தவளின் முகம் கணப் பொழுதில் சுண்டி வெளிறியது.

ஏனெனில் ஆர்ப்பாட்டமாய் வந்திறங்கியது, அவளது 'ஷிவ்'! கரடி போன்ற ரோம உடலும் இடைஇடையே டாலடிக்கும் தங்க நகைகளுமாய்ச் சிவநாதன்!

அவனைத் தொடர்ந்து சாவகாசமாய்ச் சுரேன்... இவளது வெளிறலை, வெலவெலப்பைச் சட்டை பண்ணாமல் சிரித்தான் சிவா -

''என்ன லதாங்கி... ஆக்ட் கொடுக்கறே? என்னை இப்ப, இங்க நிஜமாவே எதிர்பார்க்கலைல? அதான் சொன்னேனே - வசூலிக்காம விட மாட்டேன்னு... நம்ப பேட்டை வசூல் ராஜா எட்டாப்பு நாமதான்!''

''சுரேன்... உங்களைப் பார்க்க ஓடி வந்தேன்... ஆனா இங்கே இவன் எப்படி?''

மற்றவர்களின் பார்வையிலும் அதே கேள்வியைப் படித்த சுரேன் விளக்கினான் -



''மணல் விஷயமாய்ப் பார்க்கப் போன நண்பன் போலீஸ் இன்ஸ்பெக்டர், அண்ணா - நாங்க எங்க விஷயமாய்ப் பேச, இவர் அங்கே தன்னோடு வந்த தன் காதலியைக் காணலைன்ற புகாரோடு வந்தார் - ஒருவேளை அந்தப் பெண் நேர்த்தி பண்ணைக்குப் போயிருக்கலாமோன்னு நம்ப இடத்தின் பேர் அடிபடவே, எல்லாருமாய் நேரிலேயே பார்த்திடலாம்னு இங்க வந்துட்டோம்.''

''நன்றி ஸார்... இப்பதான் எம் மனசுக்கு நிம்மதி யாச்சு. கூட்டிட்டு வந்த பொண்ணை விட்டுட்டு நான் தனியாச் சென்னை திரும்பினாப் பெரிய வம்பாயிடுமே... யாருக்கு எப்படிப் பதிலு சொல்றது... கடவுளாப் பாத்து தான் இளைய பண்ணைக்காரரை ஸ்டேஷனுக்கு அனுப்பி... இனி லதாவோடு நிம்மதியாய் ஊரு திரும்பலாம்...''

மெய்யான அச்சத்துடன் லதா கிறீச்சிட்டாள்.

''ஐயோ... இன்ஸ்பெக்டர்... என்னை இவனோட அனுப்பிறாதீங்க...''

''நீங்க கொடைக்கானல் வந்தது, தங்கினது இவரோடு தானே?'' விரைப்பாகக் கேள்வி வந்தது.

''வந்தேன் ஸார்... ஆனா...'' அவள் மேலும் பேசக் கூடாமல் உதடுகளோடு உடலுமே நடுங்கியது.

'என்னா சார் குறை வச்சேன் - ஏ.ஸி. பெர்த்து - ஏ கிளாஸ் ஹோட்டலு. நாளொன்றுக்குத் தீனிக்கு மட்டுமே ஆயிரத்தைத் தாண்டிடும் பில்லு... நான் இத்தனை செலவழிக்கும் போது சும்மா கம்முனு அனுபவிச்சுட்டு, இப்ப கம்பியை நீட்டப் பாக்குது சார்.''

சிவா புலம்ப, எல்லாரும் சுரேனின் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தனர் - அத்தனை சிவந்து, சிறுத்துப் பரிதாபமாய் மாறியிருந்தது அது.

நல்லவேளை, இந்தக் கூத்தையெல்லாம் காண, கேட்க, தன் தாய் அங்கில்லை என்பதே நரேனின் ஆறுதல்.

சுரேனின் முகப் போக்கை, அதில் தெறித்த கசப்பைக் கண்ட லதாவுக்கு இனித் தனக்கு அங்கு இடமிராது என்பது தெளிவானது.

ஆனாலும் கெஞ்சினாள் -

''தப்புதான் சுரேன்... என்னை... என்னை மன்னிச்சிடுங்க... கடைசியாய் எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செய்ய முடியுமா? இந்த ஷிவ் கையில நான் நாசப்படாமல் என்னைச் சென்னைக்கு அனுப்பிடணும்...ப்ளீஸ்...''

''அது என் பொறுப்பு!'' என்று முன் வந்த நரேனை, இளையவன் நன்றியுடன் நோக்கினான் -

★ ★ ★

ஆகாய நீலப் பட்டில், ஜரிகைத் துளிகள் தெறித்த புடவையில் அற்புதமாயிருந்தாள் நேர்த்தி.

''இதையும்தான் நினைச்சேன்டா, ராஜாத்தி...''

''எதை அத்தை?''

''சுரேனைக் கட்டிக்கப் போறதாய் வந்தவ, சதா மூத்தவனையே முழுங்குறாப்பல பார்க்கற - அவனும் இவளோடவே திரியறானேன்னு...''

''ஐயோ... அப்படி யெல்லாம்...''

தன் நாடகத்தை எல்லாம் மூத்தவரின் அனுபவம் சரியாகவே மோப்பம் பிடித்துவிட்டதில் கூசி மறுத்தாள் -

''தப்பில்லை... தவறில்லை. விடும்மா... கடவுள் யாருக்கு யார்னு முடிச்சுப் போட்டிருக்க, அந்த ஜோடியை மனுஷன் மாற்றக் கூடுமா? சுரேன் பயல்தான், பாவம்...''

''சீக்கிரமே அவருக்கும் ஒரு நல்ல பெண்ணாய்ப் பார்த்துடலாம், அத்தை.''

''எனக்கான பெண்ணையே நான் இன்னும் நல்லாப் பார்க்கலையேம்மா...'' வந்த நரேன் கருத்தாய்க் குறைப் பட்டான்!



''இப்படி யெல்லாமா பெரியவங்க, பெற்றவங்க முன்னே பேசறது?''

''அப்ப தள்ளிட்டு... அதாவது தள்ளிப் போயிடட்டு மாம்மா?''

''மூச்... கல்யாணமாகும் வரை நேர்த்திக் குட்டியை நீ தனியே பார்க்க, பேசவெல்லாம் முடியாது.''

''அப்ப நாளைக் காலையே கல்யாணத்தை நடத்திடுங்க, தாயே...''

கைக்கூப்பியவனை வெட்கத்துடன் ரசித்திருந்தாள் நேர்த்தி.

சற்று நேரத்திற்கெல்லாம் வாய்த்த தனிமையில் சீண்டினாள் -

''பாவமாய் இங்கே வந்தவளைக் 'கிளம்பு - உடனே கிளம்பு!'ன்னு விரட்டியவரா இப்போது உடனே கல்யாணத்தை முடிங்கன்னு அவசரப்படறது?''

''நிஜத்தைச் சொல்லிடறேனே... தம்பிக்காக வந்ததாய்ச் சொன்னவளைக் கண்டதும், என் மனசில் அசாதாரணச் சலனம். உன் எளிமை, உழைப்பு, பிரியம்... குட்டியிட்ட நாயிடம் கூடக் காட்டிய கரிசனை எல்லாமாய் என்னை அலைக்கழிக்க... அதை முளையிலேயே வெட்டி விடணும்னுதான் அந்த அவசரம்... ஆனா நீ கிளம்பாமல் என்னையே கிளப்பிட்ட நேர்த்தி...உன் பெயர்... அது ஒரு அதிசயமான ஒற்றுமைதான் இல்லை... நேர்த்தியாய் விளைவித்து நியாயமாய் வியாபாரம் செய்தவனுக்கு இது கடவுள் அனுப்பிய அதிசயமான பரிசு. வறண்டு கிடந்த மனதைச் சலனப்படுத்திய அதிசய ராகம்...''

இவளது விரல்களின் நீளத்தை ஆர்வமாய் ஆராய்ந்தவன் - ''அனுபவஸ்தர்கள் சொல்வதெல்லாம் ரொம்ப சரிதான் -

''உணர்ச்சிகள் ஆரம்பித்து வைக்க, அறிவு வந்து முடித்து வைப்பதுதான் காதல்!' சொன்னது பொய்யில்லையே...''

''அத்தைக்கும் திருப்திங்கறதில் எனக்குச் சந்தோஷம் - இல்லைன்னால் 'சிநேக இல்ல'த்திற்கு ஒரு லட்சம் நன்கொடை தந்திருப்பாங்களா... ஆனா சுரேன்தான்...''

''நல்லவேளை! அவனும் உன்னைக் காதலிக்க ஆரம்பிக்கலை! என்ன முறைக்கறே, செல்லம்? அதைத்தான் அவன் பார்வையே தெரிவிச்சிடுச்சே - உன்னைக் கண்டு பயல் வழியலை...''

''ஏன், நீங்களும்தான் வழியலை...'' குற்றம் சாட்டினாள் -

''வழியலைதான். விரைப்புப் போலக் காட்டிச் சமாளிச்சேன்! ஆனால் உன் குணம், மனம் எல்லாம் புரியப் புரிய, நான் அம்பேல்... கட்டினால் இவளைத்தான்னு மனதுள் சங்கல்பமே ஏற்பட்டுப் போச்சு...''

''எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கான்னு தெரியாமலேயேவா?''

சற்று ஆணவத் தோரணையில் மோவாய் உயர்த்திக் கேட்டாள்.

''நீ முதலில் விட்ட காதல் பார்வைதானே முதன் முதலில் என்னைத் தடுமாறவே வைத்தது. சதா என்னை முறைக்கிற சாக்கில் ஆசை ஆசையாய்ப் பார்த்தியே...''

''பொய்... புரட்டு..'' தன் கையை விடுவிக்க முயன்று சிணுங்கியவளை நகைப்புடன் இழுத்து அணைத்தான்.

அந்த மெய்யான இன்பத்தில் இருவரும் மெய்ம் மறந்தனர்.